# அவ்வையார் காட்டிய

170
ஔவை
SL/PR

தம்பி சிறீக்கந்தராசா

# அவ்வையார் காட்டிய வழி

செல்லத்தம்பி சிறீக்கந்தராசா B.Sc., LL.M

**Tamil Music Centre**

**தமிழ் இசை மன்றம்**

66, உவெஸ்றோ காடின்ஸ்,
செவின் கிங்ஸ், இல்போட்,
எசெக்ஸ் - IG3 9NF, இங்கிலாந்து

அவ்வையார் காட்டிய வழி
முதற் பதிப்பு : மே, 2003

விலை : ரூபா 75/-

AVVAIYAAR KAATTIYA VAZHI
by SELLATHAMBY SRISKANDARAJAH B.Sc., LL.M.
First Edition : May, 2003

*அட்டை வடிவமைப்பு : **ரோஹன் பின்னி***

Laser Typeset : **Thanga.Kamaraj** ✆ 044-2433 2272 Cell : 94441 32738
Printed at : **3D Vision**, Chennai ✆ 044-2823 7241

# அவ்வையார் காட்டிய வழி

## உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| | மதிப்புரை | 5 |
| | அணிந்துரை | 8 |
| | என்னுரை | 28 |
| 1. | வெளுத்தது எல்லாம் பால் அல்ல | 33 |
| 2. | வெறும் பானை பொங்காது | 36 |
| 3. | அளவான வாழ்வே அழகான வாழ்வு | 40 |
| 4. | மாறாத பெரியவர்கள் | 44 |
| 5. | எல்லார்க்கும் ஒவ்வொன்று எளிது | 47 |
| 6. | உள்ளத்தால் உயர்ந்தவர்கள் | 51 |
| 7. | பேரின்பம் என்றால் என்ன? | 53 |
| 8. | வாலிபம் போகாத வயோதிபம் | 57 |
| 9. | ஆங்காலம் ஆகும் போங்காலம் போகும் | 60 |
| 10. | உண்பது நாழி உடுப்பது நாலு முழம் | 64 |
| 11. | அவிழ்ச் சுவையா? தமிழ்ச் சுவையா? | 67 |
| 12. | உலக்கை வேண்டாம் ஊசியே போதும் | 69 |
| 13. | வேளாளன் பாராளலாம் | 73 |
| 14. | தடம் மாறாத தறுகணர் | 75 |

15. திருமணப் பொருத்தம் 78

16. நாய்க்கு நடுக்கடலிலும் 81

17. அங்கனமா? அங்ஙனமா? 85

18. குமர் இருந்து குரங்காக வேண்டா 90

19. உழைத்து வாழ வேண்டும் 93

20. வங்கியில் போடும் பணம் 96

21. சாதிகள் எத்தனை? 99

22. பொய்ச்சாட்சி 102

23. வன்முறையும் வேண்டுவதே! 105

24. உரிமையும் கடமையும் 109

25. கோபம் வேண்டாம் 115

26. தெரிந்ததைச் செவ்வையாகச் செய்வோம் 118

27. அன்பும் சிவமும் ஒன்று 122

28. திருந்த மாட்டோமா? 127

29. உத்தமரும் அதமரும் 131

30. இன்றினை இனிது வாழ்வோம் 135

31. பாடல்களின் ஆங்கில மொழிபெயர்ப்பு 139

தமிழகத்தின் புகழ்மிகு சொல்லின் செல்வர்
**சுகி சிவம்** அவர்கள் வழங்கிய

## மதிப்புரை

அவ்வையாரைப் பெரிய அறிவாளி என்று நிறுவுவது இந்நூலின் நோக்கம் அன்று. அப்படி நிறுவி யாருக்கு என்ன ஆகப்போகிறது?

அவ்வைப் பாடல்களை வைத்துக்கொண்டு தன்னைப் பெரிய அறிவாளியாக நிறுவும் இலக்கிய அகங்காரமும் இந்நூலில் இல்லை! சிதறிக் கிடக்கும் தமிழ் மனங்கட்கு, நம்பிக்கை, தெளிவு, பரம்பரைப் பண்புகள் மீது பாசம்கலந்த ஈர்ப்பு, ஆகியவற்றை ஊட்டுவதே இந்த நூலாசிரியரின் இதய நாதம்.

தன்னைத் தொலைத்துவிட்டுத் தேடும் தமிழ்ச் சாதிக்கு, இன்றைய அவலங்களுக்கு, அவ்வையின் மொழி, பாட்டி(டு) வைத்தியம் என்கிற நோக்கே, கட்டுரைத் தொடர் முழுவதும் காட்டப்படுகிறது. விட்டு விட்டு எழுதிய பத்திரிகைத் தொடர் எனினும், நோக்கத்தை விட்டு விடாமல் எழுதிய தொடர் என்பதைத் தொடர்ச்சியைப் படிக்கப் படிக்க உணரலாம். இயல்பிலேயே இளநலமும், மிடுக்கான தோற்றமும் உடையவர் திரு. செல்லத்தம்பி சிறீக்கந்தராசா. அந்த மிடுக்கு எழுத்திலும் வெளிப்படுவது மகிழ்ச்சிதானே!

மேற்கு நாடுகள் முழுவதும் அள்ளிக் கொட்டப்பட்ட ஈழத் தமிழ் இனம், உழைக்கவும் பிழைக்கவும், ஏன் செழிக்கவும்

திட்டமிட்டுப் பொருள் ஈட்டுகிறது. ஆனால், பொருள் வெறியால் கல்வி நாட்டம், கரைந்துவிடுமோ என்று கரைகிறார் ஆசிரியர். காட்டுமரம் மரம் அல்ல, பாமரம் என்னும் அறியாமை பாவ மரம். நீட்டோலை வாசியா நெடுமரத்தைப் பாட்டோலை எழுதிப் படம் பிடித்த பாட்டியின் பாட்டைச் சுட்டிக் காட்டிப் படியுங்கள் என்று இடிக்கிறார், சரிதானே!

''பேரின்பம் என்றால் என்ன?'' என்ற கட்டுரையில் ஈதல் அறம் என்ற பாடலுக்கு விளக்கம் எழுத வந்தவர், ஒரு கற்பனை செய்கிறார். இன்றைய இலண்டன் தமிழரில் சிலர் அன்றைய அவ்வையைச் சந்திக்கின்றனர். அந்தக் குழு அயோக்கியர் கூட்டம். அதை வர்ணிக்கும்போது, எழுதுகோலில் அமிலத்தை நிரப்பின மாதிரி எழுதுகிறார் ஆசிரியர்.

எந்த மண்ணில் வாழுகிறோமோ அந்த மண்ணுக்கு விசுவாசமாக இருக்க வேண்டியது மனிதப் பண்பு. அதை விளக்கிய இடம் அழகு. 'பிச்சைக்கு மூத்த குடிவாழ்க்கை பேசுங்கால்' என்ற பாடல் விளக்கத்தில் ''உழைக்க வாய்ப்பிருந்தும் உருக்குலையா உடம்பிருந்தும், வேலைக்குப் போகாமலும் வேலையைத் தேட முயலாமலும், அரசாங்கத்தின் சமூக ஏமக் காப்புத் திணைக்களத்தில் இல்லாத பொல்லாத பொய்களைச் சொல்லி வருமான உதவிப்படி பெறும் நம்மவர்கள்'' என்று எழுதும் நெஞ்சுரம் மகாகவி பாரதியை எனக்கு நினைவூட்டுகிறது.

பிரயோக இலக்கியம் என்கிற யுக்தியைக் கொண்டு பழைய உரைகளை மறுத்து 'இட்டார் பெரியோர்' என்கிற



வரிக்கு நீதிநெறி வழுவா உயர் வாழ்வில் தம்மை இட்டார் என்று பொருள் கொள்ளும் முறை யோசிக்க வைக்கிறது.

எதிரிகளிடம் சிக்கும்போது, பணிந்து தாழ விரும்பாத உயிர்விடும் ஈழத்தமிழர் மறவர் பண்பைக் 'கற்றூண் பிளந்து இறுவது' என்கிறதாகப் படம்பிடிப்பது பாராட்டுக்குரியது.

புதுமை பேசினாலும் விதியோடு சமாதானமாகும் உயிர் வளர்ச்சி பல இடங்களில் காணப்படுகிறது!

மொத்தத்தில் தமிழன் படித்துப் - பின்பற்ற வேண்டிய பாடநூல்; பாடநூல் என்றாலும் சுவையான தமிழில் தந்தது தமிழ் செய்த தவம். ஆசிரியர் பற்பல நூற்கள் இப்படி எழுதிக் குவிக்க இறைவன் அருளவேண்டும்.

**சுகி. சிவம்**
சென்னை,
தமிழ்நாடு

சித்தாந்தப் புலவன் கலாநிதி வித்துவான்
**க.ந.வேலன்** அவர்கள் வழங்கிய

# அணிந்துரை

**ஆ**தி கால மனிதன் தன்னைப்பற்றிச் சிந்தித்தபோது கடவுள் நம்பிக்கையும் பக்தியும் கலந்த சமயம் தோன்றியது.

அதே மனிதனின் பட்டறிவு விரிவடைந்து சமுதாயப் பார்வை தோன்றியபோது, இலக்கியம் அரும்பியது.

உலகின் மூத்த குடிகளுள் ஒன்றாகிய தமிழ்க்குடி, சமய உணர்விலும் இலக்கிய உணர்விலும், பழமையும் புதுமையும் வாய்ந்த பல சிந்தனைகளை உலகிற்குத் தந்துள்ளது. சமயச் சிந்தனை, மனித இனத்தின் ஆன்ம முன்னேற்றத்திற்கும், இலக்கியச் சிந்தனை, மனிதன் இவ்வுலகில் வாழ்வாங்கு வாழ்ந்து வானுலகு புகுதற்குரிய வாழ்வியலைக் காட்டுவதற்கும் அமைக்கப்பட்டன.

இக இயல் பற்றிய இலக்கியச் சிந்தனை, பர இயல் பற்றிய சமயச் சிந்தனைக்கு இட்டுச் செல்வதாக அமைகின்றது. தமிழரது சமயச் சிந்தனை ஆன்மா, உலகு, என்பனவற்றின் இயக்கத்திற்குக் காரணமான மூலதத்துவம் ஆகியன பற்றிய வீட்டியல் பற்றி மிக ஆழமாகச் சிந்தித்துள்ளது.

நமது இலக்கியச் சிந்தனைகள் வெறுமனே அழகியற் கலையுணர்வோடு படைக்கப்பட்டவையன்று; மனிதனின் நேரிய இன்பவாழ்வுக்குத் தேவையான அத்தனையையும் ஆராய்ந்துள்ளன.



சமயச் சிந்தனைகளை வீடு எனவும், உலகியற் சிந்தனைகளை அறம், பொருள், இன்பம் எனவும் வகுத்துக் கூறியுள்ளனர். இவற்றுள் வீடு பற்றிய சிந்தனையும், அறம் பற்றிய சிந்தனையும் வளர்ச்சியடைந்த அளவுக்குப் பொருள், இன்பம் என்பன பற்றிய சிந்தனைகள் வளர்ச்சியடைய வில்லை; ''பஞ்சபூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும் கலைகள்'' வளரவில்லை. அதனால் தமிழினம் ''மெல்லச் சாகும்'' எனக் கருதப்பட்டது.

இந்த நிலைக்கு வரலாற்றுக் காரணங்கள் உண்டு. அதனை விடுவோம். சங்க இலக்கியங்களான பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும், சங்கம் மருவிய பதினெண்கீழ்க்கணக்கும் ஆகிய நூல்களுள், பதினெண்கீழ்க் கணக்கு நூல்கள் அறநூல்களாகக் கணிக்கப்படுகின்றன. ஏராளமான அறநூற் கருத்துக்கள் வற்புத்தப்பட்டமையால், அவை எழுந்த காலத்தை அறநூற்காலம் என வரலாறு கூறுகின்றது. அறம் வற்புறுத்தப் பட்டமையால், நாட்டில் அறம் குன்றிவிட்டதென்பதும் அதற்குக் காரணம் என்ன என்பதும் அறத்தை வற்புறுத்தியோர் யாவர் என்பதும் ஆராயப்படவேண்டும்.

தமிழ் இலக்கியங்கள், அவை அன்று தோன்றியவை யாயினும், இன்று தோன்றிக்கொண்டிருப்பவையாயினும், எல்லாம் ஒரு வகையில் அறம் போதிப்பதையே நோக்கமாகக் கொண்டிருப்பதைக் காணலாம். வள்ளுவம் அற நூலாகக் கணிக்கப்படுகின்றது; அதற்குப் பேருரை போன்று விளங்கும் கம்ப இராமாயணமென்னும் மாபெரும் இலக்கியமும், வள்ளுவ மாகிய அறநூலையே பாவிகமாகக் கொண்டு இயங்குகின்றது.

அல்லவை செய்தார்க்கு அறம் கூற்றாகும் முதலிய அறங்களைக் கூறுவதே தம் நூலின் பாவிகமாகும் எனச் சிலப்பதிகார ஆசிரியர் கூறுகின்றார். இன்று தோன்றிவரும் நாவல்களும், சிறுகதைகளும், புதுக்கவிதைகளும் கூட அறத்தையே மையமாகக் கொண்டு, இலக்கிய வடிவத்தில் கதை கூறும் உத்தியில் பழையன கழித்துப் புதியன புகுத்தி இயங்குவதைக் காணலாம்.

''நெஞ்சு பொறுக்குதில்லையே இந்த நிலைகெட்ட மனிதரை நினைந்துவிட்டால்'' என்னும் சமுதாய ஆதங்கமே, சிறந்த இலக்கியங்கள் தோன்றக் காரணமாகின்றது. வெறுமனே சமுதாயத்தைச் சித்தரிப்பதனால் மட்டும் ஒரு நூல் சிறந்த இலக்கியமாகிவிடாது. அதற்கு ஓர் உயரிய நோக்கம் வேண்டும். சமுதாயச் சீர்கேடுகளைப் போக்கி அதனைச் சிறப்படைய வைப்பதே சிறந்த இலக்கியமாகும்.

சமுதாயத்தைச் சித்தரித்த புலவர்களை நோக்கி ''வாருங்கள்! சமுதாயத்தை மாற்றி அமைப்போம்'' எனக் காள்மாக்ஸ் அழைத்தார். இதனையே பாரதி, ''தனி ஒருவனுக்கு உணவில்லை எனில் சகத்தினை அழித்திடுவோம்; இனி ஒரு விதிசெய்வோம்; அதனை எந்நாளும் காப்போம்'' என்றான்.

இதனையே 2000 ஆண்டுகளுக்குமுன் வாழ்ந்த வள்ளுவர், ''இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டிற் பரந்து கெடுக இவ்வுலகியற் றியான்'' எனப் பாடினார்.

எத்தனையோ வித்தைகளைப் படைத்த நான்முகன், இவ்வுலகில் ஒருவன், இரந்தும் உயிர் வாழவேண்டுமெனப் படைத்திருப்பானா? இல்லை, இல்லை, இருக்கவே இருக்காது. அது பிரமன் தலையெழுத்தல்ல; சமுதாயம் - அரசியல், ஏற்படுத்திய ஊழல்.



இந்த இலங்கை மாநகரில் ''களிக்கின்றாரல்லால், கவல்கின்றார் ஒருவரைக் காணேன்'' என்று அனுமன் வாக்காகக் கம்பன் கூறியதைப்போல, இந்த இலண்டன் மாநகரில் ஆடுநர், பாடுநராகிய ஆடவர் அரிவையரல்லால் வாடுநர் வருந்தினரான வயோதிபர் ஒருவரைக் காணேன் என்று பாடுமளவிற்கு, இந்நாட்டின் அரசியல், நாட்டினைச் சிறப்பாக ஆண்டுவருகின்றது.

கடந்த 2000 ஆண்டுகளுக்கு மேலாகச் சிறந்த மனித வாழ்வை அமைப்பதற்காக உயர்ந்த தத்துவ, சமய, இலக்கிய சமுதாயச் சிந்தனைகள் தோன்றியுள்ளன. மேற்கணக்கு நூல்களாகிய பத்துப்பாட்டு, எட்டுத்தொகை என்பன சமுதாயம் இப்படித்தான் இருந்தது என வருணிக்க, கீழ்க்கணக்கு நூல்களாகிய திருக்குறள், நாலடியார் போன்றன, சமுதாயம் இப்படித்தான் இருக்கவேண்டுமென அறப்படுத்தின. இது, இவ்விரண்டுக்குமுள்ள வேறுபாடாகும்.

இருப்பினும், இந்தத் தமிழர் சமுதாயம் ஏன் இன்னும் மாற்றமடையவில்லை? தத்துவ, சமய அறநூற்சிந்தனைகளெல்லாம் வாழ்வைச் சித்தரித்தன; அவை அறிவுரை கூறினவேயன்றி, அவற்றை உணர்ந்து வாழ்வை மாற்றியமைக்க முன்வரவில்லை; இனி ஒருவழி செய்து, தனிமனிதனுக்கு உணவில்லா நிலையை ஒழிக்க ஒருவரும் முன்வரவில்லை. காந்தி, வினோபா பாவே போன்றவர்கள்

வடக்கேயும், பெரியார், அண்ணா போன்றவர்கள் தெற்கேயும் முயன்றனர்; முழு வெற்றி பெறவில்லை; வழிவந்தோர் வழிதப்பித் தடம் மாறினர். ஆனால் உலகத் தமிழினத்தின் ஒப்பற்ற மகாவீரத்தலைவன் பிரபாகரன், இனி ஒருவிதி செய்வான்; தனி ஒரு மனிதனுக்கு உணவில்லா நிலையை அழித்திடுவான் என்னும் நம்பிக்கை தமிழர் மத்தியில் தோன்றியுள்ளது. அறநூல்களோடு, செவியறிவுறூஉ எனப் புலவர்கள் அரசர்களின் செவிபட அறமுரைத்துள்ளனர்; பாவம்! ஏழைப்புலவன், பரிசில்வாழ்க்கையன், அதற்குமேல் என்ன செய்வான்! இந்து மதத்தினர் மாத்திரமன்றிச் சமண, பௌத்த, இஸ்லாமிய, கிறிஸ்துவப் புலவர்களும், தமிழில் அறநூல்களை அளித்துள்ளனர். இத்தனை அறநூல்களும் தமிழினத்துக்குச் செவிடன் காதில் ஊதிய சங்காயின.

''அறத்துதினூங்கு ஆக்கமும் இல்லை அதனை மறத்தலினூங்கில்லைக் கேடு'' என்னும் குறள் விளக்கமாகப் பல காப்பியங்கள், இதிகாசங்கள், புராணங்கள் தோன்றின. அறம் வெல்லும், மறம் தோற்கும் என்னும் கோட்பாடு வற்புறுத்தப்பட்டது. அறத்திற்கும் மறத்திற்குமிடையில் நடைபெறும் போராட்டமே உலக இயக்கம். ''அடுவதும் தொலைவதும் புதுவதன்று பண்டுமிவ்வுலக இயற்கை'' என்றான் ஒரு புற நானூற்றுப் புலவன். இதனையே, தேவ அசுரப் போராட்டமாகப் பண்டைய புராண இலக்கியங்கள் கூறுகின்றன. தமிழிலக்கியத்திலும் இந்திய இலக்கியங்களிலும் தோன்றியுள்ள அறநூல்கள் போன்ற நூல்கள் வேறு மொழிகளில் தோன்றியுள்ளனவா? இல்லை; இருந்துமென்? இது எதனைக் காட்டுகின்றது? அறம் தவறி, ஊழல் மலிந்து,



நாம் வாழ்ந்துவரும் வாழ்வையே காட்டுகிறது. அறந்தவறிய மக்கள், தம் வறுமை போக்க, சிறுவர்களின் கண் முதலிய உறுப்புக்களைப் பொருளுக்காகத் தோண்டி எடுத்து விற்றும், பெண்குழந்தைகள் பெரும்பிணி எனக் கருதிப் பிறந்தவுடனேயே அவர்களை அழித்தும், மனைவியை அடகுவைத்தும் வாழ்வு நடத்தும் அறந்தவறிய வாழ்வுக்குத் தள்ளப்பட்டுள்ளனர். வறுமையின் கொடூரத்தைத் தமிழ்ப் புலவர்களைப்போல வருணித்த புலவர் உலகில் யாருளர்?

ஆடு நனிமறந்த கோடுயர் அடுப்பில் ஆம்பல் பூத்துக் கிடக்கிறது. (ஆடு - அடுதல் - சமைத்தல். ஆம்பல் - காளான்.) ''மனைவியின் இல்லிதூர்ந்த பொல்லா வறுமுலையைச் சுவைத்த குழந்தை பால் காணாது தாய்முகம் நோக்க, மனைவி என்முகம் நோக்க, நானும் உன்முகம் நோக்கிவந்தனன்'' என ஒரு புலவர் தன் வறுமையைக் கவிதை செய்தார். (இல்லி - முலைக்கண்.) இன்னும், ''நாங்கள் நிர்வாணத்தை விற்பனை செய்கிறோம் ஆடைகள் வாங்குவதற்காக'' எனக் கவிஞர்கள் புதுக்கவிதை செய்கிறார்கள். இவற்றிலிருந்து நாம் தெரிந்து கொள்ள வேண்டிய உண்மை யாது? ஆயிரக்கணக்கான அற உபதேசங்களால் மாத்திரம் அறம் விளைந்துவிடாது. அப்படியானால் வழி என்ன? நாடுவிட்டு நாடு சென்று அல்லற்பட்டு ஆற்றாது அழுத கண்ணகி, அரண்மனையிலேயே அரசனைத் தட்டிக்கேட்டது போலத் தட்டிக்கேட்க இன்று யாரும் முன்வரவில்லை. அறங்கூறவையம், ஐம் பெருங்குழு, எண்பேராயம் போன்ற அமைப்புக்கள் அன்று நாட்டை அறவழிப்படுத்தின. இன்று அவை அத்தனையும் ஆற்றிய பணிகளை வலிய கரங்கொண்டு சட்டமே புரிகின்றது.

அறந்தவறியவர்களைப் பலர் முன்னிலையில் சிரச்சேதம் செய்தும், கசையடி கொடுத்தும், உறுப்புக்களைச் சிதைத்தும், கல்லால் எறிந்து கொன்றும் வழிப்படுத்தச் சட்டங்கள் உள்ளன. தொழிலாளியின் வெயர்வை காய்வதற்கு முன்பே அவனின் கூலியைக் கொடுத்துவிடு என அறம் புகன்ற திருக்குரானே, இத்தகைய கொடூர தண்டனைகளையும் ஆதரிக்கின்றது. அப்படியிருந்தும், அந்த நாடுகளில் அநீதிகள் ஒழிந்துவிட்டனவா? இவற்றைவிட இனி என்ன கொடூரத் தண்டனைகளை வழங்குவது? அறநூல்கள் தோற்றதுபோலச் சட்டங்களும் தோற்றுப் போயின. உலகை முன்னேற்ற அவதரித்த அவதார புருஷர்களின் அநியாய மரணங்களைப் பாருங்கள்! சோக்கிரட்டீசை நஞ்சூட்டிக் கொன்றார்கள்; யேசுபெருமானைச் சித்திரவதை செய்து அழித்தார்கள்; நபியைக் கல்லால் எறிந்து துரத்தினார்கள். இவை மேனாடுகளிலும் மத்திய கிழக்கு நாடுகளிலும் நடந்தவை. ஆனால், வைதீகத்துக் கெதிரான போராட்டம் நடத்திய போதி மாதவனை, பாதுகாப்பற்ற புத்தரைக் கொல்வது ஒரு பொருட்டல்ல; ஆனால் புத்தர் 80 ஆண்டுகளுக்கு மேல் வாழ்ந்து இயற்கை மரணம் எய்தினார். இராமபிரானையே எதிர்த்து வாதிட்ட ஜபாலி என்னும் நிருச்சிரவாதி நீண்டகாலம் வாழ்ந்தான். நம் காலத்துப் பெரியார் ஈ.வே.ரா. ''கடவுளை நம்புகிறவன் காட்டுமிராண்டி; பிள்ளையார் சிலைகளை உடை; இராமன் சிலைகளைச் செருப்பால் அடி'' என ஊர்வலம் நடத்திக் கிளர்ச்சிகள் பல செய்து பலரைப் புண்படுத்திய போதும், அந்தப் பெரியவரும் 80 ஆண்டுகளுக்கு மேலாக நிறைவாழ்வு வாழ்ந்து இயற்கை மரணம் எய்தினார். இவற்றிற்குக் காரணம் என்ன? பாரதம், இராமாயணம் போன்ற



நூல்களால் பண்படுத்தப்பட்ட நம் சமுதாயம்போல, மேலை நாடுகள் பண்படுத்தப்படவில்லை. மனித நாகரிகத்தின் அடித்தளமே இந்தப் பண்பாடுதான்; அது தரும் சகிப்புத் தன்மைதான்; இதனையே ''பண்புடையார்ப்பட்டுண்டு உலகம்'' என்றார் வள்ளுவர். அந்த ஞானியர்களை, மேலை நாட்டினால் சகித்துக்கொள்ள முடியவில்லை. பல்லாயிரக் கணக்கான புத்த பிக்குகள் அறம் போதித்த போதிலும், சிங்களப்பவுத்த இனம் இன்னும் பண்படவில்லை. இலங்கை வாழ் பிக்குகளோ, கொலையை ஆதரித்தும், கொலை செய்தும், போர் முனைக்குச் சென்று ஆசிவழங்கியும் வருகின்றனர். எனவே அற உபதேசங்களாலும், மூர்க்கமான சட்டங்களாலும் சமுதாயத்தைச் சீராக்கிவிடமுடியாது. ஆனால் அவை யிரண்டும் அடியோடு பயனற்றவை என்பதும் பொருளல்ல. ''வெறும் வீணன் எத்தனை வித்தைகள் கற்றாலும் தறுகுறும்பானவைதான் தீரானே'' என்பார் யோகசுவாமிகள். அது போலவே முரட்டுச்சட்டங்களும் குற்றவாளிகளை அழித்துவிடக் கூடியனவேயன்றி, அவனைத் திருத்திவிடக் கூடியனவல்ல. ஆனால் பெரியோர் தந்த அற உபதேசங்களை விட, அவர்கள் வாழ்ந்து காட்டிய அறவாழ்வு, உலகை வழிப்படுத்தியுள்ளது.

யேசுபெருமான், ''தன்னரிய திருமேனி சதைப்புண்டு பதைப்பெய்திப் பன்னரிய பலபாடு படும்போதும் பரிந்து எந்தாய் இன்னதென அறிகிலர்தாம் செய்வதிவர் பிழையை மன்னியும்'' என வேண்டித் தம் அறிவுரைக்குத் தாமே இலக்கியமானார். இராமன் அறத்தின் நாயகன். அவன் அறநூல் எதுவும் எழுதவில்லை; வனவாசம் முடித்த பின்னர், முடிசூடி

நாட்டை ஆண்டபோதும், கொடிய சட்டங்களால் அதனை ஆளவில்லை. இராமன் காட்டுக்குப் புறப்பட்டபோது, ஆற்றாத மக்கள் ''இனிக் காடெல்லாம் நாடாகிப்போகுமென்றார்'' எனக் கம்பன் பாடுகிறான். இதிலிருந்தே ''இராமன் இருக்குமிடம் அயோத்தி'' என்னும் வழக்கு ஏற்பட்டது. இராமன், அறவுரையாலோ சட்டத்தாலோ இராமராச்சியம் காணவில்லை. இராமன் வாழ்ந்து காட்டினான். அந்த அற வாழ்வை இராமாயணம் பேசுகின்றது. அதனை வில்ஒன்று, சொல்ஒன்று, இல்ஒன்று என்று சூத்திரம் செய்தார்கள்.

இங்ஙனமே தருமத்தின் தனிநாயகன் தருமன்; அவனும் தருமசாத்திரம் செய்யவில்லை; வாழ்ந்து காட்டினான்; அதனைப் பாரதம் சொல்கிறது. காந்தியடிகள் அறவாழ்வு வாழ்ந்து அறப்போராட்டம் நடத்தினார். ''எனது இறுதி ஊர்வலத்தின் போது ஆடுமாடுகள் வந்தால் போதும்'' எனக்கூறிய பெர்னார்ட் ஷா இந்த இங்கிலாந்தில் புலால் மறுத்து வாழ்ந்த அறநெறியாளர். இவர்கள் வழங்கிய அறிவுரைகள் அல்ல, வாழ்ந்து காட்டிய அறவாழ்க்கையே உலகை ஆள்கிறது. எந்த மதமும் அதன் தத்துவச் சிறப்பாலோ, சமயக்கிரிகைகளாலோ, தரும உரைகளாலோ நிலைபெற வில்லை. அவ்வச் சமயங்களைத் தோற்றுவித்தவர்களும், காலந்தோறும் தோன்றிய மகான்களும் காட்டிய உதாரண வாழ்வால் உயர்வுபெற்று இலங்குகின்றது. யேசுநாதரின் உபதேசங்கள் பாதிரிமாருக்குத் தெரியும், ஆனால் அவர் செய்த இரத்ததியாகம் பொதுமக்களுக்குத் தெரியும். போதி மாதவனின் போதனைகள் பிக்குமாருக்குத் தெரியும்; ஆனால் அந்த மகானின் தூய துறவு வாழ்வு மக்களுக்குத் தெரியும்.



தனிமனிதன், அரம் போலும் கூர்மையன் ஏனும், மக்கட் பண்பில்லையேல், மரம் எனவே உலகம் கணிக்கும்.

அறிஞர் அண்ணாவுக்கு முன்பும் பின்பும் ஆற்றல்மிகு பேச்சாளர் பலர் தோன்றியுள்ளனர். ஆனால் அவர் ஒருவரின் பேச்சே தமிழினத்தின் தலைவிதியை மாற்றியுள்ளது. காரணம் என்ன? அறிஞர் என்பதற்காகவா? இல்லை. கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்பனவற்றை இயன்றவரை கடைப்பிடித்தார் என்பதற்காகவே. தந்தை செல்வா சிறந்த ஒரு பேச்சாளரல்ல. அவரின் ஈனக்குரல் காதில்படாது. இருப்பினும் அவருடைய சொல் மந்திரமாகச் செவிமடுக்கப்பட்டது. அவர் சொல்லைக் கேளாரும் கேட்கவேட்டனர்; காரணம் என்ன? அவர் ஓர் அற நெறியாளர் என்னும் மக்கள் நம்பிக்கையே. உலகத் தமிழினமே, ஈழத்துப் போராளிகளான விடுதலைப் புலிகளின் பின்னால், மாபெரும் வீரத்தலைவன் பிரபாகரன் பின்னால் அணிகோத்து நிற்கின்றதே! ஏன்? ஈழத்தமிழர்களின் மெத்தப்படித்த, பணக்காரத் தலைமைகளையெல்லாம் ஒதுக்கித்தள்ளிவிட்டு, இந்தப் பொடியன்களின் பின்னால் உலகத்தமிழினம் திரண்டிருக்கிறதே! ஏன்? தாய்நாட்டின் விடுதலைக்காக வீரச்சாவினையும் விரும்பியேற்கும் தியாகச் செம்மல்கள் ஆளவும் விரும்பவில்லை; வாழவும் விரும்ப வில்லை; தமிழினம் ஆளவேணும் வாழவேணும் என்பதற்காக அவர்கள் வாழ்ந்து காட்டும் தியாக வாழ்வுதான் காரணம். இவற்றிலிருந்து நாம் காணும் உண்மையை மீண்டும் வற்புறுத்துவோம். அற உபதேசங்களல்ல; சட்டத்தின் கொடிய கரங்களல்ல; அறவாழ்வே உலகை உயர்த்தும் என்பதே அந்த உண்மை. இதனால்தான் அறம் மாண்டு, மறம் மலிந்தபோது ''துஷ்டநிக்கிரக, சிஷ்டபரிபாலனம்'' செய்ய அவதாரங்கள்

நிகழ்வதாக இந்துசமயம் கூறுகின்றது. சமுதாயச் சீர்திருத்தமே அறத்தினதும் சட்டத்தினதும் நோக்கமாகும். சட்டம் ''செய்'' எனக் கட்டளை இடும். அறநூல் ''செய்க'' என வேண்டுகோள் விடுக்கும். ''கற்க'' என்றும் ''கற்றிலனாயினும் கேட்க'' என்றும் வியங்கோள் வினைச்சொல் கொண்டு பேசுவார் வள்ளுவ ஆசான். ஆனால், ''இதுசட்டம்; இப்படிச்செய்; இதன்படி நட; இல்லையேல் இன்ன தண்டனைபெறுவாய்'' என்று சட்டம் அச்சுறுத்தும். சட்டம் வெட்டெனப் பாயும்; அறம் மெல்லெனச் செல்லும்; வேழத்தில் பட்டுருவும் கோல், பஞ்சில் பாயாது. எனவே ''வெட்டனவை மெத்தனவை வெல்லாவாம்'' என்று அவ்வைப்பாட்டி மென்மையாகப் பேசுவார். கரும்புபோல் கொல்லப்பயன்படும் கீழ்களிடம் கூட அறம் மெல்லெனப்பாயும்; சட்டம் வெட்டெனப்பாயும். உலகிலுள்ள எல்லா மொழிகளிலும் சட்டத்துக்கு முன் தோன்றியது அறநூலேயாகும். இதனால்தான் பழைய அறநூற் கருத்துக்கள் பல சட்டநூல்களிலும் இடம் பெற்றுள்ளன. இவை இரண்டினதும் கருத்துக்களும் எல்லா நாடுகளிலும் எல்லாக்காலத்திலும் ஒன்றுபோல் அமைந்திருப்பதில்லை, அமைந்திருக்கவும் முடியாது. புலால் மறுத்தலை இந்துமதம், பவுத்தம், சமணம் போன்றவை வற்புறுத்துவதற்குப் புவியியற் காரணங்கள் உண்டு. அதனை மேற்கு நாட்டினரிடமும், வட தென்துருவ மக்களிடமும் வற்புறுத்த முடியாது. வரன்முறை யின்றி, மணந்து வாழ்ந்த மக்களிடம் ஒருவன் ஒருத்தி என்னும் கோட்பாட்டை வற்புறுத்த முடியாது. தம்மக்களின் மனநிலை உணர்ந்தே நபிநாயகம், சில நிபந்தனைகளுடன், நாலு மனைவியரை வைத்திருக்கலாம் என்று விதிசெய்தார். இவை எல்லாம் இடம், சூழ்நிலைகளைப் பொறுத்து மாற்றம்



அடைகின்றன. கொல்லாமையை அறம் என்பார் வள்ளுவர்; கொலையையும் சில இடத்து அறம் ஆகும் என்பார். பொய்ம்மையை அறம் எனப்புகன்றவர், ''பொய்ம்மையும் வாய்மை இடத்த'' என்பார். இவை எல்லாம் சந்தர்ப்பங்களைப் பொறுத்து அமைவனவாகும்.

அறம், வளைந்து நெகிழ்ந்து கொடுக்குத் தன்மையற்ற ஒரு வைரத் தூணல்ல; அது வளைந்து கொடுக்கும், ஆனால் இற்றுப் போகாத எஃகுக்கம்பி. நெகிழ்ந்துகொடுக்கும் இவ்வியல்பிற்குக் காரணம், சமுதாயம் என்பது இறுக்கமான ஒரு திடப்பொருளாக இராமல், வளர்ச்சியும் மாற்றமும் அடைகின்ற ஒரு பாயப்பொருளாகும் என்பதே. தமிழ் மொழியும், தமிழினமும், சைவசமயமும், தொன்மைய வாயினும், இன்றும் கன்னித்தன்மையோடு இயங்குவதற்கு இதுவே காரணமென்பதும் ஆன்றோர் துணிபு.

பாயிரம் என முன்னுரை வரைந்த வள்ளுவப் பெருமான், ஒரு புதுமை செய்துள்ளார். தன்னைப்பற்றியோ, நூலைப் பற்றியோ, நூலின் நோக்கம் பற்றியோ எதுவும் கூறாமல், உலக இயக்கத்திற்குக் கடவுள் நம்பிக்கையும் வான் சிறப்புணருதலும் முக்கியம் என்றார். அதுபோல அறன்வலி உணர்தலும் முக்கியம் எனக் கூறியுள்ளார். மேலும், ஒரு நாட்டின் சிறப்புக்கு அந்நாட்டின் தக்காரும் காரணம் என்றும் மொழிந்துள்ளார். ''நாடாகொன்றோ காடா கொன்றோ' எனப்பாடும் சங்கப்பாட்டவ்வையார் ''எவ்வழி நல்லவர் ஆடவர் அவ்வழிநல்லை வாழியநிலனே'' எனச் சாற்றுவார். தக்காராகிய ஆடவரெனவே, இனம் பற்றி மகளிரும் கொள்ளப்படுவர். ஆதலால் நாட்டின் பெருமை தக்காராகிய

சான்றோரால் என்பது பெறப்படும். மற்றொரு புலவர் சோழனாடு சோறுடைத்து, பாண்டிநாடு முத்துடைத்து என்னும்போது தொண்டைநாடு சான்றோருடைத்து எனப் பெருமைக்குக் காரணம் கூறுகின்றார். உலகில் உள்ள உயர்ந்த நூல்களின் பாவிகம்யாது என்னும் வினாவுக்கு ஒழுக்கத்து நீத்தார் பெருமையே விழுப்பத்து வேண்டும் பனுவல் துணிவு எனப்பாவிகம் கூறியுள்ளார் திருவள்ளுவர்.

''உண்டால் அம்ம'' எனத்தொடங்கும் புறநானூற்றுப் பாட்டு, உலக இயக்கத்திற்கு, இந்திரர் அமிழ்தம் இயைவ தாயினும் தமியராய் உண்ணாத பெருங்குணம் படைத்த சான்றோரே காரணம் எனக் கூறுகின்றது. இவற்றிலிருந்து அறநூல், சட்டநூல் யாவற்றிலும் உலக ஒழுங்குக்குக் காரணமானோர் இச்சான்றோர் என்பதும், அவர்கள் அருகியுள்ளமையே அநீதிக்குக் காரணம் என்பதும் உணரப் படுகின்றன. இவற்றை உணர்ந்த பிளேற்றோ என்னும் கிரேக்க ஞானியர், ''சான்றோர்கள் ஆட்சியாளர்களாக வர வேண்டும், இல்லையேல் ஓ! ஆண்டவனே! இப்போது நாட்டை ஆள்பவர்களை உனது மந்திரதந்திர சக்தியினால், சான்றோராக்கு!'' என வேண்டிக் கொண்டார்.

மேற்குறித்த சான்றோர்களுள் ஒருவரே ஔவைப் பிராட்டியார். பிரான் என்பது மூலப்பரம்பொருளைக் குறிக்கும் ஆண்பாற்பெயராகும்; பிராட்டி என்பது அப்பொருளைக் குறிக்கும் பெண்பாற் பெயராகும். தமிழ் வரலாற்றில் பிராட்டி என்னும் பெயரால், மக்களால் அழைக்கப்பெற்றவர், தடாதகைப் பிராட்டியாராகிய மூலப்பரம்பொருளுக்கு அடுத்தபடியாக, ஔவையாரைத் தவிர வேறுயாருமில்லை. தடாதகைப்



பிராட்டியாரைப்போல, ஔவைப் பிராட்டியாரும் தெய்வமாக வணங்கப்பட்டார் என்பது புலனாகின்றது. கம்பன் காலத்தில் இருந்து சீதாபிராட்டி என்னும் வழக்குத் தோன்றியுள்ளது. சீதாதேவியும் மூலப்பொருளின் அவதாரம் என்பது கம்பன் கருத்து.

ஒருவரது அறிவு, ஆற்றல், திறமைகண்டு நாம் அதிசயிப்போம், புகழ்வோம்; ஆனால் ஒருவரின் உயரிய ஒழுக்க வாழ்வு கண்டு வணங்குவோம்; அவர் திருவடி தொழுவோம். உண்மைத் துறவிகளின் பாதபூசை செய்து வணங்குவது இதற்காகவே. ஔவையைத் தமிழர்கள் வணங்கியுள்ளனர் என்பது ஔவைப் பிராட்டி என்னும் பேச்சுவழக்கால் தெளிவாகின்றது. முழுச் சந்திரனில் மறுப்போலத் தோன்றும் பகுதியைக் காட்டி, ''வானுயர்ந்த ஔவைப்பாட்டி சந்திரனுக்குப் போயும் அங்கே முற்றம் கூட்டிக் கொண்டிருக்கிறாள்'' என்று இளமையில் நம் பெற்றோர் நமக்குக் கூறிய கதையின் அர்த்தமும் இதுதான் போலும்!

வணக்கத்துக்கு உரியவர்களாக, வள்ளுவர் தொடங்கி, நாயன்மார்வரை பலர் வணங்கப்பட்டிருக்கிறார்கள். தெய்வப் புலமைத் திருவள்ளுவர் என்று அவரது புலமையைத் தொழுதார்கள்; தம்பிரான் தோழர் என்று சுந்தரரைப் போற்றினார்கள். ஆனால் தம்பிரானாக வணங்கவில்லை. ஔவைப் பிராட்டியைப் பிராட்டி என்று அழைத்து வணங்குகின்றார்கள். இதற்குக் காரணம் அவர் எழுதிய அறநூல்கள் மட்டுமல்ல, அவர் கூறிய ஆன்மீகக் கருத்துக்கள் மாத்திரமல்ல, அவர் வாழ்ந்து காட்டிய ஒழுக்க நெறியும், அதன்

மூலம் அவர் அடைந்த ஆன்மீக முதிர்ச்சியும் ஆகும். இவையே அவரைத் தெய்வமாக வணங்கவைத்துள்ளன. புறநானூறு முதல் ஆத்திசூடி வரையிலான நூல்கள் அவரது அறவுணர்வை உணர்த்துகின்றன. ஔவையார் அகவல் முதலியன அவரது ஆன்மீக முதிர்ச்சியினால் சீவன் முக்தராக இவ்வுலகில் வாழ்ந்த அவரது ஆன்மீக வாழ்வினைப் படம் பிடித்துக் காட்டுகின்றன.

வரலாற்றுப் பிரக்ஞையற்ற இந்தத் தமிழினத்தின் மத்தியில் யாரைப்பற்றியும், என்ன வேண்டுமானாலும் எப்படி வேண்டுமானாலும் பிதற்றலாம். பிராட்டியாரைப் பற்றிய கட்டுக் கதைகளில் என் மனம் செல்லுவதில்லை. அந்தத் தெய்வம் அருளிய வாக்கினை நினைந்து நினைந்து உருகவே நான் அறிவேன். நான் தமிழனாகப் பிறக்கவும், தமிழ் கற்கவும், பிராட்டியை வணங்கவும் பெற்ற ஒருபேறு இப்பிறவிக்குப் போதும் எனக் கருதுகின்றேன்.

"அறம் செய்" என்று சொல்லாமல் "அறம் செய்ய விரும்பு" என்று சொன்னாரே! அந்தத் தொடரின் ஆழத்தை எத்தனை மேடைகளிற் பேசிவிட்டேன். "ஆறுவது சினம்." என் சினம் பிறரை வருத்தும் என நினைத்தேன்; இல்லை; அது "சேர்ந்தாரைக் கொல்லி" என்ற வள்ளுவரை நினைத்துக் கொண்டு, சினத்தைச் சீறிச்சினக்கவிடாதே, ஆறவிடு, அதுதானாக ஆறிவிடும் என்கின்ற ஆழத்தை நினைந்து கொண்டேன். இப்படி எத்தனை எத்தனை! நமது முன்னோர் அருளிய ஆக்கங்களுக்குக் காலத்துக்கேற்ற விளக்கங்கள் எழுதப்பட வேண்டும். இதில் மாற்றுக்கருத்து இருக்க முடியாது.



இந்தச் சூழ்நிலையில் "அவ்வையார் காட்டிய வழி" என்னும் அரிய நூல் ஒன்று வெளியாகின்றது. கிழக்கு வெளுத்துவிட்டது; சூரியன் வெளிக்கிட்டுவிட்டான். இருள் நீங்கி ஒளிதருவதே வெளியாவது. இந்நூல் தோன்றுவதற்குரிய சூழ்நிலை எது என்பதை நூலாசிரியரின் அறிமுக உரை சுருக்கமாகக் குறிப்பிடுகின்றது. எத்தகைய ஆதங்கம், பிராட்டியாரை அறநூல்கள் எழுதத் தூண்டியதோ அதே ஆதங்கம் இந்நூலாசிரியரையும் "அவ்வையார் காட்டிய வழி" எழுதத் தூண்டியுள்ளது. தத்துவத்தளத்தில் நின்று சமுதாய நேயத்தோடு "என்ன சொல்லி எங்ஙன் உணர்த்துகேன்" என்னும் ஆதங்கமே இந்நூலின் உந்து சக்தியாக விளங்குவதை அவர் எழுதியுள்ள விளக்கம் உணர்த்துகின்றது. பிராட்டியாரின் பாடல்களுக்குப் பதவுரை, பொழிப்புரை எழுதாமல், சூழலுக்கும் காலத்துக்கும் ஏற்ற விளக்கவுரை எழுதியிருப்பது இந்நூலில் காணப்படும் சிறப்பாகும். பொருளைப் புரிந்து கொள்வதற்குப் பதவுரை பொழிப்புரை போதுமானாலும், காலத்தோடு பொருந்த வைத்துப் பாடலை விளங்கி, அனுபவத்துக்கு உட்படுத்தி, வாழ்க்கை நடத்துவதற்கு இத்தகைய விளக்கம் அவசியமாகின்றது. பாடலின் ஆழத்தை, அகலத்தை, பொருட்செறிவை ஆழ்ந்திருக்கும் கவியின் உள்ளத்தை, ஆதங்கத்தைப் பதவுரை முதலியன காட்டா. எந்த ஒரு சிந்தனை படிப்போர் மனதில் பல சிந்தனைகளைத் தோற்றுவிக்கிறதோ அதுவே சிறந்த சிந்தனையாகும். ஓர் ஆராய்ச்சி பல ஆராய்ச்சிகளுக்கு வித்தாக வேண்டும். அரைத்த மாவை அரைத்து, சுட்ட ரொட்டியைச் சுடுவதல்ல ஆராய்ச்சி. "அங்கனமா" "அங்ஙனமா" என்னும் தலைப்பிட்ட ஆராய்ச்சி, அறிவுக்கு விருந்து; "சுற்றம் தழால்" என்னும் வள்ளுவத்தை அரண் செய்கிறது.

பிராட்டியாரைப்பற்றியும் அவர் பற்றி எழுதப்பட்ட இந்நூலைப்பற்றியும் எண்ணும்போது என் சிந்தனை எங்கெல்லாமோ சுற்றுகின்றது. வள்ளுவர், பிராட்டியார் போன்ற சீவன்முத்தர்களுக்குச் சுயசரிதையோ சரிதையோ இல்லாதிருப்பது வியப்பல்ல. பிறப்பு, இறப்பு உலகவாழ்வு ஆகியன கொண்டு முடியும் சின்னஞ்சிறு மனிதருக்கே அத்தகைய வரலாறு எழுதப்படுகின்றது. பிராட்டியார் போன்றவர்களின் வாழ்வு தெய்வீக ஞான வாழ்வாகும். அதனால் அவர்களுக்கு அவர்களின் வாக்கே வாழ்வாகின்றது. இதனை ஆராய்ந்து எழுதும் ஞானவரலாறே (Hageography) இவர்களின் வரலாறாகும். அத்தகைய வரலாறு இல்லாதது குறையே. இக்குறை நீங்கவேண்டுமானால் பிராட்டியார் வாக்கின் ஆழத்தை உணர வேண்டும். ''பேசா எழுத்துடன் பேசும் எழுத்துறின் ஆசான பரநந்தி ஆம்'' என்பது ஔவைக் குறளில் ஒரு குறள். இதற்குப் பொருள் எழுதிய அறிஞர் ஒருவர், பேசா எழுத்து அறிவு, பேசும் எழுத்துச்சிவம்; இவை இரண்டும் சேர்ந்தால் குருவும் கடஷனாமாகும் என எழுதியுள்ளார். உண்மையில், இங்கே பேசா எழுத்து என்பது ''ம்'' எனும் மகாரமாகும். ''ம்' என்பதை வாய்திறந்து பேசி உச்சரிப்பதில்லை; அதனால் இது பேசா எழுத்தெனவும், ஊமை எழுத்தெனவும் சித்தர் பாஷையில் பேசப்படுகின்றது. பேசும் எழுத்தென்பது ''ஓ'' என்னும் ஓகாரமாகும். இது, வாய் திறந்து உச்சரிக்கப்படுவதால் பேசும் எழுத்து எனப் படுகின்றது. எனவே ''ம்'' - முடன் ''ஓ'' உறில் அதாவது ''ஓம்'' என அமைந்தால், ஆசானாகிய பரநந்தி எனப்படும் மூலப்பரம்பொருள் ஆகும். அதெப்படி? ஓம் எனும் மூல மந்திரமாகிய பிரணவத்தை முறைப்படி கூறில் (ஓதிவரின்)



ஓதும் அடியானின் மனம் ஒடுங்கும்; மனம் ஒடுங்கப் புலன் ஒடுங்கும்; புலன் ஒடுங்கச் செயல் ஒடுங்கும்; செயல் ஒடுங்கவே, இடைகலை பிங்கலை, இடைநாடியாகிய சுழுமுனை மூன்றும் ஒன்றாதல் ஆகிய நாடி சுத்தி ஏற்படும். (இதனையே ''மூன்றும் ஒன்றாய் முடிய வேண்டும்'' என யோகர்சுவாமி பாடுகிறார்). நாடிசுத்தி ஏற்படவே, மூலாதாரத்திலிருந்து குண்டலினி சக்தியானது, ஆதாரங்களை நோக்கிப்பாயும்; பாய்ந்து பிரமாந்திரத்திற்கு மேலே பன்னிரண்டு விரற்கடை தூரத்தில் விளங்கும் துவாத சாந்தப் பெருவெளியாகிய தில்லை வெளியிலே நடமிடும் பரம் பொருளாகிய பரநந்தியைக் கூடி, ஆன்மா அத்துவிதமாகிப் பரநந்தி ஆம். இங்ஙனம் இவற்றை விளக்குவது ஒரு நிலை; அதனைச் செயற்படுத்தி அந்நிலையை நாம் அடைவது பெருநிலை. எழுத்துப்பிழையறப் பார்த்து வாசிக்கவும் அறியாத நம்நிலை இரங்கத்தக்கது. இங்ஙனம் பல பாடல்கள் விளக்கம்வேண்டி நிற்கின்றன. இவை, பல்கலைக்கழகங்கள் மேற்கொள்ள வேண்டிய பணி. இந்த நூல் அத்தகைய பெரும் பணிகளுக்கு வித்தாக அமையும் என நம்புகின்றேன்.

இந்நூலாசிரியர் சட்ட அறிஞர் பரம்பரையில் வந்தவர். மேலைப்புலோலியூர் வழக்கறிஞர் மாணிக்கம் செல்லத் தம்பியின் மகன் இவர். தசாவதானி மேலைப்புலோலியூர் கதிரவேற்பிள்ளை அவர்களின் மரபில் உதித்தவர். சட்டமும் தமிழும் துறைபோகப்பயின்றவர். தென்புலோலியூர் கந்த முருகேசன், கொழும்பு சிவன் கருணாலய பாண்டியனார், திருச்சி தூய வளவனார் கல்லூரிப் பேராசான் ஐயன் பெருமாள் கோனார் போன்ற மரபுவழித் தமிழாசான்களிடம் முறையாக எழுத்தெண்ணிக் கற்றவர். மதிநுட்பம் நூலோடுடையவர்.

எல்லாவற்றுக்கும் மேலாக இன்னும் தமிழ் மாணவனாகவே இருந்து வருபவர். இலங்கையில் நீதி அமைச்சில் சட்டத் தொழில் புரிந்த காலத்தில் ''சட்டமும் தமிழும்'' 'பங்காண்மைச் சட்டம்'' என்ற இரண்டு சட்டநூல்களை எழுதியதோடு, ''சட்டமும் சிரிக்கும்'', ''தெரியுமா சட்டம்'' ஆகிய கட்டுரைத் தொகுதிகளையும் செய்தித்தாள்களில் வெளியிட்டுப் பெயர் பெற்றவர்.

இலண்டனுக்கு வந்தபின்னர் 1993ஆம் ஆண்டில் Ethical Essence of The Tamils என்ற திருக்குறள் நூலை வெளியிட்ட இவர், இப்போது, தமது தமிழ்ப்புலமையினால் பிராட்டியை உணர்ந்து கொண்டு, சட்டக்கல்வித் திறனால் கருத்துக்களை விளங்கி, விளக்கிக், கேளாரும் கேட்ப மொழிகின்றார். தமிழர் தந்த அறக் கோட்பாட்டையும் தத்துவ, சமய, கலை, கலாச்சாரக்கோட்பாடுகளையும், சரியாகப்புரிந்து கொண்டு, மனச் சாட்சியைத் தூய்மை செய்து வாழ்வுநடத்தும் இவர், இந்த இலண்டன் மாநகரில், பிரித்தானிய அரச சட்டச் சேவையில் பெரும் பதவிவகிக்கின்ற போதும் ''வீட்டிலே தமிழ்'', ''தமிழரோடு தமிழ்'' என்னும் உறுதியான கொள்கை யுடையவர்.

சட்டநூலும் அறநூலும் வளைந்து கொடுக்கும் தன்மையவாயினும், தமது மதிநுட்பத்தினால், சட்டவாதம் செய்து வழக்கில் வெற்றிபெறவிழையும் சாதாரண வழக்கறிஞர் போலில்லாது, நீதிக்கு முன்னுரிமை வழங்கி இந்த நூற் கட்டுரைகளை எழுதியுள்ளார்.

கடந்த காலத்தமிழன், அறந்தவறிச்சோம்பி வாழ்ந்து, தான் கடன் பட்டதுபோலத் தமிழையும் கடன் படவைத்துவிட்டான்.



அரசும், தனியார் துறைகளும், கடனை ஊக்குவிக்கும் காலமிது. தமிழ், உயர்தனிச் செம்மொழி என்று டாக்டர் கால்டுவெல் என்ற மேனாட்டறிஞர் நிறுவிய பின்னும், தமிழின் பெருமையைப் பலர் இன்னமும் உணரவில்லை. ஆசிரியர் இந்நூலைத் தூய தமிழில், மொழிக்கடன்படாது, மக்கள் தமிழில் எழுதியுள்ளார். அவரது ஆராத் தமிழ்ப் பற்றைக்கண்டு, அவர் அந்நிய மொழி எதிர்ப்பாளர் என்பர் சிலர். தூய தமிழ் போல நமது சமயமும் தூய்மை அடைய வேண்டும். நமது தாய்த் தமிழீழமும் பிறர் தலையீடின்றித் தலைநிமிர்ந்து நிற்க வேண்டும் என்பதைச் சிலர் சரியாகப் புரிந்து கொள்வதில்லை. தமக்கென ஒன்றில்லாத இந்தச் சிலரின் கூற்றைக் கேளாம்புறம் என மெய்கண்டார் ஒதுக்கியது போல், இவ்வாசிரியர் ஒதுக்கி விடுவார். இவையெல்லாம் அறநூல்கள் கூறும் அறுவகைக் குணக்கேடுகளுள் மார்ச்சரியத்தின் பாற்படும். இவர்கள் கூற்றெல்லாம் நால் வகைச் சொற்குற்றங்களுள் குறளை எனப்படும். எனவே இத்தகைய புற மொழிகளை ஒதுக்கி விட்டு ஔவையார் காட்டிய வழியில் நடந்து செல்வோம்.

நிறைவாக இந்நூலுக்கு மதிப்புரை எழுத ஒரு சந்தர்ப்பம் வழங்கியதன் மூலம் பிராட்டியைப்பற்றிச் சிந்திக்க ஒரு வாய்ப்புத்தந்து என் சோம்பலைப் போக்கியதற்காக ஆசிரியர்க்கு நன்றி கூறி அமைகின்றேன்.

**கலாநிதி வித்துவான் க.ந.வேலன்**

**8, Rose Court, Bluebell Way**

**Ilford, Essex, England.**

**Tele. : 0208 514 0864**

# என்னுரை

அவ்வை யார்? அவரை மறக்க நியாயமில்லை. ஆனால் அயல் நாட்டுச் சூழ்நிலையில் வாழ நிர்ப்பந்திக்கப் பட்டுவிட்ட நாங்கள் அவ்வையாரை மறக்கும்படி நேரிட்டு விடுகின்றது; தமிழ்ப்பெரியவர்களை மறக்கும்படி ஆகி விடுகிறது. சிறுவர்கள் அவரைப்பற்றி அடியோடு அறியாமலே இருக்கின்றார்கள். சனிக்கிழமையிலோ, ஞாயிற்றுக்கிழமையிலோ தமிழ் படிக்கப் போகின்ற சிறுவர்களுக்கு அவ்வையாரைப் பற்றி அறிந்து கொள்ள வாய்ப்புக் கிடைப்பதில்லை.

1972ஆம் ஆண்டிற்குப் பின்னர் இலங்கைத் தமிழ்ச் சிறுவர்களுக்கு ஆங்கிலக் கல்வியும் கிடைக்கவில்லை, தமிழ்க் கல்வியும் கிடைக்கவில்லை. அவர்களுடைய வாழ்க்கையை வழிப்படுத்துவதற்கான வாய்ப்பு பெற்றோர்க்கும் ஏற்படவில்லை, மற்றோர்க்கும் கிடைக்கவில்லை. இந்தத் துர்ப்பாக்கிய நிலை காரணமாக, இங்கு இங்கிலாந்திற்கு வந்திருக்கும் இளைஞர்களும் யுவதிகளும் திசை தப்பிப் போய்க் கொண்டிருக்கின்றார்கள். தமிழ்க் கலாச்சாரம் ஊட்டப் படாத நிலையில் இந்த நாட்டுக்குத் தள்ளப்பட்ட இந்த இளைஞர்களும் யுவதிகளும், இந்த நாட்டின் சான்றோர்களால் வெறுக்கப்படுகின்ற இலண்டன் நாகரிகத்தை - இட்டப் படியான இழிபோக்கை - நவநாகரிகம் என்றெண்ணி அழிவுப் பாதையில் போய்க்கொண்டிருக்கிறார்கள். அவர்களைத் திருத்த வேண்டிய பணியொன்று அனுபவப்பட்ட தமிழர்களுக்கு உண்டு. ஆனால் இந்த நாட்டின் உரிமைச் சட்டங்கள் அந்தத் திருத்தும் பணிக்குத் தடையாக உள்ளன. இந்த நாட்டின் உரிமைச் சட்டங்கள் தமிழ் இளைஞரின் தறுதலைச் செயலுக்கு உடந்தையாக உள்ளன. ஆனாலும் எங்கள் தமிழ் இளைஞர் குறிக்கோளற்றுக் கெட்டுப்போவதைப் பொறுப்புணர்ச்சி கொண்ட தமிழினத்தார் அனுமதிக்க முடியாது. ஆகவே அவ்வையாரை மறந்துவிட்ட பெரியவர் களுக்கும் அவரைப்பற்றி அறியாமலே காலம் கழிக்கின்ற சிறுவர்களுக்கும் பயன்படும் வகையில் அவ்வையாரின் பலதிறப்பட்ட பாடல்களுக்கு இலண்டன் பத்திரிகைகளான தமிழன், ஈழகேசரி ஆகியவற்றின் பத்திகள் மூலம் எளிய விளக்கங்கள் கொடுப்பது பயன் அளிக்கும் என்று நண்பர்கள் வேண்டியதற்கிணங்கத் தொடர் கட்டுரைகள் சிலவற்றை எழுதி வந்தேன். அவற்றைத் தொகுத்து இப்போது சிறுநூலாக வெளியிடுகின்றேன். எழுதுமாறு ஊக்கியதோடு அவற்றை இப்போது நூலாக வெளியிட இசைவும் தந்த "தமிழன்", "ஈழகேசரி" ஆகியவற்றின் ஆசிரியரான ஈ.கே.ராஜகோபால் அவர்களுக்கு எனது உளம் கனிந்த நன்றி.

அவ்வையின் பாடல்கள் இல்லாமல் தமிழ் இலக்கியம் இல்லை. இலங்கையில் தமிழ் படித்த நாம் எல்லோரும் முதன் முதலில் படித்த இலக்கியம் அவ்வையின் பாடல்களே. அவ்வையின் பாடல்கள் புழங்காத தமிழ் வீடுகள் கிடையாது. அரிச்சுவடி படிக்க ஆரம்பிக்கும்போதே அவ்வையின் "ஆத்திசூடி"யோடுதான் ஆரம்பிப்பது வழக்கம். "அறம் செய்ய விரும்பு", "ஆறுவது சினம்", "இயல்வது கரவேல்", "ஈவது விலக்கேல்" என்று வாயோயாமல் படித்ததை எவரும் மறக்க முடியாது. ஆனாலும் நாம் வாழும் சூழல் அந்த

அர்த்தபூர்வமான அடிகளை நினைக்கவொட்டாமல் செய்து விடுகின்றது. அவ்வையைப்பற்றி நாம் படித்த கதைகளை எண்ணிப் பார்க்கின்றபோது அவர்மீது நாம் கொண்டிருந்த மதிப்பும் அன்பும் மேலோங்குகின்றன.

தமிழ் என்றால் அவ்வை; அவ்வை என்றால் தமிழ் என்ற எண்ணம் எம்மில் ஆழப்பதிந்து விடுகின்றது. தமிழுக்காகவே திருமணம் செய்யாமல் வாழ்ந்தவர் அவ்வை. நிறை வாழ்வு வாழ்ந்த அவர் படாடோப வாழ்வு வாழ விரும்பவில்லை. மன்னராலும் மதிக்கப்பட்ட அவர் மக்களை விட்டு ஒதுங்கி வாழவில்லை. மன்னருக்கு அறிவு புகட்டிய அவ்வை மாசனங்களுக்கும் மருந்தாக இருந்து அவர்களைத் திருத்தி வாழ வழிகாட்டினார்.

அவ்வை வெறுமனே புலவர் அல்லர். அவர் தமிழ்ப் பண்பாட்டின் சாராம்சம், தமிழறிவின் பிழிவு. தமிழ்ப் பண்பாட்டின் சாரத்தையும் தமிழறிவின் பிழிவையும் தெளிந்த தமிழில் எளிய நடையில் சாதாரண மக்களுக்கும் படித்த பண்டிதர்களுக்கும் உணர்த்திய தமிழச்சி.

அவ்வையார் இயற்றிய ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி, ஞானக்குறள், அசதிக்கோவை என்ற நூல்கள் தமிழ் மொழியின் ஆழத்தையும் அகலத்தையும் உணர்த்துகின்ற பெருநூல்கள். இந்த நூல்கள் எடுத்தாள்கின்ற விடயங்கள் பலதிறப்பட்வை.

நல்ல சிந்தனை - நல்ல செயல் - நல்ல குறிக்கோள் - மெலிந்தோர்க்கு உதவுதல் - துன்பம் துடைத்தல் - மக்களாட்சி - நீதிநிருவாகம் - மானம் - நட்பு - மனம்தடுமாறாமை - என்று



பல விடயங்கள்பற்றி அவர் பாடல்கள் நீதிநெறி புகட்டி யுள்ளன. அத்தகைய அரும் பாடல்களில் ஒருசிலவற்றை விளக்க முயலும் சிறு கட்டுரைகளைக் கொண்ட இந்தச் சிறுநூலைத் தமிழுலகம் பெருமனத்தோடு ஏற்றுக்கொள்ளும் என்று நம்புகிறேன்.

அச்சீட்டுக்குப் போகுமுன் நூலில் அடங்கியுள்ள கட்டுரைகளைக் கணனியில் இட்டு வடிவமைத்துத் தந்ததோடு அவ்வப்போது ஆக்கம் நிறைந்த கருத்துக்களைக் கூறியும், பெயர்த்தும் பெயர்த்தும் யான் புதுக்கியும் திருத்தியும் எழுதியவற்றைப் புன்னகையோடு கழித்தும் கூட்டியும் கணனியில் செப்பம் செய்தும் ஒத்துழைத்த இலண்டன் கம்பன் கழகச் செயலன் சிவகுமாரனுக்கும் அவர்க்கியைந்த சானகி சிவகுமாரன் அவர்களுக்கும் நான் நனி நன்றி பாராட்டுகிறேன்.

இந்த நூல் அச்சாகிக் கொண்டிருக்கின்றபோது அதனை வாசித்து அணிந்துரை வழங்கி நூலுக்கு மெருகேற்றிய தமிழறிஞனும் சிந்தனையாளனுமாகிய சித்தாந்தப்புலவன் கலாநிதி வித்துவான் க.ந.வேலன் அவர்களுக்கு நான் பல்லாற்றானும் கடமைப்பட்டவன்.

எனது வேண்டுகோளை ஏற்று இந்த நூலுக்கு மதிப்புரை வழங்கி மதிப்பேற்றிய உலகறிந்த பேச்சாளராகிய சொல்லின் செல்வன் சுகிசிவம் அவர்களுக்கு எனது நன்றி உரித்தாகுக.

இந்த நூலை அழகிய முறையில் அச்சிடுவதற்கு அயராது உழைத்த எனது பி.பி.சி. தமிழோசை நண்பர்களான இராணிமைந்தன், அண்ணாமலை, சம்பத்குமார் அவர்களுக்கு

நான் என்றென்றும் நன்றிக்கடம்பட்டிருக்கிறேன். இதனை அழகிய முறையில் அச்சேற்றி நூலாக்கித் தந்த 'கம்ப்யூ பிரிண்ட் ஊழியர்களுக்கும், அதன் உரிமையாளரான திரு. திவாகர் அவர்களுக்கும் எனது நன்றிகளும் பாராட்டுக்களும்.

எனது இலக்கிய முயற்சிக்கும் ஏனைய உயர்ச்சிக்கும் என்றென்றும் உறுதுணையாய் இருந்து வருகின்ற என் அன்பு மனைவி மாதினிக்கு நன்றி பாராட்டச் சொற்களில்லை. பருத்தித்துறையிலே, என்னைச் சான்றோன் எனக்கேட்டு மகிழ்ந்து கொண்டிருக்கின்ற என்னை ஈன்றாளான திருவாட்டி காந்திமதி செல்லத்தம்பிக்கு இந்த நூலைக் காணிக்கை ஆக்கி மகிழ்கிறேன்.

**செ.சிறீக்கந்தராசா** B.Sc., LL.M.

66, உவெஸ்றோ காடின்ஸ், செவின் கிங்ஸ்,

இல்போட், எசெக்ஸ், இங்கிலாந்து.

தொலைபேசி : 0208 590 9905

# அவ்வையார் காட்டிய வழி

## 1

## வெளுத்தது எல்லாம் பால் அல்ல!

*உடன் பிறந்தார் சுற்றத்தார் என்று இருக்க வேண்டா*
*உடன் பிறந்தே கொல்லும் வியாதி - உடன் பிறவா*
*மாமலையில் உள்ள மருந்தே பிணி தீர்க்கும்*
*அம்மருந்து போல்வாரும் உண்டு - **(மூதுரை - 20)***

சுற்றத்துக்கு அழகு சூழ இருத்தல் என்று தமிழர் சொல்வார்கள். தான் ஆடா விட்டாலும் தன் தசை ஆடும் என்றும் பேசிக்கொள்வார்கள். Blood is thicker than water என்று ஆங்கிலேயர் அறைந்து கூறுவார்கள். இவையெல்லாம் வாழையடி வாழையாக வந்த மரபுச் சொற்றொடர்கள். மரபுச் சொற்றொடர்கள் பொருள் பொதிந்த வார்த்தைகள்தாம். ஆனால் அவை மாறா நியதிகளைக் கூறும் வாக்கியங்கள் அல்ல. அவை கூறுவனவற்றிற்கு விதி விலக்குகளும் உள்ளன. விதிக்கு எக்காலும் எஞ்ஞான்றும் விலக்குகள் உள்ளன என்பதை வெளிக்காட்டும் வகையில் மேற்படி வெண்பாவை அவ்வையார் பாடியிருக்கிறார்.

கொழும்பு தமிழ்ச் சங்

எம்மோடு ஒரு வயிற்றில் பிறந்த அண்ணன் தம்பிமாரும் அக்கா தங்கைமாரும் எப்பொழுதும் எங்களுக்கு உதவியாக,

இனியவர்களாக இருப்பார்கள் என்று நம்புவது உலக இயற்கை. இது எந்த நாட்டிற்கும் பொருந்துகின்ற இயற்கையான மனப்பாங்கு. இவ்வாறே இரத்த உறவினர்களான மாமன் மாமியரும் மச்சான் மச்சாள்மாரும் சிற்றப்பன் பெரியப்பன் மாரும் சின்னம்மா பெரியம்மாமாரும் உற்றவிடத்து உதவி செய்து காப்பார்கள் என்று நம்புகின்றோம். தாய்ப் பாசம்தான் சிறந்தது; தந்தைப் பாசம் அதைவிடக் குறைந்ததல்ல; சகோதர வாஞ்சைதான் தலை சிறந்தது; கணவன் மனைவியர்க் கிடையிலான அன்புதான் களங்கமற்றது; ஒரே மொழி பேசுவோர் என்ற உணர்வுதான் பலமானது; ஒரே சமயத்தினர் என்ற எண்ணம்தான் முக்கியமானது என்றெல்லாம் பேசப்படுவதை நாம் பல தடவைகள் கேட்டிருக்கிறோம். ஆனால் பெரிதாகப் பேசப்படுகின்ற இந்த உறவுகளும் பந்தங்களும் மக்களுக்கு உதவுவதற்குப் பதிலாக அவர்களுக்குப் பங்கமாக இருந்ததையும், இருப்பதையும் நாம் பல தடவை கண்டிருக்கின்றோம், கேட்டிருக்கிறோம்; அவ்வையாரும் தமது அனுபவத்தில் பலமுறை அனுபவித் திருக்கிறார். அந்த அனுபவத்தின் பிழிவே மேற்படி பாடல்.

அவ்வை ஓதுகிறாள் : ''உடன்பிறந்தவர்களோ அல்லது சொந்தக்காரர்களோ எப்போதும் உங்களுடைய நலனில் அக்கறை கொண்டிருப்பார்கள் என்றோ, உங்களுக்கு உதவக் காத்திருப்பார்கள் என்றோ எண்ணி ஏமாறி விடாதீர்கள். உதவவேண்டும் என்ற உணர்வு இரத்த உணர்வினால் மட்டும் இயல்பாக வந்துவிடும் என்று நம்பி விடாதீர்கள். நட்பும், தயையும் கொடையும் பிறவிக்குணம்; ஒன்றாக நெருங்கிப் பழகி வாழ்ந்தோம் என்பதால் அவர்கள் உதவக்கூடும்; ஆனால் எப்போதும் உதவுவார்கள் என்று சொல்வதற்கில்லை. மாறாக அவர்கள் எம்மைக் கொல்லவும் சதிசெய்யவும் கூடும். நம்மைக் கொல்வதற்கென்றே சில வியாதிகள் நம்மோடு உடன் பிறக்கின்றன. அத்தகைய நோய்களைக் குணப்படுத்து வதற்கான மருந்துகளோ எங்கோ தொலை தேசத்தில் இருக்கவும் கூடும். அதாவது நன்றாய்த் தெரிந்தவர்களும் நம்முறவினர் என்று நம்பியவர்களும் அறியப்படாதவர்களும் நமக்கு உதவவும் கூடும். அப்பேர்ப்பட்டவர்களும் உலகத்தில் இருக்கிறார்கள். அதை மறந்துவிடாதீர்கள். வெளுத்ததெல்லாம் பால் அல்ல.'' இவ்வாறு சொல்கிறாள் அவ்வை.



உடன்பிறந்த பாண்டவர்கள் கர்ணனுக்கு எதிரிகள் ஆனார்கள்; உடன்பிறவாக் கர்ணன் துரியோதனனுக்கு நண்பன் ஆனான்; இலங்கையிலே பிறந்த தமிழர்க்கு இலங்கைச் சிங்களச் சகோதரர்கள் விரோதிகள் ஆனார்கள்; அதே தமிழர்க்கு, மொழியாலும் இனத்தாலும், சமயத்தாலும் வேறுபட்ட மேற்கு நாடுகள் தஞ்சமளித்துக் காப்பாற்று கின்றன; தாய்த் தமிழ்நாடு என்று நம்பப்பட்ட தமிழ் நாடு தாய் என்று நம்பித் தஞ்சம் அடைந்த இலங்கைத் தமிழ்ச் சேய்களை ஏற்க மறுக்கிறது.

இந்த நிலைமை உலக இயற்கை என்பதை உணர்ந்தமை யாலேதான் அவ்வையார் மேற்படி பாடலை எழுதியிருக்கிறார். பாடலைப் படியுங்கள். இலங்கைத் தமிழரின் கதியினை எண்ணிப்பாருங்கள். எதிர்காலத்தைக் கற்பனை செய்யுங்கள்.

# 2

# வெறும் பானை பொங்காது

*செய்தீவினை இருக்கத் தெய்வத்தை நொந்தக்கால்*
*எய்த வருமோ இருநிதியம் - வையத்து*
*அறும் பாவம் என்ன அறிந்து அன்று இடார்க்கு இன்று*
*வெறும்பானை பொங்குமோ மேல் -* ***(நல்வழி 17)***

நான் யார்? நான் ஏன் பிறந்தேன்? என்னை ஆக்கியவன் யார்? நான் படும் துன்பத்திற்கும் நான் அனுபவிக்கும் இன்பத்துக்கும் காரணம் என்ன? என்ற கேள்விகளைக் கேட்டுப் போதித்துச் சோதித்து வாதித்ததன் விளைவாகப் பிறந்த சமயம் இந்து சமயம்.

உயிர்கள் உண்டு, கடவுள் உண்டு, செய்யும் செயலுக்கேற்பப் பயன் உண்டு, செயல் அறும் வரைக்கும் மறுபிறப்பு உண்டு என்ற தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டது இந்து சமயம். தனிப்பட்ட ஒருவரைச் சமயக் கடவுளாகக் கொள்ளாமல், தத்துவங்களை அடிப்படையாகக் கொண்டது இந்து சமயம். சிவன் என்றும், மால் என்றும், பிரமன் என்றும், கூறுவதெல்லாம் தத்துவங்களை விளக்க வந்த குறியீட்டுப்பெயர்கள். இதனாலேதான் கி.பி. எட்டாம் நூற்றாண்டுக்கு உரியவராய்ச் சொல்லப்படும் மணிவாசகர் ''ஒருநாமம் ஒருருவம் ஒன்றும் இல்லார்க்கு ஆயிரம் திருநாமம்



பாடி நாம் தெள்ளேணம் கொட்டாமோ'' என்று திருவாசகம் பாடினார்.

மேலே கூறிய இந்துசமயத் தத்துவத்தைத் தமிழ்த் தாயான அவ்வையார் மேற்படி நல்வழி வெண்பா மூலம் விளக்குகின்றாள். துன்பம் வந்தபோதும், துயரம் நீங்காத போதும், வறுமை நெருங்கியவிடத்தும் எமக்கு இட்டமான தெய்வத்திடம் போய் முறையிட்டு ஆறுதல் கேட்கிறோம். ஆறுதல் கிடைக்காதவிடத்துத் தெய்வத்தைக் குறைகூறி ''உனக்குக் கண் இல்லையா? நீ வெறும் சிலைதானா?'' என்று கேளாக் கேள்விகளைக் கேட்கிறோம். இப்படியான கேள்விகளைக் கேட்டவுடனும் எமக்குத் தேவையான செல்வமும் ஆறுதலும் கிடைத்துவிடுமா? மனம்போன போக்கெல்லாம் போய், அறம்பிறழ்ந்த செயல்களைச் செய்ததன் பயனாக நாங்கள் அனுபவிக்கின்ற கயிட்டங்களை இல்லாமல் ஒழிப்பதற்குத் தெய்வத்திடம் போவதால் உடனடியாகப் பயன் என்ன விளையமுடியும்? கயிட்டங் களைத் தாங்குவதற்கான பலத்தைத் தெய்வம் தரமுடியும். கயிட்டத்தை நீக்கத் தெய்வம் உதவாது, உதவ முடியாது. ஏன் என்றால் அது வினைப்பயன். வினை விதைத்தவன் வினையை அறுவடை செய்துதானாக வேண்டும்; வேறு வழியில்லை.

இந்தப் பிறவியில் நல்வாழ்வு கிடைக்கவில்லையே, பிறந்த நாளிலிருந்து இந்நாள்வரை துன்பத்தின்மேல் துன்பம்தானே வந்துகொண்டிருக்கின்றது, என்று இப்போது

புலம்பிப் பயன் என்ன? வெறும் பானையை அடுப்பிலே வைத்து எரித்துவிட்டுப் பொங்கல் வரவில்லையே என்று அங்கலாய்க்கலாமா? பானையிலே அரிசி போட்டிருந்தால் தானே பொங்கல் பொங்கிவரும்! வெறும்பானை பொங்குமா? வரும் பிறவியில் நன்மை வேண்டும் என்பதற்காக இன்று நல்ல காரியங்களைச் செய்தாற்றானே மற்றப் பிறவியில் நன்மை அனுபவிக்க முடியும். ஆகவே இன்றே நன்மை செய்யுங்கள். அதுதான் இம்மையிலும் மறுமையிலும் உங்களைத் துயரக்கடலில் ஆழாமல் மிதக்கச் செய்யும் தெப்பமாக உதவும் என்று அவ்வை சொல்கிறாள்.

இன்று நீங்கள் துன்பப்படுகிறீர்கள் என்றால் அதற்குக் காரணம் நீங்கள் கடந்த பிறவியில் செய்த வினைதான். நல்வினைக்கு நற்பயனும், தீவினைக்குத் தீயபயனும் உண்டு. இந்த நிலையை மாற்றமுடியாது. ஆகவே இயன்ற போதெல்லாம் அறம் செய்யுங்கள், மறம் தவிருங்கள் என்கிறாள் அவ்வை. அவ்வையார் கூறிய மேற்படி கருத்தை அவருக்குப் பல்லாண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த வள்ளுவரும் வேறொரு விதமாகச் சொல்லியிருக்கின்றார். *''அறத்தாறு இதுவென வேண்டா சிவிகை பொறுத்தானோடு ஊர்ந்தானிடை.''*

அவர் சொல்கிறார்:-

அதோ பாருங்கள்! ஒருவன் பல்லக்கின்மேலே அமர்ந்திருக்கின்றான். வேறு நான்கு பேர் அந்தப் பல்லக்கைக் காவிக்கொண்டு மேல் மூச்சுக் கீழ் மூச்சு வாங்க நடந்து கொண்டிருக்கிறார்கள். பல்லக்கில் ஊர்பவன் அப்படிச்



சொகுசாக இருப்பதற்கும், பல்லக்கைக் காவிச்செல்வோர் துன்பப்படுவதற்கும் காரணம் என்ன? அவர்களின் வாழ்க்கை முறையில் காணப்படும் ஏற்றத் தாழ்வுக்கான காரணம் என்ன? என்று கேட்டுவிட்டு மறுமொழியும் சொல்கிறான் வள்ளுவன். வள்ளுவன் தொடர்கின்றான். காரணம் காண வெகுதூரம் போகத் தேவையில்லை. பல்லக்கில் ஊர்பவன் செய்த புண்ணியம் அவனுக்குச் சுகவாழ்வை அளித்துள்ளது. பல்லக்குக் காவுவோரின் பாவம் அவர்களுக்கு அடிமை வாழ்வைக் கொடுத்துள்ளது. ஆகவே நற்செயலின் விளைவைப் புரிந்து கொள்வதற்கு அங்கே இங்கே என்று நீங்கள் எங்கேயும் போகத் தேவையில்லை, பல்லக்குக் காட்சியைப் பார்த்தால் போதும் என்று வள்ளுவன் விளக்கம் தருகின்றான். அவ்வையோ அடுப்படிக் காட்சியைக் காட்டி வெறும்பானை பொங்காது, அரிசி இடவேண்டும் என்கிறாள். ஊரோடு இடம் பெயர்ந்து உலகம் எல்லாம் அலைகின்ற ஈழத் தமிழினம் இந்த அலைச்சலுக்கான காரணத்தை ஆய்ந்து பார்க்குமா?

★

# 3

# அளவான வாழ்வே அழகான வாழ்வு

*ஆன முதலில் அதிகம் செலவு ஆனால்*
*மானம் அழிந்து மதிகெட்டு - போனதிசை*
*எல்லார்க்கும் கள்ளனாய் ஏழ்பிறப்பும் தீயனாய்*
*நல்லார்க்கும் பொல்லனாம் நாடு* - ***(நல்வழி - 25)***

வரவுக்கும் செலவுக்கும் இடையில் ஒரு சமன்பாட்டைக் காண்பதுவே உலக மக்களின் வரலாறாக இருந்து வந்துள்ளது. ஆனால் அப்படியான சமன்பாட்டைக் காண்பது மக்களில் பலருக்குக் கடினமாகவே இருந்துள்ளது. வரவுக்கும் செலவுக்கும் இடையில் ஒரு சமன்பாட்டைக் கண்டவன் வாழ்க்கையில் வென்றான். சமன்பாட்டைக் காணாதவன் வாழ்க்கையில் தோற்றான். இதுதான் உண்மை.

வாழ்க்கையில் தோற்காமல், வாழ்க்கையில் வெல்வதற்கு வழி என்ன என்று அறிஞர்கள் பல தேசங்களில் பல காலங்களில் பலவிதமான அறிவுரைகளைச் சொல்லி வந்துள்ளார்கள். வருமானத்தைப் பெருக்குவதுதான் வழி என்று வேறு சிலர் சொல்லியுள்ளார்கள். செலவினைச் சுருக்குவது தான் வழி என்று ஒரு சிலர் சொல்லியிருக்கிறார்கள். வரவுக்கும் செலவுக்கும் இடையில் சமன்பாடு காணவேண்டுமானால் ஆசைகளை அறுப்பதுதான் வழி என்று சமய ஞானிகளே



கூறியுள்ளார்கள். துன்பத்தைத் துடைப்பதற்கு வழி கண்டவராகச் சொல்லப்படும் கவுதம புத்தர், ஆசையை அறுப்பதுதான் வழி என்றார். அவருடைய அறிவுரையைப் பின்பற்றியே தமிழில் இயற்றப்பட்ட பவுத்த நூல்களில் ஒன்றான மணிமேகலையும் ''ஆசை அறுமின், ஆசை அறுமின், ஈசனோடாயினும் ஆசை அறுமின் என்று'' கூறிற்று. சமயத்துறையில் நின்றுகொண்டு இல்லறத்தானுக்கு ஆன்மீகக் குளிகையை நீட்டினால் அதனை இல்லறத்தான் ஏற்றுக்கொள்ள மறுக்கக்கூடும் என்பதை உணர்ந்த திருவள்ளுவர், ஆடுகிற மாட்டை ஆடிக் கறக்க வேண்டும், பாடுகிற மாட்டைப் பாடிக் கறக்கவேண்டும் என்ற பாங்கில் *''ஆகாறு அளவிட்டது ஆயினும் கேடில்லைப் போகாறு அகலாக்கடை''* என்று பாடினார். வள்ளுவர் சொன்னது இதுதான் : வருவாய் வருகின்ற வழிவாய்க்கால்கள் குறைவாய் இருந்தாலும் கவலைப்பட வேண்டியதில்லை. ஆனால் செலவு போகின்ற வழிகள் பெருகாமல் இருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டும். அதாவது முதலுக்குத் தக்கபடி செலவு செய்ய வேண்டும் என்கிறார் வள்ளுவர்.

திருவள்ளுவர் சொன்ன அதே கருத்தையே அவ்வையாரும் சொல்கிறார். ஆனால் சற்று விளக்கமாகக் கூறுகிறார். அவ்வாறு விளக்கமாகக் கூறும்போது, வரவுக்கு மிஞ்சின செலவு செய்வதால் வரக்கூடிய விளைவுகள் என்ன என்பதைப் பட்டியல் போட்டுக் காட்டுகிறாள் அவ்வை.

உழைப்புக்கு மேற்பட்ட செலவு செய்தலாகிய ஊதாரித் தனம் ஏற்பட்டால் என்ன நடக்கும்?

முதலாவது மானம் அழியும்; அடுத்தபடியாகப் புத்தி கெட்டுப் போகும்; அதற்குமேல் கள்வன் என்று பெயர் எடுக்க வைக்கும்; இப்படிப் பெயர் எடுத்த பின் ''அற நனைந்தவனுக்குக் குளிர் என்ன கூதல் என்ன'' என்ற போக்கில் திரும்பத் திரும்பக் களவு செய்யத் துடிக்கின்ற நிலமை ஏற்படும். இதன் விளைவாக ஏழேழு பிறவிக்கும் தீயவன் என்ற பட்டம் மாறாமல் நிலைக்க நேரும். இது காரணமாகப் பகைவனுக்கும் அன்பு செய்யும் பண்பு கொண்ட நல்லவர்கள்கூடப் பொல்லாதவன் என்று பட்டம் சூட்டுகின்ற நிலமை ஏற்படும். ஆதலினால் விசிறித் திரியாமல், ஊதாரித் தனம் பண்ணாமல் வரவுக்கேற்றபடி செலவு செய்து வாழப் பழகுங்கள் தமிழினமே என்று ஓதுகிறாள் அவ்வைப் பிராட்டி.

இந்தப் பாடலைப் படித்துப் பொருளை நுணுகி உணரும் போது எமது இரத்தத்தின் இரத்தமான ஈழத்தமிழ் இளவல்களில் சிலர் இந்த நாட்டில் கட்டறுத்த காளைகள் எனக் கெறுவித்திரிந்து, பொலிசு நிலையத்திலும், சொலிசிற்றர் அலுவலகங்களிலும் நீதிமன்றங்களிலும் பொழுதைக் கழித்துக் கொண்டிருப்பதோடு, சிறைச்சாலைப் படியேறும் நிலைமையையும் எய்தும் நிலை மனக்கண்ணில் படமாடுகின்றது. உழைக்கவும் பிழைக்கவும் வழியுள்ள இந்த நாட்டிற்கு வந்துள்ள நம்மவர்கள் நன்றாக உழைக்க வேண்டும்; கடன்களை அடைக்கவேண்டும் என்று எண்ணுவதும் அதற்கேற்ப முயல்வதும் வேண்டியனவே. ஆனால் உழைப்புக்கு மேல் விரயம் செய்து, செலவுகளைப் பெருக்கி, வரவு போதவில்லையே என்று மானம் போகும் செயல்களில் இறங்கி, அடுத்தோரைக் கெடுத்து, அண்டினோர்க்கு வஞ்சகம் செய்து, ஈழத்தமிழருக்கு என்றால் தொழில் தரமுடியாது என்று வெள்ளை முதலாளிகள் சொல்லும் அளவுக்கு நம்மைத் தாழ்த்தி, நல்லவர்களே நம்மை வெறுக்கும் அளவுக்குச் சிறுமைப்பட்டுப் போவது கவலைக்குரியது.

*''மயிர் நீப்பின் வாழாக்கவரிமா அன்னார் உயிர் நீப்பர் மானம்வரின்''* என்ற இலக்கணத்துக்கு இலக்கியமாக வாழ்ந்த தமிழினம், இவ்வாறு கீழ்மைப்பட்டுப் போகலாமோ? ஆனமுதலில் அதிகம் செலவிட்டு அந்தரப்பட்டு, அநியாயச் செயல்களில் ஈடுபட நிர்ப்பந்திக்கப்படும் தமிழ் இளவல்கள் அவ்வையின் பாடல்களைப் படிப்பார்களா?

★

# 4

# மாறாத பெரியவர்கள்

*அட்டாலும் பால் சுவையில் குன்றாது அளவளாய்*
*நட்டாலும் நண்பு அல்லார் நண்பு அல்லர்*
*கெட்டாலும் மேல் மக்கள் மேல் மக்களே சங்கு*
*சுட்டாலும் வெண்மை தரும் - **(மூதுரை - 4)***

''இருவேறு உலகத்து இயற்கை திருவேறு தெள்ளியர் ஆதலும் வேறு'' என்று வள்ளுவன் பாடினான். அவனது பாட்டு, அனுபவத்தின் பிழிவு; உலகத்தின் இயற்கையை அனுபவத்தால் அறிந்த ஞானத்தின் சாறு. அவன் சொல்கிறான்: மனித இயற்கையின் இயல்பு இருவகைப் பட்டது. சிலர் பணமும் பலமும் படைத்தவர்களாக உள்ளார்கள். சிலர் அறிவும் அன்பும் படைத்தவர்களாக உள்ளார்கள். இவை எல்லாம் ஊழால் வருவன. இவற்றை யிட்டுப் பெருமைப்படுவதற்கும் சிறுமைப்படுவதற்கும் ஞாயம் இல்லை. ஆனால் ஒன்று மட்டும் உண்மை; விதியின் பயனாக ஒருவர்க்குப் பணமும், இன்னொருவர்க்குக் குணமும் வந்துவிட்டாலும், வாழ்வில் வாழ்வாங்கு வாழ வேண்டுமானால் அல்லது பணத்தின் பயனை அனுபவிக்க வேண்டுமானால் பணம் படைத்தவர்கள் குணத்தின் பெறுமதியை உணர்ந்து நடந்துகொள்ள வேண்டும்.

பணம் படைத்தவர்கள் குணம் படைத்தவர்களாக மாற முயலவேண்டும் என்பதை வற்புறுத்தவே இருவேறு



உலகத்து இயற்கை திருவேறு தெள்ளியராதலும் வேறு என்று விள்ளினான் வள்ளுவன்.

குணம் நிறைந்தவர்களின் குன்றன்ன பண்புகளை அவ்வை இன்னமும் அழகாகச் சொல்கிறாள் மேற்படி மூதுரை வெண்பாவில்.

நெருப்பிலிட்டு எப்படித்தான் காய்ச்சினாலும் பாலின் சுவையும் இனிப்பும் குறைவதில்லை. சுவாலை விட்டு எரியும் தீயிலே சங்கைப் போட்டு எரிஎரி என்று எரித்தாலும் சங்கிலே கரி பிடிப்பதில்லை; மாறாக எரிக்க எரிக்க அதன் வெண்மை அதிகரித்துக் கொண்டே போகும். சுடச் சுடரும் பொன் போலச் சங்கின் வெண்மை பளிச்சிட்டுத் தோன்றும்.

நல்லனவற்றின் பண்பும் நிறையும் இதுதான்; அல்லன வற்றின் பண்பு வேறு; ஆகாதவர்களின் இயல்பு மாறு. குணம் இல்லாதவர்களிடம் நீங்கள் எப்படித்தான் ஒட்டி உறவாடினாலும், குழைந்து வளைந்து மகிழ்ந்து பழகினாலும் அவர்கள் நண்பர்கள் ஆகமாட்டார்கள். ஒன்றல்லப் பத்தல்ல நூற்றாண்டு காலம் பழகி நட்புப் பாராட்டினாலும் அவர்கள் நண்பர்கள் ஆகமாட்டார்கள். அதாவது சுட்ட மண்ணும் பச்சை மண்ணும் ஒட்டமாட்டாததுபோல், ஒட்டி உறவாடும் பண்பைப் பெறமாட்டார்கள். இராமகிருட்டின பரமகம்சர் சொன்ன கதையில்வரும் பூனைபோல, வேண்டிய நேரத்தில் உரியகுணத்தைக் காட்டிவிடுவார்கள்.

குணம் படைத்தவர்களின் கதை வேறு. வறுமையோ வெறுமையோ அவர்களை வதைப்பதில்லை; உண்ணும் சோற்றுக்கு வழியில்லாமல் போனாலும், மானத்தை

மறைப்பதற்கு ஒரு முழத்துண்டு இல்லாமற் போனாலும் அவர்கள் குணத்தைத் துறக்கமாட்டார்கள். அரிச்சந்திரனும், நளமகாராசனும் குணவான்களுக்கு உதாரண புருடர்கள்; இருவேறு உலகத்து இயற்கையை உணர்ந்தவர்கள்; குணத்தின் மேன்மையைப் புரிந்தவர்கள்; பணத்துக்காகக் குணத்தை இழக்க மறுத்த செம்மல்கள். மாறுபட்டு வேறுபட்டுத் தமிழ்ச் சமுதாயத்துக்கு ஊறுவிளைக்க முன்னிற்கும் எட்டப்பர்கள், எட்டிலொன்றாக வற்றக் காய்ச்சினாலும் பாலின் இனிப்புக் குறையாது என்பதையும், நட்பும் தயையும் கொடையும் பிறவிக்குணம் என்பதையும் உணர்வார்களா?

★

# 5

# எல்லார்க்கும் ஒவ்வொன்று எளிது

ஈழத் தமிழர்கள் இக் காலகட்டத்தில் ஓர் உண்மையை உணரவேண்டும். எமக்கு எல்லாம் தெரியும் என்ற எண்ணம் எவருக்கும் வேண்டாம். எல்லாவற்றையும் நாம்தான் செய்ய வேண்டும் என்ற நினைப்பும் வேண்டாம். மற்றச் சோதரரின் உதவியின்றி வென்றிடுவோம் என்ற மமதையும் வேண்டாம். சேர்ந்து உழைத்து இலட்சியத்தை அடைவோம் என்று விரும்புவோம்.

எல்லோரும் இல்லாதவர்களே. ஏதோ ஓர் இல்லாமை ஒவ்வொருவரிடமும் உண்டு. இவ்வாறே எல்லோரிடமும் சில ஆற்றல்கள் உள்ளன. சிலரிடம் சில ஆற்றல்கள் நிறைய உண்டு, வேறு சில ஆற்றல்கள் குறையவுண்டு. எல்லோரிடமும் எல்லா ஆற்றல்களும் நிறைய இருப்ப தில்லை. இதை, ஓர் அளவுக்கேனும் உணர்ந்தமை யினாலேதான் தனி மனிதனாக வாழ்ந்த மனிதன், குடும்ப மனிதனாக வாழத் தலைப்பட்டான். மனிதன் மட்டுமல்ல, யானை, மான், மரை போன்ற மிருகங்கள் சமுதாயமாக வாழத் தலைப்பட்டமைக்கும் இதுதான் காரணம் போலும்! இந்த உண்மை மனிதர்க்கு விளங்காமல் இல்லை. ஆனாலும் சில சமயங்களில் சில மனிதர் இதை மறந்து விடுகிறார்கள். இவ்வாறு மறந்து போவதால் அவர்கள் மேற்கொள்ளும் முயற்சிகள் தோற்றுப்போகின்றன, அல்லது வெல்லமுடியாமல் தடைப்பட்டுப் போகின்றன.

இந்த வேலையை இந்த ஆள் இந்த வழிவகைகளைக் கையாண்டு இவ்வாறாக முடிக்கவல்லவன் என்று அறிந்தால் அவனை உனது வேலையில் சேர்த்து, காரியத்தை நிறைவேற்று என்று வள்ளுவனே சொல்லியிருக்கிறான். வள்ளுவன் சொன்னது பலருக்குப் புரியவில்லை என்பதை அறிந்தோ என்னவோ, வள்ளுவனின் சோதரி என்றும், அல்ல வென்றும் பலவாறாகச் சொல்லப்படும் அவ்வை அவருடைய கருத்தை வேறொரு விதமாகச் சொல்லிக் காட்டியிருக்கிறாள். எனக்குத் தெரியாதது என்ன, என்னால் முடியாதது என்ன என்று மார்தட்டிப் பேசும் பலரை அவள் சந்தித்திருக்கிறாள். தமிழறிவு தனக்கு நிறையவுண்டு என்று அவளே நினைத்திருக்கிறாள். அதனாலேதான் ஆடு மேய்க்கும் பையனாக வந்த முருகன், சுட்டபழம் வேண்டுமா? சுடாத பழம் வேண்டுமா? என்று கேட்டுத் தன்னைத் தலைகுனிய வைத்தானே என்று எண்ணிச் சாம்பினாள்; அந்தச் சாம்பலை ஒரு பாட்டிலும் காட்டினாள்.

கல்வி கரையில, ஒவ்வொருவருக்கும் ஒவ்வொன்று எளிது என்பதை மக்களுக்கு உணர்த்துவதற்காக அவள் ஒரு பாட்டுப் பாடித் தந்துள்ளாள். அவள் சொல்கிறாள் : தம்பிமாரே! வீரம் பேசவேண்டாம். எல்லோருக்கும் ஒரு மட்டுப்பாடு உண்டு. எல்லோருக்கும் சிலசில விடயங்கள் எளிதாக இருக்கும், பலபல விடயங்கள் கடினமாக இருக்கும். இது உலகத்து இயற்கை. இதை மறந்துவிடக்கூடாது. மனிதரை உதாரணம் காட்டிக் கூறினால் கோபித்துக் கொள்வீர்கள். ஆதலினால் சாதாரண பூச்சிகளையும், பறவைகளையும் மட்டும் உதாரணமாகக் காட்ட விரும்புகிறேன். வான் குருவியை நீங்கள் பார்த்திருப்பீர்கள். சிறிய குருவிதான். ஆனால் அந்தச் சிறுகுருவி மரத்திலே கட்டுகின்ற கூட்டைப் போன்ற வேலைப்பாடுடைய கூட்டினை வேறெந்தப் பறவையோ மனிதனோ கட்டமுடியுமா? அரக்கு என்ற மெழுகை உருவாக்குகின்ற வண்டு செய்யும் அற்புதங்களை வேறெவரும் செய்ய இயலுமா? பாம்பு குடியிருக்கும் கறையான் புற்றைப் போன்ற நுணுக்கமான ஒரு புற்றை வேறு எந்தப் பிராணியும் உருவாக்க வல்லதா? தேனீக்கள் கட்டுகின்றனவே தமக்கென்று ஒரு கூடு! எத்துணை வேலைப்பாடு! எத்தனை அறைகள்! எத்தனை சிறைகள்! இந்தத் தேன்கூட்டை விஞ்ஞான மனிதன்கூடக் கட்ட முடியுமா? அல்லது தேனீக்கள் தயாரித்துத் தருகின்ற தேனை ஆய்வுக்கூடங்களில் தயாரிக்கத்தான் இயலுமா? இவை எல்லாவற்றையும் விட்டு விடுங்கள். உங்கள் வீட்டிலே இருக்கிற சிலந்தி எத்துணைச் சித்திரவேலைப்பாடு கொண்ட கூட்டினை இம்மென்னு முன்பே கட்டிமுடித்து விடுகின்றது. யாருக்கு முடியும் இந்தச் சித்திர வித்தாரச் சிலந்திவலை?



உண்மை இதுவாக இருக்க, யாம் பெரிதும் வல்லோம் என்று வல்லமை பேசுவது நியாயமா? என்று கேட்கிறாள் அவ்வை. இப்போது அவளது பாடலைப் பார்ப்போம்.

*வான்குருவியின் கூடு வல்லரக்குத் தொல் கறையான்*
*தேன், சிலம்பி, யாவர்க்கும் செய்யரிதால் - யாம் பெரிதும்*
*வல்லோமே என்று வலிமை சொல வேண்டாம் காண்*
*எல்லோர்க்கும் ஒவ்வென்று எளிது*

***- (அவ்வை தனிப்பாடல்)***

தேனீக்கள் குடும்பத்திலே எத்தனையோ வேலையாட்கள்; சோம்பேறிகளும் உள்ளார்கள், இராசாவும் உண்டு, இராணியும் உண்டு, தொழிலாளியும் உண்டு, உளவாளியும் உண்டு, போராளியும் உண்டு, காவலாளியும் உண்டு. ஒவ்வொரு வருக்கும் அவ்வவர் பணி என்ன என்பது தெரியும். இந்த அறிவும் உணர்வும் உள்ளமையாலேதான் தேனீக்கள் மிகத் திறமான குடும்பமாக வாழ்ந்து வருகின்றன.

ஈழத் தமிழரான நாமும் இந்தக் காலகட்டத்தில் இந்த உண்மையை உணரவேண்டும். எமக்கு எல்லாம் தெரியும் என்ற எண்ணம் எவருக்கும் வேண்டாம்; எல்லாவற்றையும் நாம்தான் செய்யவேண்டும், செய்யமுடியும் என்ற நினைப்பும் வேண்டாம். மற்றச்சோதரரின் உதவியின்றி வென்றிடுவோம் என்ற மமதையும் வேண்டாம். எல்லோர்க்கும் ஒவ்வொன்று எளிது என்று உணர்ந்து, தேன்கூட்டு உறுப்பினர்கள் போல ஒன்று சேர்ந்து உழைப்போம்.

★

# 6

# உள்ளத்தால் உயர்ந்தவர்கள்

பெரியவர்கள் பெரியவர்கள்தான். உலகம் என்ன சொன்னாலும் அவர்கள் பெரியவர்கள்தான். உள்ளத்தால் உயர்ந்தவர்கள் வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட மாட்டார்கள். எந்தவிதப் புயல் வீசினாலும் எந்தவித அலை அடித்தாலும் இயல்பு மாறமாட்டார்கள். குணம் என்னும் குன்றேறி நின்றவர்கள் குணம் குறையமாட்டார்கள்; மனம் மாறமாட்டார்கள். அதுதான் பண்பு என்னும் குணத்தின் இலக்கணம். அத்தகைய பண்பு உள்ளவர்கள் ஒரு சிலரேனும் மூலை முடுக்குகளிலேனும் வாழ்ந்து கொண்டிருப்பதால்தான் இந்த உலகம் இன்னமும் இடிந்து போகாமல் இருக்கிறது என்று வள்ளுவன் விள்ளுகிறான். *''பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அஃதின்றேல் மண்புக்கு மாய்வதுமன்''* என்று சொல்லி விடுகிறார் பொய்யாமொழியார்.

அத்தகைய பண்பாளர்களின் இலக்கணத்தை விளக்க வந்த அவ்வை, நடைமுறை உவமையொன்றின் மூலம் அதனை விளக்குகின்றாள். இலண்டனுக்கு வந்துவிட்டதால் இலங்கையோடு சம்பந்தம் போய்விட்டது என்று நினைக் கின்ற ''தேசாபிமானத் தமிழர்''கூடச் சந்தனக் கட்டையை மறந்திருக்கமாட்டார்கள். தமிழ் ஈழக் கோவில்களிலே சந்தனப் பொட்டுத் தயாரிப்பதற்குச் சந்தனத்தின் கட்டையைத்தான் பயன்படுத்துவார்கள். சந்தனம் அரைப்பதற்கான கல்லிலே சிறிது நீரைத்தூவி, சந்தனக்கட்டையை அந்தக் கல்லில்

தேய்ப்பதன் மூலம் சந்தனப் பொட்டுக்கான குழம்பினைத் தயாரிப்பது ஊர்க்கோவில்களில் வழக்கம். இந்தச் சந்தனக் கட்டை சந்தனமரத்தின் கட்டை. நல்ல வாசமானது; நல்ல வைரமானது. இந்தக் கட்டை நெருப்புக் குச்சி போலத் தேய்ந்து போனாலும், அதனிடமிருந்து வெளிக்கிளம்பும் நறுமணம் மாறாது. தேய்த்தாலும் போகாது; அவித்தாலும் போகாது. ஏனென்றால் நறுமணம் சந்தனத்தின் பண்பு.

உள்ளத்தால் உயர்ந்தவர்கள் பண்பின் உறைவிடம். என்னதான் கேடு வந்தாலும் அவர்கள் தங்களுடைய நிலையிலிருந்து, பண்பிலிருந்து வழுவமாட்டார்கள்.

நாடிழந்து, நாடிவந்த மனைவியையிழந்து, தேடிவந்த மகனையிழந்து, கூடிவந்த மந்திரியையுமிழந்து, கேடுவந்து கொடுநிலைக்குள் ஆழ்த்தியபோதும், சொன்னசொல் மாறாமல் வாழமுடிந்ததே என்று பெருமைப்பட்ட அரிச்சந்திரனின் கதை உத்தமரின் இலக்கணத்துக்கு ஓர் உதாரணம். அந்த உதாரணத்தை வாழ்க்கை இலட்சியமாகக் கடைப்பிடித்த காந்தி, மக்களுள் மாணிக்கம் எனப்படும் மகாத்மா ஆனார். அப்படியான உத்தமர்களின் இயல்பை அவ்வை நாலடி வெண்பாவில் வடித்துத் தந்திருக்கிறாள். இதோ அந்த மூதுரை வெண்பா.

*சந்தன மென் குறடு தான் தேய்ந்த காலத்தும்*
*கந்தம் குறைபடாது ஆதலால் - தந்தம்*
*தனம் சிறியர் ஆயினும் தார் வேந்தர் கேட்டால்*
*மனம் சிறியர் ஆவரோ மற்று* - ***(மூதுரை - 28)***

★

# 7
# பேரின்பம் என்றால் என்ன?

வள்ளுவன் காட்டிய வழி என்ன என்பதையிட்டு அவ்வையார் வாழ்ந்த காலத்திலும் வாதப்பிரதிவாதங்கள் நிகழ்ந்துள்ளன. அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு விடயங்கள் பற்றி வடமொழி இலக்கியங்களும் தரும சாத்திரங்களும் பேசுகின்ற வேளையில், திருவள்ளுவர் அறம், பொருள், இன்பம் என்ற மூன்று செய்திகள் பற்றித்தானே கூறியிருக்கிறார். இதற்கு என்ன காரணம் என்று கேள்வி எழுப்பிச் சர்ச்சை செய்தார்கள் அந்த நாளில். இந்தச் சர்ச்சை பற்றி அவ்வையாரிடத்தில் கேட்டுத் தெளிவு பெறலாம் என்று எண்ணிச் சிலர் அவ்வையாரின் வீட்டுக்குச் சென்றார்கள்.

அவ்வையாரின் வீட்டுக்குப் போனவர்கள் அறிவாளர்கள் அல்ல. எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டு ஒழுக வேண்டியவர்களான அந்தணர்களும் அல்ல. செங்கல்லையும் பொன்னோட்டையும் வேறுபிரித்துப் பார்க்காத நிலையில் வாழும் யோகியர்களும் அல்லர். அவ்வையாரிடம் போனவர்கள் வெறும் வியாபாரிகள்; கல்லில் நார் உரிக்கக் கற்ற கனவான்கள்; சாப்பிட்ட கையை உதறினால் ஒட்டியுள்ள ஒரு சோறுகூட வீழ்ந்து விடுமே என்று அஞ்சிக் கையை உதறாத கருமிகள்; ஒருபடி அரிசிக்குள் ஓர் அகப்பை குறுணலையோ பெருமணலையோ கலவாமல் செய்கின்ற அரிசி வியாபாரம் என்ன வியாபாரம் என்று வாணிகத் தத்துவம்

பேசுகின்றவர்கள்; அறுபது பென்சு முடிகின்ற அனிக்கா அரிசிமாவை ஒரு பவுண் முப்பத்து மூன்று பென்சுக்கு விற்கத் தெரியாவிட்டால் கடையை அடித்து மூடிவிட்டு அரசாங்கப் பிச்சைப் படியில் வாழவேண்டும் என்று நினைப்பவர்கள். அப்படி அநியாயப் போக்கையே வாழ்வின் இலட்சியமாகக் கொண்டிருந்தாலும், சமயம், இலக்கியம் என்பன சம்பந்தப் பட்ட விடயங்களில் அக்கறையும் நாட்டமும் கொண்டவர்கள் போல நடிப்பவர்கள்; சுருங்கச் சொன்னால் நல்ல வேடதாரிகள்! ஆகவே அவர்கள் போனார்கள்; ஆன்ம விசாரத் தத்துவம் பேச அவ்வையிடம் போனார்கள்.

அவர்களுள் ஓரிருவரை அவ்வைக்கு ஏற்கனவே தெரியும், கேள்விப்பட்டிருக்கிறாள். கட்டிய மனைவி கண்கலங்கக் கண்ட கண்ட பெண்களையெல்லாம் நாடியலைந்து உடலும் உள்ளமும் களைத்து வாழ்வில் பிடிப்பின்றித் தட்டுத் தடுமாறும் வியாபாரிகளும் அந்தக் குழுவில் அடங்கி யிருந்தனர்.

அவர்கள் கேட்ட கேள்வி அவ்வையைத் திணற வைத்தது. அப்படிப்பட்ட பண்பட்ட கேள்வியை அவர்களிடமிருந்து அவள் எதிர்பார்க்கவில்லை. தன்னைப் பார்க்க வந்திருந்த வர்களை இன்னொருமுறை ஏற இறங்கப் பார்த்துவிட்டு அவ்வை மறுமொழி சொன்னாள். ஆரியர்கள் அறம் பொருள் இன்பம் வீடு என்று சொன்னதும், திராவிடரின் அறநெறிச் சாரத்தைக் குறள் என்னும் அமுதின் மூலம் வள்ளுவன் சொன்ன அறம் - பொருள் - இன்பமும் ஒன்றே. அறத்தையும், பொருளையும், இன்பத்தையும் முறையான முறையிலே



ஈட்டினால், வீடு என வடமொழியாளர் பேசுகின்ற நிலை இயல்பாகவே கிட்டிவிடும். இதனாலேதான் வீடு என்ற ஒரு தனிநிலை இருப்பதாகத் தமிழரோ வள்ளுவனோ சொல்ல வில்லை. இன்னும் சொல்கிறேன் கேளுங்கள்.

அறம் என்றால் என்ன என்று நினைக்கிறீர்கள்? ஈவதுதான் அறம்; அற்றார்க்கு ஈவதுதான் அறம்; தன் நோய் போலப் பிறர் நோயைப் பார்ப்பதுதான் அறம்; ஊனெடுத்த உயிர்க்கெல்லாம் உணவிடுதல்தான் அறம். சுருக்கமாகச் சொன்னால் இரங்குதல்தான் அறம்.

பொருள் என்பது என்ன?

தீவினையின் சுவடு அடியோடு படாத வகையில் ஈட்டப்படுவதுதான் பொருள், அதாவது அறமான முறையில் ஈட்டப்படுவதுதான் பொருள்.

இன்பம் என்றால் என்ன?

காதலராகிய இருவர் கருத்து ஒருமித்துக் கண்ணிரண்டும் ஒன்றையே காண்பதுபோல விட்டுக் கொடுத்துத் தாம் வாழும் சமுதாயத்திற்கு உதவும் வகையில் ஆதரவாக வாழ்வதுதான் இன்பம்.

ஈதலாகிய அறவழியில் நின்று, தீதற்ற வழியில் பொருளீட்டிக் கோதறக் காதல் என்னும் இல்லறத்தை நடத்துகின்றவன் அல்லது நடத்துகின்றவள், எல்லையற்ற பரம் பொருளைப் புரியமுடியும்; தெய்வமாக மாறமுடியும்; அந்தப் பரம் பொருளைப் புரிகின்ற தெய்வ நிலைதான் பேரின்பவீடு. அதாவது அறம் பொருள் இன்பம் என்கின்ற

நிலைகள் ஒருவனைக் கொண்டுபோய் விடுகின்ற இடமே பேரின்பவீடு.

அவ்வை, பாட்டினால் அளித்த பதில் இதுதான்:-

*ஈதல் அறம், தீவினை விட்டு ஈட்டல் பொருள் எஞ்ஞான்றும்*
*காதல் இருவர் கருத்தொருமித்து - ஆதரவு*
*பட்டதே இன்பம் பரனை நினைந்து இம்மூன்றும்*
*விட்டதே பேரின்ப வீடு - **(அவ்வை தனிப்பாடல்)***

★

# 8

# வாலிபம் போகாத வயோதிபம்

*நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலமிக்க*
*நல்லார் சொல் கேட்பதுவும் நன்றே - நல்லார்*
*குணங்கள் உரைப்பதுவும் நன்றே அவரோடு*
*இணங்கி இருப்பதுவும் நன்று - **(மூதுரை - 8)***

உலகத்தின் இயற்கை விந்தையானது. ஒருவரோடு நன்றாகப் பழகியதன் விளைவாக ஒருசிலர் மீது மரியாதையும் மதிப்பும் வைக்கிறோம். நமக்கு உதவினார்கள், உதவுகிறார்கள் என்பதற்காகச் சிலருக்கு மதிப்பும் மரியாதையும் அளிக்கிறோம். நன்கு பழகாமலும் உதவி பெறாமலும் இருந்தும் கூட, சிலரைப்பற்றிக் கேள்விப்பட்டவுடனும் அவர்கள்மீது அளவுகடந்த அன்பும் பக்தியும் பயமும் மதிப்பும் வியப்பும் ஏற்படுகின்றன நமக்கு. ஒருபோதும் பழகாத, உதவி பெறாத ஆயிரக்கணக்கான யாழ்ப்பாண மக்களின் உள்ளத்தில் இடம்பெற்றிருக்கும் ஒருசில உத்தமர்களின் வரிசையில் அண்மையில் அமரரான ஒறேற்றர் சுப்பிரமணியம் அவர்களும் இடம் பெறுகின்றார். அப்படியான உத்தமர்களையே, தமக்கென வாழாப் பிறர்க்குரியாளர்களையே, உலகம் ''நல்லார்'' எனப் போற்றுகின்றது. அவனால் அல்லது அவரால் எனக்கு என்ன ஆகப்போகின்றது என்பதைப்பற்றி எண்ணாமல், என்னால் இதைச் செய்யக்கூடியதாக உள்ளது; ஆகவே இயன்றதை அவருக்குச் செய்வேன் என்று

மனமுவந்து, முன் வந்து எவன் உதவுகின்றானோ அவனே நல்லவன் எனப்படுகின்றான். அவனையே ''நடுவூரில் பழுத்த பழுமரம்'' என்று வருணிக்கிறான் வள்ளுவன். அழுக்காறு அவா, வெகுளி இன்னாச்சொல் என்கிற நான்கும் இல்லாமல் நல்லதை மட்டுமே செய்யவேண்டும் என்று அவ்வையார் கூறும் நல்லவர்கள் இவர்களே.

அப்படிப்பட்ட நல்லவர்களைக் காண்பதுவும் நன்றே என்கிறாள் அவ்வை. ஆகவே அப்படிப்பட்ட நல்லவரான அந்த ஒறேற்றர் அவர்களைக் காணவென்று 1993ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் வித்துவான் க.ந.வேலன் அவர்களும், நானும் ஒரு சில நண்பர்களும் இசுக்கொத்லாந்தில் ஆட்லிப்பூலில் உள்ள அவரது இல்லத்துக்குச் சென்றோம். நலம்மிக்க அந்த நல்லாரின் சொற்களைக் கேட்டு மெய் மறந்தோம். எவரைப்பற்றியும் குறைகூறாமல், நிறைவுகளை மட்டும் பேசிக்கொண்டிருந்த அவரது வார்த்தைகள், கேட்டுக் கொண்டிருந்தோரின் மன மாசினை அறுக்க உதவின. மூன்று மணிநேரம் அவரோடு உரையாடி உளம் தெளிந்த நிலையில் நான் அவரை நோக்கி ஒரு கேள்வி கேட்டேன். ''ஐயா! உங்களுக்கு வயதோ தொண்ணூறு; இளமை தளராமல் வாக்கு மாறாமல் கலகலப்பாய் இருக்கிறீர்களே! அதன் இரகசியம் என்ன?'' என்று வாய்விட்டுக் கேட்டேன்.

பெரிய சிரிப்புச் சிரித்தபடி என்னை நோக்கி, ''நல்லாக் குடிச்சனான் தம்பி, அதுதான் காரணம்'' என்றவர், சிரிப்பு ஓய்ந்ததும், நிதானமாகச் சொன்னார்: ''தம்பி கலகலப்புக்குக் காரணம் நான் கோபம் பாராட்டுகிறதில்லை. வஞ்சம் தீர்க்க நினைப்பதும் இல்லை. அழையாதவன் வீட்டுக்குள்ளும் நுழைந்து உதவி செய்கிறதுதான் என்னுடைய சுபாவம்; கடவுள் தந்த கொடை; இதுதான் என்னுடைய சந்தோசத்துக்கும் கலகலப்புக்கும் காரணம் என்று நினைக்கிறேன்'' என்றார். உண்மைதான் என்றார் ஒறேற்றரின் விசிறியான வித்துவான் வேலன் அவர்கள்.



ஒறேற்றர் என்ற நல்லாரின் பூதவுடல் போய்விட்டது; புகழுடம்பு நிலைத்திருக்கும். அவரின் இலட்சியங்கள் வாழும். நல்லாரின் குணங்களை உரைப்பது நமது உள்ளத்தைப் பண்படுத்தும். ஆகவே அவரது நல்ல குணங்களை உரைப்போம். அவர்காட்டிய 'உதவும் பண்பை' அவ்வையார் கூறிய வழியில் வளர்ப்போம். அதன் மூலம் அவ்வையார் காட்டிய வழியில் நடப்போம்.

★

# 9

# ஆங்காலம் ஆகும் போங்காலம் போகும்

*வருந்தி அழைத்தாலும் வாராத வாரா*
*பொருந்துவன போமின் என்றால் போகா - இருந்து ஏங்கி*
*நெஞ்சம் புண்ணாக நெடும்தூரம் தாம் நினைந்து*
*துஞ்சுவதே மாந்தர் தொழில் - **(நல்வழி - 5)***

இன்று நம் மக்களுக்கு இருக்கின்ற பலவிதமான இருதய நோய்க் கோளாறுகள், நூறு ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த மக்களுக்கு இருந்தனவோ என்பதை யாரேனும் கணக்கிட்டார்களோ தெரியவில்லை. ஆனால் இன்று நம்மிடையே இருதய நோய்கள் மலிந்துவிட்டன. இந்த நோய்களிற் சில சாப்பாட்டுப் பழக்கத்தினால் வருவன. வேறு சில மனச் சங்கடங்களால் வருவன. சாப்பாட்டுப் பழக்கத்தினால் வரும் இருதய நோய்களைச் சாப்பாட்டு முறையில் மாற்றங்களைச் செய்வதன் மூலம், ஓரளவுக்கேனும் மாற்றிவிட முடியும். ஆனால் மனச் சங்கடங்களினால் வரும் இருதய நோய்களைக் குணப்படுத்துவது அவ்வளவு சுலபம் அல்ல. ஏனென்றால் அழுதழுதும் பிள்ளை அவளே பெறவேண்டும் என்பதுபோல், என்னுடைய மனச் சங்கடத்தை நான்தான் அகற்றலாம். மனநோய் நிபுணர்கள் ஆலோசனைகள் கூறலாம். ஆனால் மாற்றும் மருந்தும் என்னிடம்தான் உள்ளன.

இந்த நாட்டில் வாழும் தமிழருக்கு மனச் சங்கடங்களும், மனச்சஞ்சலங்களும் சற்று அதிகம். இந்தச் சஞ்சலங்கள்



நல்லனவல்ல. அவை நமது வாழ்காலத்தைக் குறைத்துவிட வல்லன. புறநாட்டுச் சூழ்நிலையில் வாழும் நம்மவர்க்கு இந்தச் சஞ்சலங்கள் இருப்பது இயல்பு என்று கூடச் சிலர் சொல்லலாம். பிறந்த நாட்டில் ஈட்டியவற்றையெல்லாம் பறிகொடுத்ததோடு, உற்றார், உறவினர்களையும் இழந்து தவிக்கும் எம்மவர்க்கு, ஆசைகளும் எதிர்பார்ப்புகளும் ஆதங்கங்களும் நிறைந்து வழிகின்றன. இதனால் நெஞ்சக் கனதி தமிழருக்கு அபரிமிதமாக உள்ளது. இந்த நெஞ்சக் கனப்புக்கு முக்கிய காரணம் என்ன என்பதை அவ்வையார் மேற்படி பாடலில் தெளிவாகச் சொல்கிறாள்.

ஆனையிறவும் மாகோவும் தாண்டி வந்தபின்னரும், எல்லாம் எம் எண்ணப்படி நடக்கவேண்டுமென்று நினைக்கிறோம் நாங்கள். அரசியல்வாதிகளும் நினைக்கிறார்கள், அடாவடித்தனக்காரரும் நினைக்கிறார்கள். தம் மகள் தாம் சொன்னபடியே படிக்கவேண்டும்; தாம் தேர்ந்தெடுத்தவனையே திருமணம் செய்யவேண்டும் என்று பெற்றோர் விரும்புகின்றனர். மானிப்பாயிலே தொட்டாட்டு வேலைக்கு ஆள் வைத்துவிட்டு, உல்லாசமாக விசிறித் திரிந்தமாதிரி, இந்த நாட்டிலும் எசமானியாக வாழ வேண்டுமென்று தமிழ்ப் பெண்கள் ஆசைப்பட்டு அங்கலாய்க்கிறார்கள். அங்கே டொக்டர்மாராகவும், வழக்கறிஞர்களாகவும், எஞ்சினியர்களாகவும் இருந்து பதவிப் பலத்தைக் காட்டி வாழ்ந்ததுபோல, இந்த நாட்டிலும் ஆட்டிப்படைத்து வாழ வேண்டுமென்று பழைய பதவிக்காரர் ஆசைப்படுகிறார்கள். ஆனால் இந்த நாட்டின் சமூக அமைப்பே வேறு. தாய் பிள்ளை உறவும், பெரியோர் சிறியோர் உறவும், தாழ்ந்தோர் மேலோர்

உறவும், சட்டமுறைகளும் வேறு. ஊரிலே சென்ற சொல்லும் பவுசும், இந்த நாட்டில் செல்லவில்லை; பெற்றோர்க்கும் செல்லவில்லை, பதவிக்காரருக்கும் செல்லவில்லை, அரசியல் காரருக்கும் செல்லவில்லை. இது பெரிய ஏமாற்றம்; அதிர்ச்சி என்றுகூடச் சொல்லலாம். இதன் விளைவாக ஒருமாதிரியான நெஞ்சப்பாரம், நெஞ்சக்கனப்பு, நெஞ்சமுத்தம் ஏற்படுகிறது.

இந்த மாதிரியான நெஞ்சமுத்தம் அன்றைய நாளிலும் ஓரளவுக்கேனும் இருந்திருக்கிறது என்பதை மேற்படி அவ்வைப் பாடல் காட்டுகிறது. விதி, ஊழ் என்ற சங்கதிகளில் சிலருக்கு நம்பிக்கை இல்லாமல் இருக்கலாம். ஆனால் பொருத்தம் என்ற ஒரு விடயம் இருக்கவே இருக்கிறது. வாகனப்பொருத்தம், மாட்டுப்பொருத்தம், தாலிப் பொருத்தம், (நாய்ப்பொருத்தம், பூனைப்பொருத்தம்) என்று பொருத்தங்கள் பல, என்று அவ்வை சொல்கிறாள். உங்கள் விருப்பும் வெறுப்பும் ஒருபக்கம் இருக்கட்டும். நீங்கள் எப்படித்தான் வருந்தி வருந்திக் கூப்பிட்டாலும் பொருத்தம் இல்லாதவை உங்களிடம் வரமாட்டா. இவ்வாறே பொருத்த மானவற்றை நீங்கள் ஓடோட விரட்டி அடித்தாலும் அவை உங்களை விட்டு ஓடிப்போகமாட்டா! இது முக்காலும் உண்மை.

இந்த உண்மையை உணராமல் நீங்கள் எண்ணி யெண்ணி ஏங்கி அழுவதால் பயனில்லை. கடமையை மட்டும் செய்யுங்கள்; உங்கள் செயலின் விளைவு உங்கள் கையில் இல்லை. எதையும் எதிர்பார்க்காதீர்கள். எதைச் செய்தாலும் கடமையாகச் செய்யுங்கள். பிள்ளைக்குச் செய்தாலும் சரி, பெண்சாதிக்குச் செய்தாலும் சரி, நண்பனுக்குச்



செய்தாலும் சரி, ஏன் இறைவனுக்குச் செய்தாலும் சரி, 'பற்றின்றிச்' செய்யுங்கள்; பலனை எதிர்பாராமல் செய்யுங்கள். பொருந்துவன உங்களுடன் நிற்கும். பொருந்தாதன உங்களை விட்டு ஓடிவிடும். பொருந்தும் காலம் வந்தால் திரும்பி வரும். இந்த உண்மையை உணராமல் எண்ணியெண்ணிக் கவலைப் பட்டு, நெஞ்சத்தில் பழுவையும் பாரத்தையும் ஏற்றி இருதய நோய்களுக்கு வழிவகுப்பது நல்லதல்ல என்கிறாள் அவ்வை. சொந்தப் பண்பாட்டுத் தளங்களிலிருந்து அறுபட்டுவந்து, அந்நியப் பண்பாட்டுத் தளத்தில் வேரூன்ற முயல்கையில், பல்வேறுபட்ட, குடும்பப் பூகம்ப இடிகளையும், சமுதாய முரண்பாடுகளையும், அதிர்ச்சிகளையும் ஏற்க நிர்பந்திக்கப் படும் தமிழ்ச்சாதிக்கு ''வருந்தியழைத்தாலும் வாராத வாரா, பொருந்துவன போமின் என்றால் போகா'' என்ற நல்லடிகள் நல்ல அவுடதங்களாக அமையட்டும்.

★

# 10

# உண்பது நாழி உடுப்பது நாலுமுழம்

*உள்ளது ஒழிய ஒருவர்க்கு ஒருவர் சுகம்*
*கொள்ளக் கிடையா குவலயத்தில் - வெள்ளக்*
*கடல் ஓடி மீண்டு கரை ஏறினால் என்*
*உடலோடு வாழும் உயிர்க்கு - **(நல்வழி - 7)***

திரைகடல் ஓடியும் திரவியம் தேடு என்பது முதுமொழி. தமிழர் திரைகடல் ஓடியவர்கள்தான்; திரவியம் தேடிய வர்கள்தான்; கப்பலோட்டியவர்கள்தான். ஆழிக்குமரன் ஆனந்தனைப் போலவும் நவரத்தினசாமி போலவும், கடலை நீந்திக் கடந்து சாதனை நிகழ்த்தியவர்கள்தான். ஆனால் நெடுங்காலமாகத் திரைகடல் ஓடித் திரவியம் சேர்த்தபோதும், அவர்களால் நிரந்தரமாக நிம்மதியாக வாழமுடியவில்லை; தமக்கென்று ஒரு நாட்டினை, அரசினை அமைக்க முடிய வில்லை. ஒரு காலத்தில் இந்தியத் துணைக்கண்டம் முழுவதுக்குமே சொந்தக்காரனாக இருந்த தமிழனுக்குத் தமிழ் நாட்டில் கூட உரிமையில்லை, இலங்கையிலும் உரிமை யில்லை. மலாயாவிலும் உரிமையில்லை, சிங்கப்பூரிலும் இல்லை, பாலித்தீவிலும் இல்லை, தென்னாப்பிரிக்காவிலும் இல்லை, மொரீசியத் தீவிலும் இல்லை. சென்ற சென்ற இடங்களில் எல்லாம் அவன் சின்னச் சாதியாகவே, சிறு மனத்தனாகவே வாழ்ந்து வருகிறான். அண்மைக் காலங்களில் சிங்களச் சில்லறைகளின் சின்னத்தனம் பொறுக்கமாட்டாமல்



அகதிகளாகக் கிளம்பிய இலட்சக்கணக்கான ஈழத்தமிழர் அவுத்திரேலியா, பிரான்சு, சேர்மனி, சுவிற்சர்லாந்து, இங்கிலாந்து போன்ற நாடுகளில் நடந்துகொள்கின்ற நிலையை எண்ணும்போது கவலையும் விரக்தியும் நம்மை வாட்டு கின்றன. காரணம் காணமுடியாமல் தவிக்கிறோம்.

பிறந்த நாட்டில் அனுபவித்ததைவிட மேம்பட்ட பொருளாதார வசதிகளை அனுபவித்துவரும் ஈழத் தமிழினம், தன் உடையையும் மறந்து, ஆசாரங்களையும் மறந்து, பழக்க வழக்கங்களையும் மறந்து, கண்டபாட்டில் கொண்டையை வெட்டியும் நீட்டியும் மனம் போன போக்கில் போவதை எண்ணிப் பார்த்தபோது, அவ்வையாரின் மேற்படி பாடல் நினைவுக்கு வந்தது. ''அளந்ததுதான் அனுபவிக்க முடியும்'' என்ற தத்துவபோதனை தலைக்குள் நுழைந்தது.

மற்றவர் வாழ்வதைப்போல நாம் வாழவேண்டுமென்று நாம் ஆசைப்பட்டாலும், நமக்கு அளந்ததற்கு மேலாக எதையும் நாம் அனுபவிக்க முடியாது. பிறந்த இடத்தில் கிடைக்கவில்லையே என்ற ஆதங்கத்தால் வேற்று நாட்டுக்குப் போய் அங்கே நிறையச் செல்வம் சேர்த்து வீடுமனை வாங்கிச் சீமானாக ஆகினாலும், விதிப்படிதான் அனுபவிக்க முடியும். அதற்கு மேல் அனுபவிக்க முடியாது. ஆழ அமுக்கி முகக்கினும் நாழி முகவாது நால் நாழி.

ஈழத்துக்கு வெளியே வாழும் ஈழத் தமிழருக்கு எல்லா மிருக்கின்றன; ஆனால் அமைதியில்லை, ஒற்றுமையில்லை. தமிழனின் தலைவிதி இன்னும் மாறவில்லைப் போலும்! தலைவிதி சும்மா மாறாது. அது மாறும் வண்ணம் உழைக்க

வேண்டும். ஏனைய மக்களைப் பற்றி நினைப்பதுவும், விட்டுவிட்டு வந்த உற்றார் உறவினர் பற்றி நினைப்பதும், அவர்களுக்கு உதவுவதும்தான் அந்த உழைப்பு. உதவி செய்தல் என்னும் உழைப்பில் தமிழன் இறங்கும் வரை அவனது ஊழ்வினை மாறாது. ஊழ்வினை மாறாத வரைக்கும் உலைச்சல் தொடரும். இதைத்தான் அவ்வையும் சொல்கிறாள்.

*வெள்ளக் கடலோடி மீண்டு கரையேறினால் என்*
*உள்ளது ஒழிய ஒருவர்க்கு ஒருவர்*
*சுகம் கொள்ளக் கிடையாது.*

நாங்கள் ஈழத்துக்குத் திருப்பியனுப்பப்பட்டால் அங்கிருக்கும் உறவுகள்தான் எங்களுக்குத் தஞ்சம். இன்று அங்கு வாடும் அவர்களுக்கும் காலம் வரும். நாங்கள் வெள்ளக் கடலோடிய பின்னர், மீண்டும் ஈழக்கரையில் போய் இறங்கும் போது எமக்கு யார் துணை? சிங்களவரா? அந்த வீரத் தமிழர்கள்தான்.

★

# 11

# அவிழ்ச் சுவையா தமிழ்ச் சுவையா?

*கவை ஆகிக் கொம்பு ஆகிக் காட்டகத்தே நிற்கும்*
*அவை அல்ல நல்ல மரங்கள் - சபை நடுவே*
*நீட்டு ஓலை வாசியா நின்றான் குறிப்பு அறிய*
*மாட்டாதவன் நல்மரம் - **(மூதுரை - 13)***

மன்னனையும் மாசறக் கற்றவனையும் ஒப்பிட்டுப் பார்த்தால் மன்னவனை விடக் கற்றவனே சிறந்தவன் என்று மன்னவனின் முன்னின்றே மானத்தோடு பேசியவள் அவ்வை. கல்விக்கும், கற்றவர்களுக்கும், கற்பிப்பவர்களுக்கும், கல்வி பரப்புபவர்களுக்கும் முதலிடம் கொடுத்த இனம் தமிழினம். அதனாலேதான் கல்வி மறுக்கப்பட்டதாலும் கலாச்சாரம் மறுக்கப்பட்டதாலும் சொந்த ஈழத்தை விட்டு மேற்கு நாட்டுக்கு வந்த பின்னரும், ஈழத் தமிழர் கல்வித் துறையில் முன்னணியில் நின்று வீறு நடை போடுகிறார்கள்.

எனினும், எவ்வளவு இடித்துச் சொல்லியும் கல்விக்கோ கற்பிப்பவர்களுக்கோ மதிப்புத் தராத மந்தைக் கூட்டங்களும் மரக்கட்டைகளும் அவ்வையின் காலத்திலேகூட வாழ்ந்திருக்கிறார்கள். அப்படியானவர்களை அவ்வை ஒதுக்கி விடவில்லை. இடித்துச் சொல்வதன் மூலம் அவர்களைக் கரைசேர்க்க அவ்வை முயன்றிருக்கிறாள். அந்த முயற்சியை விளக்குகின்ற ஒரு பாடலை இன்றைய சூழலில் மறுபடியும் சுவைத்துப் பார்ப்பது பயனுள்ளதாக இருக்கும்.

காட்டிலே நன்கு வளர்ந்து கிளைகள் எறிந்து கொப்புக்கள் விட்டு விருட்சமாக நிற்கின்ற அசரங்களைத்தான் பலர் நல்ல மரங்கள் என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவையன்று நல்ல மரங்கள். அசல் மரங்கள் என்று சொல்லக் கூடியவை நம்முடைய மத்தியிலே நடமாடும் மரங்களாக உள்ளன. நடமாடும் மரங்களாக மட்டுமல்லாமல், நாசம் செய்யும் நீச மரங்களாகவும் நச்சு மரங்களாகவும் உள்ளன. நச்சு மரங்களாகவும் நீச மரங்களாகவும் உள்ள அந்தச் சமூக மரங்கள் எவை தெரியுமா? சபை சந்தியிலே ஒருவன் எழுதி விநியோகிக்கின்ற அல்லது 'வாசி பார்க்கலாம்' அல்லது 'வாசித்துப் பயன்பெறு' என்று நீட்டுகின்ற ஒரு நூலையோ, ஏட்டையோ, பத்திரிகையையோ, நாளிதழையோ வாசித்துப் பொருள் புரிந்து, கொள்ளுவன கொண்டு, தள்ளுவன தள்ளி நடந்து கொள்ள முடியாத மனிதனை விடத் திறமான மரம் உலகத்தில் இல்லை என்கிறாள் அவ்வை.

சபையிலோ கூட்டத்திலோ நீட்டப்படுகின்ற அல்லது விற்கப்படுகின்ற ஏட்டைப் படித்து நாட்டைப் புரிந்து நல்ல படியில் அன்பு வழியில் நடக்க மாட்டாதவன் மட்டுமல்ல அவ்வை சொல்லும் அசல் மரம். கல்வியைக் காமுறும் தமிழர் சமுதாயத்துக்குப் பயன்படும் வண்ணம் அச்சிட்டு வெளி யிடப்படும் வெகுசன சாதனங்களின் வெளியீடுகளைப் படித்துப் பொருள் கொள்ள மாட்டாமல் அத்தகைய சாதனங்களுக்கு அழிவு நேரும் வண்ணம் அக்கிரமச் செயல்களில் ஈடுபடுவோரும் அவ்வையின் பார்வையில் மரங்களே! அந்த அக்கிரமங்கள் புரிவோர் அவ்வை பாடலைச் செவ்வையாகப் பார்க்கவேண்டும்.

★

# 12

# உலக்கை வேண்டாம் ஊசியே போதும்

அவதி, அவசரம், ஆசை, ஆத்திரம், பிடிவாதம், சுயநலம் என்பவற்றுக்கு அடிமையாகிற எந்த மனிதனுக்கும் அழிவே அவனது இறுதி முடிவாகிறது.

வன்முறையைவிட மென்முறைதான் விரும்பத்தக்கது என்றும், வன்பைவிட அன்புதான் நல்லவழி என்றும் பெரியவர்கள் பல காலமாகச் சொல்லி வந்துள்ளார்கள். ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த வள்ளுவனும் மெல் முறையே நல்முறை என்று வழுத்தி வழுத்திச் சொன்னான். உனக்குத் துன்பம் விளைவித்தவனைத் தண்டிக்க வேண்டு மானால் அவனைப் போல நீயும் அவனுக்குத் தீங்கு செய்ய வேண்டும் என்பதில்லை. அவன் உனக்குச் செய்தது போன்ற தீங்கினை அவனுக்குச் செய்வதற்குப் பதிலாக அவனுக்கு நன்மை செய்துவிடு. நீ செய்கின்ற அந்த நன்மைச் செயல் அவனுக்குப் பெரிய தண்டனையாக அமையும் என்று வள்ளுவன் சொன்னான். நீ எய்த விரும்புவதை இனிய சொல் மூலமும் இனிய செயல் மூலமும் செய்யக் கூடியதாக இருக்கும்போது, இன்னாத சொற்களையும் செயல்களையும் பயன்படுத்துவது, பழம் இருக்கத் தக்கதாக அதை விடுத்துக் காயை விரும்புவது போன்ற அறிவற்ற செயலாகும் என்று இன்னோரிடத்தில் பொய்யாமொழிப் புலவன் புகன்றான்.

வள்ளுவருக்குப் பின்னர் வந்த இயேசு நாதரும் இதே கருத்தையே இன்னமும் இதமாகச் சொன்னார். ஒருவன்

உனக்கு ஒரு பக்கக் கன்னத்தில் அறைந்தால் ''அன்பனே ஆசை தீராவிட்டால் மற்றக் கன்னத்திலும் அடி என்று மற்றக் கன்னத்தையும் நீட்டு'' என்று இயேசு நாதர் சொன்னார். வள்ளுவரோ இயேசுநாதரோ கோழையாக இரு என்று சொல்லவில்லை. மற்றவனுடைய அறியாமையை விளங்கிக் கொள்கின்ற வீரனாக இரு; பொறுமை என்ற அந்த மென் குணமாகிய வீரம் உனக்கும் ஆறுதல் தரும்; உனக்கு இன்னல் விளைத்தவனையும் திருத்தும்; உலகத்துக்கும் அமைதியை ஏற்படுத்தித் தரும் என்ற பொருளிலேயே அவர்கள் அப்படிச் சொன்னார்கள் என்பதை நாம் உணர வேண்டும்.

வள்ளுவரும் இயேசுநாதரும் சொன்ன கருத்தை அவ்வையாரும் ஒரு வெண்பாவில் எடுத்துக் கூறியுள்ளார். இயற்கையில் நாம் காணுகின்ற நிகழ்ச்சிகளை உதாரணம் காட்டுவதன் மூலம் தனது கருத்தை வெளிக் காட்டுகின்றாள் அவ்வை. யானையின் தோல் மிகவும் தடிப்பானது, உரமானது. இதனாலேதான் யானைப் பாகர் அதை முடுக்க விரும்பும் போது, அதன் உடம்பில் அடிக்காமல் அங்குசம் என்ற கருவியை அதன் செவிக்குள் நுழைத்து யானையை முடுக்குகின்றார்கள். இத்தகைய தடித்த தோலைக் கிழித்துத் தசையையும் ஊடுருவிச் செல்கின்ற அங்குசம் போன்ற வேல்கூட, மிக மிருதுவான பஞ்சினைக் கொண்ட பஞ்சு மூடையைக் கிழித்துச் செல்ல முடிவதில்லை. பஞ்சு மூடையை நோக்கி விடுக்கப்படும் இரும்புவேல் கூடச் செயலிழந்து விடுகின்றது. வேலோ இரும்பால் ஆனது. பஞ்சோ வெறும் துரும்புகளின் தொகுதி. இருப்பினும் இரும்பின் வன்மை பஞ்சின் மென்மையை வெல்ல முடிவதில்லை. இத்தோடு



நின்றுவிடாமல் அவ்வை இன்னுமோர் உதாரணம் சொல்லுகிறாள். உருக்கினால் ஆன பெரிய அலவாங்குக் கம்பியினால் இடிஇடி என்று இடித்த போது கூட மசியாமல் அசையாமல் மிடுக்காக நிற்கின்ற கற்பாறையை நீங்கள் கண்டிருப்பீர்கள். இப்படியான கற்பாறை கூட அதன் ஓர் இடுக்கிலே வவ்வாலினாலோ காகத்தாலோ குருவியினாலோ போடப்பட்ட வேப்பம் விதை அல்லது அரசமர விதை யானது முளைவிட்டு வளரத் தொடங்கியதும், வெடித்துப் பிளந்து அந்த வேரின் போக்குக்கு இடங்கொடுக்கின்றது. உருக்கிரும்பினால் செய்யப்பட்ட கடப்பாரை எங்கே? குழந்தையின் நகத்தினால் கூட நுள்ளிக் கிள்ளி எறிந்து விடக்கூடிய வேப்பம் முளையின் வேர் எங்கே? இருந்த போதும், கடப்பாரைக்கு மசியாத கற்பாறை, மெல்லிய ஒல்லி வேருக்கு வழிவிட்டுக் கொடுக்கின்றது! மென்மையில் வன்மை அடக்கம், அன்புக்கு வன்பு அடி பணியும் என்ற ஒரு தத்துவத்தை அவ்வையின் வெண்பா சொல்லுவதாகத் தெரிகின்றது.

அவ்வையின் அந்த வெண்பாப் பாடல் இதோ :

*வெட்டனவை மெத்தனவை வெல்லாவாம் வேழத்தில்*
*பட்டுருவும் கோல் பஞ்சில் பாயாது நெட்டிருப்புப்*
*பாரைக்கு நெக்குவிடாப் பாறை பசுமரத்தின்*
*வேருக்கு நெக்குவிடும்* - ***(நல்வழி - 33)***

எந்தச் செயலைச் செய்வதற்கும் அமைதியான வழி உண்டு. ஆடுகின்ற மாட்டை ஆடிக்கறக்க வேண்டும், பாடுகின்ற மாட்டைப் பாடிக்கறக்க வேண்டும் என்பது

உண்மை. ஊசியால் எடுக்கக்கூடியதை உலக்கை கொண்டு அடிக்க வேண்டியது இல்லை என்பதும் நமக்குத் தெரியும். ஆனாலும் அவதி, அவசரம், ஆசை, ஆத்திரம், பிடிவாதம், சுயநலம் என்பவற்றால் உந்தப்படுகின்ற மனிதன், அழிவை ஏற்படுத்தாத மெல்வழியைக் கையாள மறந்து விடுகிறான். மறக்கக்கூடாது என்பதை நினைவூட்டவே இலக்கியங்களும் இதிகாசங்களும் உள்ளன. இலக்கியங்களும் இதிகாசங்களும் உடனடியாக உலகப் பிரச்சனைகளைத் தீர்த்துவிடும் என்பதற்கில்லை. ஆனாலும் ஒரே விநாடியில் அழிந்து போகக் கூடிய அளவுக்குப் போர்க் கருவிகளையும் அணுகுண்டு களையும் தயாரித்து வைத்திருக்கின்ற இன்றைய உலகம் அழியாமலாகுதல் இருக்கின்றதென்றால், அது இந்த இலக்கிய இதிகாசங்களின் பயன் என்பதை நாம் மறந்துவிட முடியாது.

இதையே வள்ளுவனும் இன்னொரு விதமாகச் சொல்கிறான். உலகத்திலே பண்புடையவர்கள் அற்ப சொற்ப அளவில் ஆகுதல் இருக்கின்றமையினாலேதான் இந்த உலகம் இன்றளவும் அழியாமல் இருக்கின்றது. அத்தகைய பண்பாளர் இல்லையானால் இந்த உலகம் எப்போதோ மண்ணொடு மண்ணாக மண் மூடிப் போயிருக்கும் என்கிறான் வள்ளுவன்.

வள்ளுவன் வழிவந்த அவ்வை காட்டும் வழியை எண்ணிப் பார்ப்பது நல்லது அல்லவா? செய்ய முடியா விட்டாலும் சிந்திக்கவாகுதல் முடியாதா? செயல் வறுமையை மன்னிக்கலாம். சிந்தனை வறுமையை மன்னிக்கலாமா?

★

# 13

# வேளாளன் பாராளலாம்

வாழ்வறத்துக்கு வழிகாட்டிய அவ்வையார் சில இடங்களில் அரசியல் முறைக்கும் வழி காட்டியிருக்கிறாள். நாட்டாட்சி சரிவர நடைபெற வேண்டுமானால் நாட்டினை எப்படிப்பட்டவர்கள் ஆளவேண்டும் என்பதைக் கூறும் ஒரு பாட்டினை அவள் பாடியிருக்கிறாள்.

அவ்வையாருக்கு அரசர் பலர் நண்பர்களாக இருந்தனர். ஒரு நாள் சோழ மன்னன் ஒருவன் அவ்வையாரின் அபிப்பிராயத்தை அறிய வேண்டி, அவரிடம் ஒரு கேள்வி கேட்டான். அவன் கேட்டான் : ''அமைச்சனாக ஒருவனை நியமிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது; உங்கள் கருத்துப்படி எந்த வருணத்தைச் சேர்ந்தவனை நியமிப்பது நல்லது?'' என்று கேட்டான். அவ்வையார் தயங்கவில்லை. பட்டென வந்தது அவர் வாயிலிருந்து பதில், பாவடிவத்தில். இதுதான் அந்தப் பாடல்:

*நூல் எனிலோ கோல் சாயும் நும் தமரேல் வெஞ்சமர் ஆம்*
*கோல் எனிலோ ஆங்கே குடிசாயும் - வேளாளன்*
*மந்திரியும் ஆவான் வழிக்குத் துணை ஆவான்*
*அந்த அரசே அரசு - **(அவ்வை தனிப்பாடல்)***

பூணூல் பூண்ட பிராமணனை அமைச்சனாக நியமித்தாயானால், நாட்டின் ஆட்சி கொடுங்கோல் ஆட்சியாக மாறிவிடும். உன்னைப் போன்ற மறவர் குலத்தவனாகிய

சத்திரியனை அமைச்சனாக நியமித்தாயானால், அவன் மறப்பண்பு காரணமாகச் சண்டை சச்சரவுகளில் ஈடுபட்டு நாட்டின் சமாதானத்தைக் கெடுத்துவிடுவான். வியாபாரத்தைத் தொழிலாகக் கொண்டவனாகிய வைசிகனை அமைச்சனாக நியமித்தாயானால், அவன் நாட்டு மக்களின் மனிதப் பண்பையே விற்றுவிடுவான். ஆகவே நாட்டின் நலன் பேணப்பட வேண்டுமானால், நாட்டில் பெரும்பான்மை யோராய் இருப்பதோடு, நாட்டுக்கு வளத்தையும் உணவுப் பொருட்களையும் தருகின்ற சூத்திரன் எனப்படுகின்ற வேளாளன் ஒருவனை அமைச்சனாக நியமிப்பதே முறை என்றார் அவ்வையார்.

அவ்வையார் சொல்லியதில் ஒரு தத்துவம் இருக்கிறது. அது என்னவென்றால், நாட்டின் ஆட்சி பெரும்பான்மை யினரான சாதாரணரின் கையில் இருக்க வேண்டும் என்பதே அந்தத் தத்துவம். பெரும்பான்மையினரான சாதாரணரால் அமைக்கப்படும் அரசாங்கம்தான் நல்ல அரசாங்கம் என்பதோடு, அவர்களுக்குத்தான் பெரும்பான்மை மக்களின் பிரச்சினைகளைப் புரிந்துகொள்ளவும் முடியும் என்ற உண்மையும் அவ்வையாரின் பாட்டில் அடங்கியுள்ளன. இந்தியாவில் தமிழ்நாட்டில் இன்று பேயாட்டமாடி, அரசோச்சும் அமைச்சர்களும் அமைச்சரவைத் தலைவர்களும் தலைவிகளும் அவ்வை காட்டிய வழியை அனுசரித்தால் உலகத் தமிழினம் தலை நிமிர்ந்து நிற்கும். இல்லெனில் காலப் போக்கில் அவர்களே தலை குனிந்து நிற்பர். ''குடை நிழலிருந்து குஞ்சரமூர்ந்தோர் நடைமெலிந்தோரூர் நண்ணினும் நண்ணுவர்'' என்பது பொய்யாகுமா? தமிழ் நாடு தாய்த் தமிழ் அவ்வையை மறக்கலாமா?

# 14

# தடம் மாறாத தறுகணர்

யோகியர் மேப்பட்டவர்கள். அவர்கள் ஏனையவர்களை விட வேறுபட்டவர்கள். காலதேச வர்த்தமானங்களாலோ சமுதாய மரபுகளாலோ நிபந்தனைகளாலோ கட்டுப் படாதவர்கள். அவர்கள் சுயமாகச் சிந்திப்பவர்கள்; சுயநலம் அற்றவர்கள்; குறிப்பான ஒரு குறிக்கோளைக் கொண்டவர்கள்; அவர்கள் அறிவாளிகள்; அறிவு இருப்பதால் ஞானிகள்; ஞானம் இருப்பதால் அச்சம் என்பதே அறியாதவர்கள்; அச்சம் என்பதே இல்லாமல் இருப்பதால் அவர்கள் பாவம் செய்வதில்லை; கடமையைச் செய்வதால் அவர்களின் செயல் எதுவும் பாவம் ஆவது இல்லை. சாதாரண உலகம் அவர்களைப் பயித்தியக்காரர் என்றும் வீணர் என்றும் சொல்லும். அந்தக் கொடுஞ் சொற்களும் அவர்களைப் பாதிப்பதில்லை. ஏனென்றால் அவர்கள் கர்மயோகிகள். சோக்கிரதீஸ், திருமூலர், ஈ.வே.ரா.பெரியார், மகாத்மா காந்தி, யாழ்ப்பாணத்து யோகர்சுவாமி போன்றவர்கள் யோகிகள். அவர்கள்தான் சமுதாய மாற்றத்தைச் செய்யக்கூடியவர்களாக இருந்தார்கள். இவர்களுடைய வாழ்க்கை வரலாற்றைப் பார்க்கின்றபோது மரண பயம் இல்லாதவன் எவனோ அவனே பெரியவன் என்று எண்ணத் தோன்றுகின்றது.

இவ்வாறு பார்க்கின்றபோது மரண பயம் இல்லாத மாவீரனும் ஒரு யோகியே; கர்மயோகியே. உண்மையான வீரன் ஒரு மானி; தன்மானி; மானத்தை உயிராக நினைப்பவன்;

இனமானத்தை மதிப்பவன். தனிஒரு மயிர் சிந்திவிட்டாற்கூட உயிர்வாழ விரும்பாத கவரிமானைப் போல, தமிழ் மானம் போகிற சங்கடம் வந்துவிட்டால் உயிரைத் துறந்து விடுவான் உண்மையான வீரன்.

அப்படிப்பட்ட வீரர்களை அவ்வை நேரிலே சந்தித்திருப்பாள் போலும்! அவர்களின் வாழ்வு அவளை அத்துணைக் கவர்ந்துள்ளது. ஆகவே அத்தகைய வீரர்களைப் பற்றி அவள் ஒரு வெண்பாப் பாடியிருக்கிறாள்.

மானத்தை மதிப்பவர்களை அவள் கற்றூணுக்கு நிகரானவர்களாகக் காட்டுகின்றாள். மானம் பறிபோகின்ற சந்தர்ப்பத்தில் உயிரையே கொடுப்பதற்குத் தயாராக உள்ள வீரர்கள் தமது எதிரிகளை இக்கட்டான இடத்தில் சந்தித்துவிட்டால், அந்த எதிரிகளுக்குப் பயந்து பணிய மாட்டார்கள். அந்த எதிரிகளின் ஆணைக்கு உட்பட்டு அவர்கள் சொல்லுகிறபடி செய்யமாட்டார்கள். அதாவது தடம் மாற மாட்டார்கள்; தடுமாற மாட்டார்கள்; குறிக்கோளிலிருந்து விலக மாட்டார்கள்; குறிக்கோளை விடுவதைக் காட்டிலும் நஞ்சு குடித்தோ, மருந்து குடித்தோ, தீயில் குதித்தோ உயிரை மாய்த்துக் கொள்வார்கள். அந்த மானிகள் கல்லால் கட்டப்பட்ட தூணைப் போன்றவர்கள். கல்லுத் தூணின் மேல் பெரும்பாரம் ஏற்றப்படுமானால் அந்தத் தூண் உடைந்து தெறிக்குமே ஒழிய நெளிந்து வளையாது. இந்தத் தூண் போன்றவர்களே மானம் உள்ள வீரர்கள் என்கிறாள் அவ்வை.

இப்படியான வீரர்களை ஈழத் தமிழ்த்தாய் ஈன்றுள்ளாள், ஈன்று கொண்டிருக்கிறாள் என்பதை நினைத்துப் பார்க்கின்ற



போது எம்போன்ற கோழையர்க்குக் கூடப் பெருமை பிடிபட வில்லை.

இப்போது வெண்பாவைப் பாருங்கள்.

*உற்ற இடத்தில் உயிர் வழங்கும் தன்மையோர்*
*பற்றலரைக் கண்டால் பணிவரோ - கல்தூண்*
*பிளந்து இறுவது அல்லால் பெரும்பாரம் தாங்கின்*
*தளர்ந்து வளையுமோ தான் -* ***(மூதுரை - 6)***

★

# 15

# திருமணப் பொருத்தம்

உருவும் திருவும் குலனும் குணனும் அறிவும் செறிவும் நிறைந்த ஆணும் பெண்ணும் கருத்து ஒருமித்து ஆதரவு பட்டதே காதல் வாழ்க்கை அல்லது இல்வாழ்க்கை என்று இலக்கியங்கள் இலக்கணம் வகுத்துச் சொன்னபோதும், இல்லற வாழ்க்கை எப்போதும் அப்படி அமைவதில்லை. அப்படி அமையாத சந்தர்ப்பம் ஒன்றை அவ்வையார் ஒரு முறை அனுபவிக்க நேர்ந்தது.

ஒரு தம்பதியரை அவள் சந்தித்தாள். அவர்களோடு சில மணி நேரம் உரையாடிப் பழகினாள்.

அந்தப் பெண்ணோ அன்பே உருவானவள்; பாடறிந்து ஒழுகும் பண்பு கொண்டவள்; அழகானவள்; அறிவானவள்.

கணவனோ கடுகடுத்தவன்; வெடுவெடுத்தவன்; நீட்டோலை வாசிக்க முடியாத நீள்மரம்; உலகத்தோடு ஒத்தோடத் தெரியாதவன்; பொலிவும் அற்றவன்; வலிவும் அற்றவன்.

இந்தக் கணவனும் மனைவியும் நடந்து கொண்ட விதத்தைப் பார்த்துக் கொண்டிருந்த அவ்வையார் பொங்கினார்; புழுங்கினார். எந்த விதத்திலும் ஒற்றுமை இல்லாத இந்த இரண்டு உயிர்களையும் திருமணம் என்ற உறவில் பிணைத்து வைத்த பெற்றோரையும் உற்றோரையும் மனமாரத் திட்டினாள்.



நாளும் கோளும் பார்த்து நல்ல பொருத்தம் என்று கூறி நாலு பணம் சம்பாதித்த சோதிடாகளையும், எண்சாத்திரக் காரரையும் மனத்துக்கு வந்தபடி திட்டினாள். அவ்வாறு திட்டியும் அவ்வையினுடைய ஆத்திரம் அடங்கவில்லை. ''பார்க்கும்போதே தெரிகிறது, அடியோடு பொருத்தமில்லை என்று; உருவிலும் பொருத்தமில்லை; அறிவிலும் பொருத்த மில்லை; பண்பிலும் பொருத்தமில்லை; பழக்கத்திலும் பொருத்தமில்லை; கைப்பூணுக்குக் கண்ணாடியும் வேண்டுமா? அப்படி இருக்கவும், இப்படியான ஒரு கிளியை அப்படியான ஒரு பூனைக்கா திருமணம் செய்து வைக்க வேண்டும்?'' என்று பலவாறாகக் குமுறிய அவ்வை, இந்த அடாச் செயலுக்கு உண்மையான காரணம் யார் என்று எண்ணியபோது, அது, படைத்தற் கடவுளாகிய பிரமன் என்பது அவளுக்கு நினைவில் வந்தது. உடனே அவளுடைய சினம் பின்வரும் பாடலின் வடிவில் வந்தது:

*அற்ற தலை போக அறாத தலை நான்கினையும்*
*பற்றித் திருகிப் பறியேனோ - வற்றல்*
*மரம் அனையானுக்கு இந்த மானை வகுத்த*
*பிரமனை யான் காணப் பெறின் -* ***(அவ்வை தனிப்பாடல்)***

''அடே பிரமா! ஐந்து தலைகளோடு பிறந்த நீ ஏலவே ஒரு தலையைப் பறிகொடுத்து விட்டாய், உன் அடாச் செயலின் விளைவாக. இந்த மான் போன்ற பெண், அந்த மரம் போன்றவனைத்தான் மணம் செய்ய வேண்டும் என்று எழுதி வைத்து, அதன்படி அவர்கள் இருவரையும் கட்டிவைத்து வேடிக்கை பார்க்கின்றவனாகிய உன்னை மட்டும் நான் நேரே

சந்தித்தால், மிஞ்சியிருக்கின்ற நான்கு தலைகளையும் பற்றிப் பிடித்துத் திருகி எறிந்து விடுவேன்'' என்று சமுதாயத்தின் சாபக்கேட்டைச் சாடியுள்ளாள் அவ்வை.

ஓர் இனத்தின் ஒழுக்காறுகளும் வழக்காறுகளும் போற்றப்பட வேண்டியனவே. ஆனால் விதி என்ற பேரிலும், வறுமை என்ற பேரிலும், வயது போயிற்று என்ற பேரிலும் பொருந்தாத திருமணங்களைச் செய்து வைக்கும் செயல் கண்டிக்கப்பட வேண்டியதே என்பதையே அவ்வையின் பாடல் சொல்லுகின்றது. ''தெய்வத்தால் ஆகாது எனினும் முயற்சி தன் மெய்வருந்தக் கூலி தரும்'' என்ற வள்ளுவன் வாக்கை மறவாமல், வேண்டிய சமுதாயச் சீர்திருத்தங்களைச் செய்யுங்கள் என்கிறாள் அவ்வை. சுகப் பேற்றில் சிக்கல் வருமாயின் அறுவைப் பேறும் ஆதரிக்கப்பட வேண்டியதே.

★

# 16

# நாய்க்கு நடுக்கடலிலும்!

*சேவித்தும் சென்று இரந்தும், தெள்நீர்க்கடல் கடந்தும்*
*பாவித்தும் பார் ஆண்டும் பாட்டு இசைத்தும் போவிப்பம்*
*பாழின் உடம்பை வயிற்றின் கொடுமையால்*
*நாழி அரிசிக்கே நாம் - **(நல்வழி - 19)***

அவ்வையார் பாடிய ''நல்வழி'' என்ற நாற்பது பாடற் தொகுப்பில் வருகிறது இந்தப் பாடல்!

உலகத்தின் போக்கை அப்படியே படம் பிடித்துக் காட்டித் திருந்துமாறு கேட்கிறது மேற்படி வெண்பா. மனித சமுதாயம் புறநானூற்றுக் காலத்தில் எப்படி இருந்ததோ அப்படித்தான் இன்றும் இருக்கிறது. விஞ்ஞானமும் நாகரிகமும் வளர்ந்து விட்ட போதிலும், மனிதனின் தேவைகளும் அங்கலாய்ப்பும் மனப்பாங்கும் மாறவில்லை. புறவசதிகள் பல்கியும் பொருளாதாரம் பெருகியும், நேரம் சுருங்கியும், தூரம் குறுகியும், விண்ணும் மண்ணும் நெருங்கிவிட்ட போதும், போட்டியும், பூசலும், எரிச்சலும் பொறாமையும் ஆசையும் பேராசையும், அடிநச்சும் பழக்கமும் பிச்சை எடுக்கும் பழக்கமும் போகவில்லை. சுருக்கமாகச் சொன்னால், புறவசதிகளாகிய நாகரிகம் மேம்பட்ட போதிலும், உள்ளத்தின் வளர்ச்சியாகிய பண்பாடு வளரவில்லை. அமைதிக்கும் ஆனந்தத்துக்கும் அவசியமான பண்பாடு வளராமல், அவற்றுக்குப் பகையான மேற்படி பழக்கங்கள் மாறாமல்

இருப்பதைக் கண்டு வருந்தியவள் போல அவ்வையார் மேற்படி பாடலைப் பாடியிருக்கின்றாள்.

உணவால் மட்டும் மனிதன் வாழ்ந்து விட முடியாது (Man shall not live by bread alone) என்று யேசுநாதர் சொன்னார். அவர் சொன்னதுதான் உண்மை. உணவுக்கு அப்பாற்பட்ட வாழ்க்கை நோக்கங்களும் உண்டு. அவற்றை எய்தினால்தான் வாழ்வு முழுமை பெற்று அமைதி நிலவும் என்பதைக் காட்டவே "Man shall not live by bread alone, but by every word that proceeds out of the mouth of the Lord" என்றார் யேசுநாதர். யேசுநாதரின் சமகாலத்தவராக அல்லது சற்று முந்தியவராகச் சொல்லப்படும் திருவள்ளுவரும் ''ஈதல் இசைபட வாழ்தல் அஃது அல்லது ஊதியம் இல்லை உயிர்க்கு'' என்றார். அதாவது உலகம் பயன்படும் வண்ணம் உலக மக்களுக்கு நல்ல வற்றைக் கொடுத்தல், தன் இனத்துக்குப் புகழ்வருமாறு வாழ்தல் ஆகிய செயல்களால்தான் மனிதன் வாழ்கிறான்; அவ்வாறு வாழ்பவன்தான் வாழ்கிறான்; மற்றவன் வெறும் நடைப் பிணமே.

பெரியவர்களும் ஞானிகளும் மேற்படி உண்மையை அடிக்கடி உரைத்து வந்தும், மனித இனம் அதிகம் திருந்த வில்லை. ஆற அமர இருந்து யோசித்துப் பார்க்கின்றபோது வயிற்றை நிரப்புதலாகிய ஒரு தேவைக்காகவே நாம் நமது செயற்பாடுகள் அனைத்தையும் செய்வதாகத் தெரிகிறது. உண்பதற்காக நாம் வாழ்கிறோம் என்று நினைக்கிறோம் ஒழிய, நல்வாழ்வு வாழ்வதற்காக நாம் உண்கிறோம் என்ற உண்மையை மறந்து விடுகின்றோம்.



உண்டோம், உடுத்தோம், உறங்கினோம், உல்லாசமாக இருந்தோம் என்பதைத் தவிர சாதாரணராகிய நாங்கள் பெரிதாக எதனைத்தான் செய்துவிட்டோம்? நாங்கள் இறந்த பின்னும், இந்த மண்ணில், உலகப் பேரேட்டில் நிலைத்து நிற்கக்கூடியதாக எதனை நாம் செய்கிறோம்? மானம் போகிறது, மதிப்பு மங்குகின்றது, கல்வி தடைப்படுகிறது, விடுதலை பறிபோகிறது என்பதால் ஊரில் இருக்க முடியாது என்று தீர்மானித்து, ஊரிலே பலரைக் கும்பிட்டு, சிலரிடம் பல்லிளித்துப் பணம் இரந்து, பிரயாண முகவர்களிடம் கூனிக் குறுகி நின்று கெஞ்சி அவர்களின் தயவினால் கடலையும் வானையும் கடந்து, குபேர பட்டினங்களாகக் கருதப்படும் மேற்கு நாட்டுத் தலைநகரங்களுக்கு வந்திருக்கின்ற நாங்கள் இந்த நாட்டில் என்ன செய்கிறோம்?

செயற்கரிய செய்து பெரிய குடிமக்கள் என்று பேரும் புகழும் பெற்றுத் தமிழினத்துக்கே மகிமை தேடி ஈழத் தமிழகத்தை வாழ வைக்க வேண்டிய கடமையைச் செய்ய வேண்டிய நாங்கள், இந்த நாட்டுக்கு வந்தவுடனும், எங்கள் மொழியையும் கலாச்சாரத்தையும் மறந்ததோடு நில்லாமல், இந்த நாட்டிலும் மற்றவர்களுக்குச் சேவகம் செய்து, அரசாங்கத்தை இரந்து பிச்சைப் படியும் பஞ்சப்படியும் வாங்கிக் கொண்டிருப்பதோடு, வீணுக்குக் கதை வளர்த்து, வீண் வம்புகளில் ஈடுபட்டு வருகின்றோம்; வயிற்றை வளர்ப்பதற்காக ஒரு கொத்து அரிசியை நாடி அலைந்து கொண்டிருக்கிறோம். அப்படி வயிற்றுப் பிழைப்போடு நின்று விடக்கூடாது என்று அன்று அவ்வை சொல்லியிருந்தும், நம்மவரில் பலர் அதையே இலட்சியமாக நினைத்துச்

செயற்பட்டு வருகிறோம். கல்விக்கும் கலைகளுக்கும் தலைநகராக விளங்கும் இலண்டனுக்கு வந்து விட்ட தமிழ் இளைஞர்கள், சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கல்வியிலும் கலைகளிலும் முன்னேற முயலாமல் ''நாழி அரிசிக்கே நாம்'' என்ற போக்கில் நடந்து வாழ்நாளை வீழ்நாள் ஆக்குவது கவலைக்குரியது. ''நாய்க்கு நடுக்கடலிலும் நக்குத் தண்ணீர்தான்'' என்ற மொழிக்கு இலக்கியமாக ஆகாமல் தப்ப வேண்டும் என்றால், இலங்கைத் தமிழ் இளைஞர்கள் அவ்வை காட்டிய வழியைப் பின்பற்றுதல் வேண்டும். பின்பற்றுவார்களா?

★

# 17

# அங்கனமா? அங்ஙனமா?

சிறுவர்களுக்குத் தமிழ் எழுத்துக்களை அறிமுகம் செய்வதற்காக, ஆத்திசூடி, கொன்றைவேந்தன் ஆகிய நூல்களை ஆக்கித் தந்தவர் அவ்வையார். தமிழ் மொழியில் 247 எழுத்துக்கள் இருப்பது, தமிழ் மொழி கற்போருக்கு இடைஞ்சலாக உள்ளது என்பது சிலரின் கருத்து. ஆங்கில மொழி போல 26 எழுத்துக்கள் இருந்தால் சுலபமாக இருக்கும் என்று சிலர் யோசிப்பதும் உண்டு. உண்மையைப் பார்த்தால் தமிழிலும் எழுத்துக்கள் குறைவுதான். தமிழ் மொழியில் பன்னிரண்டு உயிர் எழுத்துக்களும் ஓர் ஆய்த எழுத்தும் பதினெட்டு மெய் எழுத்துக்களும் உள்ளன. மொத்தத்தில் முப்பத்தொன்று. ஆங்கிலத்தில் ஆறு உயிர்களும் இருபது மெய்களும் ஆக இருபத்தாறு எழுத்துக்கள் உள்ளன. ஒப்பிட்டுப் பார்க்கையில் ஐந்து எழுத்துக்களே மிகையாக உள்ளன. உயிர்எழுத்துக்களாகக் கருதப்படும் அய்யன்னா வையும் (ஐ) அவ்வன்னாவையும் (ஔ) உயிர்எழுத்துப் பட்டியலிலிருந்து நீக்கி விட்டால், இரண்டு மொழிகளுக்கு மிடையேயான எழுத்து வித்தியாசம் மூன்றாகக் குறைந்து விடும்.

தமிழ் மக்களிடையே இருந்துவருகின்ற சோம்பல் தன்மையை உணர்ந்தோ என்னவோ, அன்று தமிழ் மொழி ஒலிகளுக்கு வரிவடிவ உருவம் கொடுத்தவர்கள், உயிர்

எழுத்துக்களையும் மெய் எழுத்துக்களையும் படைத்ததோடு நில்லாமல், உயிர்மெய் எழுத்துக்கள் என்று வேறு பல எழுத்துக்களையும் படைத்துத் தந்து விட்டார்கள். இதனாலேதான், தமிழ் மொழி எழுத்துக்களின் எண்ணிக்கை 247 ஆக உயர்ந்துள்ளது; அதாவது உயிர் 12, ஆய்தம் 1, மெய் 18, உயிர் மெய் 216, மொத்தம் 247.

இந்த 247 எழுத்துக்களில் பல எழுத்துக்கள் நமக்குத் தேவை இல்லாதவை; பயன்படுத்தப்பட முடியாதவை. இருப்பினும், பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக அவை, தமிழ் நெடுங்கணக்கில் இருந்து வந்துள்ளன. நாங்களும் அவற்றைச் சிரமப்பட்டுப் படித்து வந்து விட்டோம். தேவையில்லாத அந்த எழுத்துக்களை நீக்க வேண்டிய அவசியம் இன்றைய கொம்பியூற்றர் காலத்தில் ஏற்பட்டிருக்கிறது. கழிய வேண்டியது கழியத்தான் வேண்டும். ''பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல, கால வகையினானே'' என்பது நன்னூல் சூத்திரம். இதனாலே தான் எழுத்துச் சீர்திருத்தம் பற்றி ஈ.வே.ரா.பெரியார் அவர்கள் சிந்தித்துப் புரட்சி செய்தார். அந்தட் புரட்சியின் பயனாக இன்றைய தமிழ் நெடுங்கணக்கில் ஓரளவுக்கேனும் சீர்மை ஏற்பட்டுள்ளது. நாம் முன்னர் எழுதி வந்த ணை, லை, னை, ஆகியன மெல்ல மெல்ல மறைந்தது மேற்படி சீர்திருத்தத்தின் விளைவே. இன்றைய எ, ஏ, ஒ, ஓ என்ற எழுத்துக்கள் கூட வீரமாமுனிவர் என்ற பாதிரியாரின் காலத்துக்கு முன்னர் வேறு விதமாகத்தான் எழுதப்பட்டு வந்தன. மாற்றங்கள் காலத்துக்குக் காலம் ஏற்படுவது இயல்பே.

தமிழில் வேண்டாத எழுத்துக்கள் பல உள்ளன என்பதை அவ்வையும் அறிந்திருந்தாள். அதனாலேதான் அவள்



இயற்றிய ஆத்திசூடியில் **''ஙப்போல் வளை''** என்று ஓர் அருமையான அறிவுரையை வழங்கினாள். அவள் அதில் காட்டிய வழியை இன்று இக்கட்டுரையில் பார்ப்போம்.

''ஙப்போல் வளை'' என்பதன் கருத்து என்னவெனில், ''உனக்கென்று மட்டும் வாழாமல், உனது உற்றார் உறவினர்க்கும் உதவி, அவர்களையும் வாழவை'' என்பதே. இதே கருத்தை வள்ளுவரும் **''சுற்றம் தழால்''**, ''ஒப்புரவு'' என்ற அதிகாரங்களில் கூறியுள்ளார். உலகத்தில் பிறக்கின்ற எல்லோரும் புகழோடும் பெருமையோடும் வாழ்வதில்லை. புகழோ மதிப்போ வரவேற்போ இல்லாத உறவினர்களையும் சேர்த்து, அவர்களுக்குச் சமூகத்தில் அங்கீகாரம் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்ற கடமை உணர்வை ஊட்டவே, அவ்வையார் செவ்வையான இந்தத் தொடரை ஆக்கித் தந்துள்ளார்.

''ங'' என்ற வரிசையில் ''ங்'' இல் தொடங்கி ''ஙௌ'' இல் முடியும் பதின்மூன்று எழுத்துக்கள் உள்ளன. பதின்மூன்று எழுத்துக்கள் உருப்படிக்கு இருந்தாலும் ''ங்'' என்ற ஓர் எழுத்தைத் தவிர வேறு எந்த எழுத்தும் நடைமுறையில் பயன்படுத்தப்படுவதில்லை.

''அங்ஙனம்'' என்று எழுதுகிறார்களே என்று சிலர் கேட்கலாம். அது பிழை. அங்கனம் என்பதே சரி.

இவ்வாறு ஏனையவை பயனற்ற எழுத்துக்களாக இருந்தும், தமிழ் நெடுங்கணக்கில் அவை பல்லாண்டுகளாகவே இருந்து வந்துள்ளன. பயனில்லாத அந்த எழுத்துக்களை எப்போதோ நீக்கியிருக்கலாம். ஆனால் அந்த வரிசையில் ''ங்'' என்ற

எழுத்துப் பயனுள்ள எழுத்தாக இருப்பதால், மற்றப் பன்னிரண்டும் வாழ்வு பெற்று விட்டன; வாழ வைத்தது "ங" என்ற ஓர் எழுத்தே; மனிதராகிய நாங்களும், வாழவழியற்ற, அனாதைகளான உற்றார் உறவினருக்கு உதவ வேண்டும் என்று அவ்வையார் சொல்கிறார்.

பயனற்றவர்கள் கூட உறவினர்களாக இருக்கிறார்கள் என்பதை அவ்வை மறக்கவில்லை. பயனற்றவர்களுக்கும் இயன்றவரை வாழ்வு கொடுக்க வேண்டும் என்பது அவ்வையின் கொள்கை. இந்தக் கொள்கையை அவ்வையார் இன்னோர் இடத்திலும் வெளிக்காட்டியுள்ளார். ஈ.வே.ரா. பெரியார், டாக்டர் மு.வரதராசனார் போன்றோர் கூறியதுபோல, "ஐ" என்ற கூட்டுயிர் எழுத்தும், "ஔ" என்ற கூட்டுயிர் எழுத்தும் தமிழ் மொழிக்கு வேண்டாத மீமிசை எழுத்துக்கள் என்று அவ்வையாருக்குத் தெரியும். கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த அவ்வைக்கு, கி.மு. முதலாம் நூற்றாண்டில் வாழ்ந்த தொல்காப்பியரின் எழுத்ததிகாரச் சூத்திரம் தெரியாதா என்ன?

"அகர இகரம் ஐகாரமாகும், அகரஉகரம் ஔகாரம் ஆகும்" என்ற சூத்திரம் அவருக்கு நன்கு தெரியும்! தெரிந்திருந்தும், பயனில்லாதவர்களுக்கும் வாழ்வு அளிக்க வேண்டும் என்பதற்காகவே அவரது ஆத்திசூடியில் "ஐயம் இட்டு உண்", "ஔவியம் பேசேல்" என்ற சொற்றொடர்களையும் அவர் பாடியுள்ளார். "அய்யம் இட்டு உண்", "அவ்வியம் பேசேல்" என்று எழுதினாலும் சரி என்பது அவருக்குத் தெரியும். "அ+இ"தான் "ஐ" என்பதும், "அ்+உ"தான் "ஔ" என்பதும் அவ்வைக்குத் தெரியும். அகர இகரம் ஐகாரம் ஆகும், அகர



உகரம் ஔகாரம் ஆகும் என்ற தொல்காப்பியச் சூத்திரங்களை அறியாதவரல்லர் அவர். அய்யன்னா அவ்வன்னா ஆகியன கூட்டுயிர் எழுத்துக்கள் என்பதாலேயே யாப்பு இலக்கணத்தில் அவ்வெழுத்துக்களைச் சந்தர்ப்பத்துக்கு ஏற்ப, குறில்கள் என்றும் நெடில்கள் என்றும் கொள்வது உண்டு என்பதும் அவ்வைக்குத் தெரியும். ஆனால் அவ்வையார் நல்லவர். அய்யன்னாவுக்கும் அவ்வன்னாவுக்கும் வாழ்வு கொடுப்பதற் காகவே ஐயம் இட்டுண், ஔவியம் பேசேல் என்று அவர் எழுதினார் என்பதை நாம் உணரவேண்டும்.

ஙப்போல்வளை என்று கூறிவிட்டு, அய்யம் இட்டுண் என்றும் அவ்வியம் பேசேல் என்றும் கூற அவருக்கு எப்படி மனம் வரும்? இதுதான் அவ்வை காட்டிய வழி. "அவ்வை" என்பது கூட "அவ்வய்" என்று ஆகும் நாள் தொலைவில் இல்லை!

★

# 18

## குமர் இருந்து குரங்காக வேண்டா!

அவ்வையார் திருமணம் செய்யவில்லை. ஆனால் அவர் இல்லற வாழ்க்கையை, இல்லறத்தாரை மதித்தவராகவே காணப்படுகிறார். பெண்ணானவள் திருமணம் செய்ய வேண்டும், இல்லறம் நடத்த வேண்டும் என்று அவர் விரும்பினார் என்பதைக் காட்டும் பாடல்கள் பலவற்றை அவர் பாடியிருக்கிறார். இந்த நாட்களில் படித்த பல பெண்களும், ஏன் சில ஆண்களும் கூட, திருமணமோ இல்லற வாழ்வோ அவசியம் இல்லை என்று நினைக்கிற போக்கைக் காண்கிறோம். ஆண் ஒருவனை வாழ்க்கைத் துணையாக ஏற்று அவனுக்கு அடிமையாகி வாழ்வதைக் காட்டிலும், இல்லறத்தில் புகாமலே இருந்து விடலாம் என்று படித்த சில பெண்கள் நினைக்கிறார்கள். தம்மைப் பராமரித்துக் கொள்வதற்கான பணமும் பதவியும் இருக்கிற வரைக்கும், திருமணம் தேவையில்லை என்பது அவர்கள் கருத்து. ஒவ்வொன்றுக்கும் ஒரு பருவம் உண்டு. அதனாலேதான் ''பருவத்தே பயிர் செய்'' என்று ஒரு பழமொழியே தமிழ் மொழியில் உருவாகியது.

இளமை, இன்பம் அனுபவிப்பதற்கு உரிய பருவம். இன்பமாக வாழ்வதற்குப் பணம் வேண்டும். நன்றாக உண்டு களிப்பதற்குப் பசி வேண்டும், உணவும் வேண்டும்,



உண்ணக் கூடிய நிலையும் வேண்டும். எனவே இளமைக் காலத்திலே ஒருவனுக்கு வறுமை வந்து விட்டால் அவனது இளமையினால் அவனுக்குப் பயன் இல்லாமல் போய்விடும். இதனால் அன்றோ ''கொடிது கொடிது வறுமை கொடிது அதனினும் கொடிது இளமையில் வறுமை'' என்று இதே அவ்வை பாடிவைத்தாள். இளமையிலே நோய் காரணமாகப் பசி இல்லாத நிலை ஏற்பட்டு விட்டால், அவன் உண்பதினால் பெறும் இன்பத்தை இழந்து விடுவான். பசியிருந்தும், ஆசைப்படும் உணவை உண்ண முடியாத நிலையில் இருந்தாலும், அவனது இளமையாற் பயனில்லாமல் போய் விடும்.

ஒருவன் முதுமை அடைந்துவிட்ட காலத்தில் அவனுக்குப் பணம் கிடைப்பதும், அல்லது இன்பத்துக்குரிய பொருள்கள் கிடைப்பதும் அவனுக்குத் துன்பத்தையே விளைவிக்கும். திருவிழாக் காலத்திலோ மங்களமான காலத்திலோ மலராத அழகிய பூவினால் யாருக்குப் பயன்? அத்தகைய பூவைத் தேடி நாடி யார் போகப் போகிறார்கள்?

பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை என்ற பருவங்கள் கடந்து அரிவை என்ற பருவத்தை நோக்கி நகருகின்ற ஒரு பெண் திருமணமாகிவிட வேண்டும். அரிவைப் பருவத்தில் அவளுக்கு மணாளன் கிடைக்காவிட்டால் அவளது அழகினால் அவளுக்குப் பயனில்லை; மற்றவர்களுக்கும் பயனில்லை. பருவத்தே பூக்காத பூவின் நிலைதான் பருவத்தே திருமணமாகாத பெண்ணின் நிலையும் என்று சொல்லுகிறாள்

அவ்வை. மாப்பிள்ளை தேடி அலைந்து குமர் இருந்து குரங்காகாமல் பருவத்தே திருமணம் செய்வதே மங்கைக்கு அழகு என்று யதார்த்த நிலை உணர்த்துகிறாள் அவ்வை.

இதுதான் அந்த அறிவுரைப் பாட்டு:

*இன்னா இளமை வறுமை வந்து எய்தியக்கால்*
*இன்னா அளவில் இனியவும் - இன்னாத*
*நாள் அல்லா நாள் பூத்த நல்மலரும் போலுமே*
*ஆளில்லா மங்கைக்கு அழகு* - **(மூதுரை - 3)**

★

# 19

# உழைத்து வாழ வேண்டும்!

மற்றவர்களிடமிருந்து எதையும் பெறக்கூடாது, ஆனால் மற்றவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்று கூறினால் பலருக்கும் புதிராக இருக்கும். ஏற்கக்கூடாது என்று சொல்லியிருக்கிறார்களே என்று சொல்லி மற்றவர்கள் வாங்க மறுத்தால் யாருக்குக் கொடுப்பது என்று கேள்வி கேட்கத் தோன்றும். ஆத்திசூடி பாடிய அவ்வையின் வார்த்தைகள் ஒன்றுக்கொன்று முரணாக இருப்பதாகக் கூடத் தோன்றும். ஆனால் உண்மையில் அவை முரண்படும் கூற்றுக்கள் அல்ல. கொடு என்று சொன்னதும் சரிதான், வாங்காதே என்று சொன்னதும் சரிதான். கொடுப்பதுதான் அறம்; வாங்காமல் வாழ்வதுதான் சிறப்பு என்பதை வற்புறுத்தவே அவ்வையார் ''ஏற்பது இகழ்ச்சி'', ''ஐயம் இட்டுண்'' என்று பாடினார் என்பதை மனம் கொள்ளல் வேண்டும். ''ஏற்பது இகழ்ச்சி'' என்று ஓரடியால் சொல்லிய ஆத்திசூடியைச் சிறுவராக இருக்கும் போது படிக்கத் தவறிய பெரியவர்களுக்கு அதே கருத்தைச் சொல்ல விரும்பிய அவ்வையார் நல்வழி என்ற வெண்பாத் தொகுதியில் ஒரு பாடல் பாடியிருக்கிறார். இந்த நாட்டிற்குக் கதியிலிகளாக நுழைந்த ஆசிய மக்கள் சிலரின் அன்றாட வாழ்க்கையை எண்ணிக் கவன்றபோது அந்த வெண்பா நினைவுக்கு வந்தது.

*பிச்சைக்கு மூத்த குடி வாழ்க்கை பேசுங்கால்*
*இச்சை பல சொல்லி இடித்து உண்கை - சிச்சீ*
*வயிறு வளர்க்கைக்கு மானம் அழியாது*
*உயிர் விடுகை சால உறும் -* ***(நல்வழி - 14)***

பிச்கை எடுத்து வாழ்தல் என்ற ஒரு வாழ்க்கையைச் சிலர் வாழ்ந்து வருகிறார்கள். இரந்து உண்ணும் வாழ்க்கை கேவலமானது; மதிப்பற்றது; வெறுக்கத்தக்கது. அதைவிடக் கேவலமான வாழ்க்கை இல்லை என்று சிலர் நினைக்கக் கூடும். ஆனால் அதைவிடக் கேவலமான ஒரு வாழ்க்கை, இழிவான ஒரு வாழ்க்கை இருக்கவே இருக்கிறது. எது அந்த வாழ்க்கை தெரியுமா? எண்ணிப் பாருங்கள்!

பிச்சை எடுப்பவன் தெருத் தெருவாக நடக்க வேண்டும்; வீடு வீடாகப் போகவேண்டும்; ஒவ்வொரு வீட்டு வாசலிலும் நின்று கூசாமல் வாய் திறந்து பல்லிளித்துப் ''பிச்சை அம்மா'' என்று கேட்க வேண்டும். அதாவது பிச்சைத் தொழில் செய்பவன் கூடச் சற்றுப் பிரயாசைப்பட்டு உழைக்க வேண்டும். இப்படி உழைக்காமல், சிலர், அவ்வையார் காலத்திலும் வயிறு வளர்த்து வந்தார்கள். அத்தகைய உழைப்பின்றி ஊதியம் எதிர்பார்க்கும் வாழ்க்கைக்கு ''இச்சை பல சொல்லி இடித்துண்ணும் வாழ்க்கை'' என்று அவ்வையார் பெயர் சூட்டினார். அதாவது உடலுழைப்பில்லாமல், பொய்கள் பலவற்றை இடித்துச் சொல்லி மற்றவர்களை நம்ப வைத்து நயம் பெற்று வாழும் வாழ்க்கை அந்த வாழ்க்கை; அது பிச்சை எடுப்பதைக் காட்டிலும் இழிவான வாழ்க்கை. அத்தகைய இழிவான வாழ்வு வாழ்வதைக் காட்டிலும்



மானத்தைக் காத்து இறந்து படுதல் உயர்வானது என்பது அவ்வையாரின் கருத்து.

அவ்வையார் இழித்துக் கூறிய அந்த இழிவான வாழ்க்கையை இந்த நாட்டில் வாழும் தமிழர் சிலர் வாழ்ந்து வருவது கவலைக்குரியது.

உழைக்க வாய்ப்பிருந்தும், உருக்குலையாத உடம்பிருந்தும், வேலைக்குப் போகாமலும், வேலை தேட முயலாமலும், அரசாங்கத்தின் சமூக ஏமக்காப்புத் திணைக் களத்தாருக்கு (Department of Social Security) இல்லாத பொல்லாத பொய்களைச் சொல்லி வருமான உதவிப்படி பெறும் நம்மவர்கள் அவ்வையார் சொன்ன இச்சை பல சொல்லி இடித்துண்டு வருகிறார்கள். இது இனத்திற்கும் நல்லதல்ல, மனத்திற்கும் நல்லதல்ல; மனிதப் பண்புக்கும் நல்லதல்ல. தஞ்சம் தந்த நாட்டுக்கு நன்றி கெட்டு நடக்கும் இத்தகைய செயல் மனச்சாட்சிக்குப் பொருத்தமானதா என்று எண்ணிப் பார்ப்பது நல்லது. எல்லோருந்தான் செய்கிறார்கள் என்று சொல்லி நாமும் செய்வது ஞாயமா?

*''ஆவிற்கு நீரென்று இரப்பினும் நாவிற்கு*
*இரவினில் இளிவந்ததில்''*

என்று சொன்ன வள்ளுவனைப் போற்றுகின்ற இனமல்லவா நாங்கள்? தமிழர் பண்பாடு ஏட்டளவில்தானா?

★

## 20

# வங்கியில் போடும் பணம் எங்கள் உயிரோடு வராது!

*புண்ணியம் ஆம் பாவம் போம் போன நாள் செய்த அவை*
*மண்ணில் பிறந்தார்க்கு வைத்த பொருள் - எண்ணுங்கால்*
*ஈதொழிய வேறில்லை எச்சமயத்தார் சொல்லும்*
*தீதொழிய நன்மை செயல் - **(நல்வழி - 1)***

அதிகம் சொல்ல ஆசைப்படாதவள் அவ்வை. சில சொற்களில் பெரிய விடயங்களை விளக்கும் திறமை அவளுக்குத்தான் உண்டு. சிவ வழிபாட்டின் கோட்பாடுகளை அவள் பல பாடல்களிலே சொல்லியிருக்கிறாள்.

வினைக்கேற்ற விளைவு உண்டு; நல்லது செய்தால் நன்மையை அனுபவிக்கலாம்; தீயது செய்தால் தீமையை அனுபவிக்கலாம்; விதைத்ததை நுகருவதற்குப் பிறவி எடுப்போம் என்ற கருத்துக்களை அவள் துலாம்பரமாகக் கூறியுள்ளாள். மேற்படி பாடல் அப்படியான ஒரு பாடல். புண்ணியம் என்றால் நல்ல செயல்; பாவம் என்றால் கெட்ட செயல். ஆகவே அவள் சொல்கிறாள்: புண்ணியம் வாழ்வுக்கு வளம் கொடுக்கும். பாவம் வாழ்வை அழிக்கும். அதாவது புண்ணியம் எனப்படுகின்ற நல்ல செய்கைகள் வாழ்வை நல்லதாக ஆக்குவதற்கு உதவும். பாவம் எனப்படுகின்ற தீய செய்கைகள் வாழ்க்கையை அழிப்பதற்கு வழிவகுக்கும்.



ஆகவே வாழ்க்கையை எப்படி அமைக்கப் போகிறீர்கள் என்பது உங்களிலேயே தங்கியிருக்கிறது. ஆகவே உங்கள் வாழ்வை நீங்களே தீர்மானித்துக் கொள்ளலாம். உங்கள் வாழ்க்கை என்ற வீட்டுக்கு அத்திவாரம் போடுவது நீங்கள்தான். ஆகவே செய்த வினையிருக்கத் தெய்வத்தை நோகவேண்டியதில்லை.

எண்ணிப் பார்த்தீர்களானால் உங்களுக்கே உண்மை புரியும். இந்த மண்ணில் பிறந்தவர்கள் செய்யும் முதலீடு என்ன என்று நினைக்கிறீர்கள்? இந்தப் பிறவியிலே, இங்கிலாந்திலே நற்வெஸ்ற் வங்கியிலும் (Natwest Bank), அபி நாஷனல் கட்டடச் சங்கத்திலும் (Abbey National Building Society) போட்டு வைக்கும் வைப்புக் கணக்குப் பணம்தான் எமது முதலீடு என்று நாங்கள் நினைக்கிறோம். அந்த முதலீடு நாங்கள் உயிரோடு இருக்கும் வரைக்கும்தான் பயன்படும். அல்லது பி.சி.சி.ஐ. என்ற வங்கிக்கு ஏற்பட்ட கதி நற்வெஸ்ற் வங்கிக்கு ஏற்பட்டால் உயிர் போகும் நாள் வரமுன்னரே அந்த வைப்புப் பணம் எங்கள் உயிரைப் போக்கினாலும் போக்கும். அதாவது வங்கி முதலீடு எங்கள் உயிரோடு வராது. நாம் செய்த நல்ல செயல்கள்தான் (நாம் செய்த அறங்கள்தான்) நம் உடல் அழிந்த பின்னரும் நம் உயிரோடு வந்து, அறங்காக்கின்ற முதலீடுகள். இதுதான் உண்மை. இதைவிட வேறு உண்மை இல்லை. மகாபாரதத்தில் கர்ணனின் கதை உணர்த்துகின்ற உண்மையும் இதுதான்.

இதனாலேதான் உலகிலுள்ள எல்லாச் சமயங்களும், ''தீயவை தவிருங்கள்; நல்லவை நாடுங்கள்'' என்று ஓயாமல் ஓதிக் கொண்டிருக்கின்றன. இன்று நம்மிடம் பணம் இல்லையே, நிம்மதி இல்லையே என்று நினைத்து ஏங்குகின்ற

நாங்கள், எம்மிடம் அவை ஏன் இல்லை என்பதை ஒரு கணம் கூட எண்ணிப் பார்ப்பதில்லை. வெறும்பானை பொங்காது என்பதை நினைத்துப் பார்ப்பதில்லை. ''அன்றறிவாம் என்னாது அறம் செய்க'' என்று ஆன்றோர் சொன்னதை எண்ணிப் பார்ப்பதில்லை. அவற்றை எண்ணிப் பார்த்து, நினைத்துப் பார்த்து அறவழியிலான முதலீட்டை இயன்ற வரை செய்யுங்கள் என்கிறாள் அவ்வை. தீதொழிய நன்மை செய்க என்று சமயங்கள் எல்லாம் ஒத்தபடி கூறுவதன் நோக்கமும் இதுவே.

★

# 21
# சாதிகள் எத்தனை?

*சாதி இரண்டு ஒழிய வேறு இல்லைச் சாற்றுங்கால்*
*நீதிவழுவா நெறிமுறையில் - மேதினியில்*
*இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்*
*பட்டாங்கில் உள்ளபடி - **(நல்வழி - 2)***

என்ற பாடல் ஈழத் தமிழருக்குத் தெரியும்; மிகவும் மனப்பாடமான பாடல்.

சாதி என்ற சொல் தமிழ்ச்சொல் அல்ல. குலம் என்ற சொல்லும் தமிழ்ச்சொல் அன்று. கோத்திரம் என்பதும் தமிழருக்குரிய சொல் அல்ல. இவையெல்லாம் வட மொழிச் சொற்கள். ஆகவே பழந்தமிழ் மக்களிடையே சாதிப் பாகுபாடு இருக்கவில்லையென்று வழக்குப் பேசுவோரும் இருக்கின்றோம்.

பழங்கதை என்னவாக இருந்தாலும், அவ்வையாரின் காலத்திலும் குலம், கோத்திரம், சாதி பேசும் தமிழர் இருந்திருக்கிறார்கள் என்பது உண்மை. அவ்வாறு வழக்குப் பேசியோருக்கு அறிவு புகட்டு முகமாகவே அவ்வை மேற்படி பாடலைப் பாடியிருக்கிறாள்.

இந்த வெண்பாவை எல்லோரும் பாடமாக்கி வைத்திருந்த போதிலும், இதன் மெய்க்கருத்துப் பலருக்குத் தெரியாது,

படித்தவர்களுக்கும் தெரியாது. அப்படியானால் இந்தப் பாட்டின் கருத்து என்ன?

கொடுத்தவன் பெரிய சாதிக்காரன், கொடாதவன் சின்னச் சாதிக்காரன் என்பது அல்ல பாட்டின் கருத்து; ''இட்டார்'' என்பதற்குக் கொடுத்தவர் என்பது அல்லக் கருத்து, ''இடாதார்'' என்பதன் பொருள் கொடாதவர் என்பது அல்ல.

கொடுத்தவன் பெரிய சாதி, கொடாதவன் சிறிய சாதி என்று அவ்வையார் கூறுவதாகப் பலர் நினைக்கிறோம். அவ்வையாரின் பாடல்களுக்கு உரை எழுதியவர்களும் எமக்குக் கற்பித்த பண்டிதர்களும் அப்படித்தான் கருத்துச் சொல்லி வந்தார்கள்.

வெண்பாவின் கருத்து அதுவானால் வருமானவரித் திணைக்களத்திற்குப் பயந்து நன்கொடை கொடுப்பவர்களும், பத்திரிகையில் விளம்பரப்படுத்துவதற்காகப் பணம் கொடுக்கின்றவர்களும்கூடப் பெரிய சாதிக்காரர்களாக வந்து விடுவார்கள். யோக்கியமற்ற அவர்களை அவ்வை பெரியோர் என்று புகழ்வாளா? அவ்வாறே, மனம் இருந்தும் கொடுக்க முடியாமல் தவிக்கின்ற நல்லுள்ளமுள்ள ஏழை யோக்கியர்கள் அனைவரையும் கீழ்சாதியென்று அவ்வை சொல்வாளா? நாலும் தெரிந்த அவ்வையார் அப்படியான ஒரு கருத்தைச் சொல்லியிருப்பாரா?

விஞ்ஞானத்துறையிலே பிரயோக கணிதம் என்ற துறை இருப்பது போல, இலக்கியத்திலும் பிரயோக இலக்கியம் (Applied Literature) என்ற ஒரு துறையுண்டு. ஆனால் அது தமிழ் இலக்கியத்தில் வளரவில்லை. அதனாலேதான் இலக்கியத்தில் புதிய பார்வையைச் செலுத்த முடியாமல் நாம் இடர்ப்படுகிறோம்.



அவ்வை சொல்கிறாள் : பிறப்பினால் மனிதரிடையே வேற்றுமையில்லை. ஆகவே அவர்களிடையே ஏற்றத்தாழ்வு கிடையாது; மனிதரிடையே வேறுவகையில் ஏற்றத்தாழ்வு இருப்பதாக வைத்துக்கொண்டால், மனிதரை இரண்டு வகையாகத்தான் பிரிக்கலாம். அவ்வாறுதான் நம்முடைய அறநெறிமுறைகள் வகுத்துக்கூறுகின்றன.

இந்த உலகத்திலே எவனொருவன் நீதி தவறாத நெறிமுறை என்ற பாதையில் தன்னையிட்டு, அறம் தவறாமல் நடந்து வருகிறானோ அவன் பெரியவன்; எனவே அவன் பெரியசாதி.

அவ்வாறு நீதிவழுவாத நெறிமுறையில் தன்னை நிறுத்திவைத்து ஒழுக்கம் தவறாமல் நடந்து வராதவன் சிறியவன்; அவன் இழிசாதி. இவ்வாறு கூறுகிறாள் அவ்வை. ஆனால் சிந்திக்க மறுக்கின்ற தமிழினம், கிளிப்பிள்ளை போல, யாரோ எப்போதோ சொன்னதைத் திருப்பித் திருப்பிச் சொல்கின்ற தமிழினம், இந்தப் பாடலின் மெய்ப்பொருளைக் காணவும் தவறிவிட்டது என்று தோன்றுகின்றது. சிந்திப்போமா?

★

# 22
# பொய்ச்சாட்சி

இலங்கையில் நீதி கிடைக்கவில்லை, நியாயம் வழங்கப் படவில்லை என்று கூக்குரலிட்டு, நீதியோ நியாயமோ கிடைக்காததால், உயிரைக்காத்துக் கொள்வதற்காக இந்த நாட்டுக்கு ஓடிவந்தோம் என்று சொல்லுகின்றவர்கள் நாங்கள். இலங்கையின் நீதிமன்றங்களில் நீதிபரிபாலனம் செய்கின்ற நீதிபதிகள் கூட ஓரவஞ்சகமானவர்களாக இருப்பதால் ''நீதி தன்வழிச் செல்வதில்லை'' என்று குறைகூறுகின்றவர்கள் தமிழர்கள். அப்படியான தமிழர்கள், இந்த நாட்டுக்கு வந்து மறவழிகளாலும், பிறவழிகளாலும் பணம் சம்பாதித்து வீடுகளை வாங்கியும் வியாபாரங்களை வாங்கியும் தம்மைத் தாபித்துக் கொண்டதும், எந்தக் கொடுஞ்செயலை அஞ்சி, எந்த அஞ்ஞாயத்தை எதிர்த்துப் போராடித் தோற்று, இந்த நாட்டுக்கு ஓடோடி வந்தார்களோ அந்தக் கொடும் செயல்களிலும் அஞ்ஞாய அடாவடித்தனங்களிலும் ஈடுபட்டு வருகின்றார்கள். நீதிக்கு மாறாக, நியாயத்திற்கு விரோதமாக நடக்கின்ற அத்தகைய ஆட்களைத் தட்டிக் கேட்கவோ, நீதி நியாயத்தை எடுத்துக் கூறவோ நாம் முன்வருவதில்லை. மாறாக, நமக்கு ஆதாயம் வரும் என்று கண்டால், அநியாயம் செய்தவனோடு, கன்னை கட்டிக்கொண்டு மிதிக்கப் பட்டவனுக்கு எதிராகச் சாட்சியும் சொல்லும் அளவுக்குக் கீழ்மைப்பட்டுப் போய்விட்டோம். இந்த நிலை வருந்தத்



தக்கது. ஈழத்தமிழரின் இந்த இழி நிலையை எண்ணிப்பார்த்த போது அவ்வையாரின் பாடல் ஒன்று நினைவுக்கு வந்தது.

*வழக்குடையான் நிற்ப வலியானைக் கூடி*
*வழக்கை அழிவழக்குச் செய்தோன் - வழக்கிழந்தோன்*
*சுற்றமும் தானும் தொடர்ந்தழுத கண்ணீரால்*
*எச்சம் அறும் என்றால் அறு* - ***(அவ்வை தனிப்பாடல்)***

பாட்டின் கருத்து இதோ :

தருமமும் நீதியும் அப்பாவியானவன் பக்கத்தில் இருப்பதைத் தெரிந்திருந்தும், அவனுக்காகப் பரிந்து பேசி நீதியை நிலைநாட்ட முயலாமல், பணமும் பதவியும் பழிவாங்கும் குணமும் பெற்றிருக்கின்றான் என்ற ஒரே காரணத்தினால், அநியாயம் செய்தவன் பக்கத்தில் சேர்ந்து அவனுக்காகப் பொய்ச்சாட்சி சொல்லி, அப்பாவியானவன் வழக்கில் தோற்கும் வண்ணம் நடந்து கொள்பவனுடைய கதி என்னவாகும், என்று கேள்வி கேட்டு மறுமொழியும் சொல்கிறாள் அவ்வை. வழக்கிலே தோற்ற அந்த அப்பாவியின் கண்ணீரும், அவனை அண்டிவாழ்ந்தோரின் கம்பலையும் அந்த அநியாயக்காரரைச் சும்மாவிடாது. வள்ளுவன் சொன்னது போல ''ஏழை அழுதகண்ணீர் கூரியவாளொக்கும்'' என்றபடி அப்பாவி அழுத கண்ணீர் வாளாக மாறி வாய்த்த போதெல்லாம் அந்தப் பாவியை வெட்டும், வெருட்டும், வதைக்கும்; அத்தோடு நின்றுவிடாது, செல்வத்துட் செல்வமான குழந்தைச் செல்வமும் அத்தகைய பாவிகளுக்குக் கிடையாதுபோகும்; தெய்வம் நின்றறுக்கும் என்று திட்டுகின்றாள் அவ்வை.

பணச்செருக்காலோ, பதவிச்செருக்காலோ, படிப்பின்மை யாலோ இந்த நாட்டில் பண்புகெட்டு நடக்கநினைக்கும் எங்கள் தமிழினத் தறிதலைகள் அவ்வையின் பாடலின் பொருளை உணருமா? நீதி என்பது பெரிய சங்கதி என்பதை நினைக்குமா? ''மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின் அறம் சூழும் சூழ்ந்தவன் கேடு'' என்று சொன்ன வள்ளுவனை எண்ணிப்பார்க்குமா?

★

# 23

# வன்முறையும் வேண்டுவதே!

உலகத்திலே வேண்டாதது என்று ஒன்றில்லை. எல்லாம் வேண்டியவையே. ஆனால் ஒவ்வொன்றுக்கும் ஓர் உரிய இடம், நேரம் என்பன வேண்டும். அப்படிப் பார்க்கின்ற போது, சில சமயங்களில் சில இடங்களில் சில ஆட்களைப் பொறுத்தவரையில் வன்முறை எனப்படுகின்ற பலாத்காரமும் அவசியமாகின்றது. இப்படிச் சொல்வது ஒரு மாதிரியாகத்தான் இருக்கும். சமயக் கோட்பாடுகளோடு முரண்படுவதாகக் கூடத் தோன்றும். ஒரு கன்னத்தில் அறைந்தால் மற்றக் கன்னத்தையும் நீட்டு என்று கூறுகின்ற கோட்பாடுகளுக்கு விரோதமாகத் தோன்றும். ஆனால் யதார்த்தத்தை அலசிப் பார்த்தால், அமைதியையும் சாத்வீகத்தையும் போதித்த பெரியவர்களே வன்முறைக்கும் உரிய இடத்தைக் கொடுத் திருப்பதைப் பார்க்கலாம்.

''இனிய உளவாக இன்னாத கூறல் கனியிருப்பக் காய் கவர்ந்தற்று'' என்று கூறிய வள்ளுவனே, வன்முறை என்ற வாசகம்தான் சிலருக்கு விளங்கும் என்று வழுத்திச் சொல்லியிருக்கிறான். மேலோர் யார்? கீழோர் யார்? என்பதற்கு வரைவிலக்கணம் கூறவேண்டிய அவசியம் வள்ளுவனுக்கு வந்தது. அவன் தடுமாறவில்லை. உடனடியாகவே வரை விலக்கணம் வரைந்து விட்டான். ''சொல்லப்பயன்படுவர் மேலோர் கரும்புபோல் கொல்லப் பயன்படும் கீழ்' என்று சொல்லிவிட்டான். நல்லவரைப் பொறுத்தவரையில்

அவர்களுக்குச் சொல்லவே தேவையில்லை. அவர்கள் ஏவாமக்கள்; சொல்லாமலே சரியானதைச் செய்வார்கள்; குறிப்பறிந்து செய்வார்கள்; அப்படிச் சொல்லாமலே செய்ய மறந்தாற் கூடச் சொன்னவுடன் செய்து முடித்து விடுவார்கள். இவர்கள் பெரியவர்கள், மேலவர்கள், சான்றோர்கள்.

கீழோர் என்பவர் நல்ல காரியம் எதையும் செய்வதே கிடையாது. நல்ல காரியம் எதையும் செய்யும்படி சொன்னாலும் செய்யமாட்டார்கள். அவர்களைக்கொண்டு ஏதேனும் நல்ல காரியம் செய்விக்க வேண்டுமானால் அவர்களை நசுக்கி நொறுக்க வேண்டும். அப்போதுதான் செய்வார்கள். இவ்வாறு இயம்புகிறான் முக்காலும் உணர்ந்த முனிவன் வள்ளுவன். நல்லவர்களைக் கொண்டு நல்ல காரியம் செய்விப்பது திராட்சைப் பழத்திலிருந்து சாறு எடுப்பதற்குச் சமம். கையால் மெல்லமாகப் பிழிந்தவுடனேயே சாறு கிடைக்கும். கெட்டவர்களிடமிருந்து நன்மை பெறுவது என்பது காய்ந்த கரும்பிலிருந்து சாறு எடுப்பதுபோன்ற ஒரு கடினமான வேலை. இதைத்தான் ''சொல்லப் பயன்படுவர் மேலோர் கரும்புபோல் கொல்லப் பயன்படும் கீழ்'' என்று அழகாகச் சொன்னான் வள்ளுவன்.

இதே கருத்தை வள்ளுவரின் சகோதரியென்று அழைக்கப் படும் அவ்வையார் ஒரு வெண்பாவில் விளக்குகின்றார்.

*பெற்றார், பிறந்தார், பெருநாட்டார், பேருலகில்,*
*உற்றார் உகந்தார் எனவேண்டார் - மற்றோர்*
*இரணம் கொடுத்தால் இடுவர் இடாரே*
*சரணம் கொடுத்தாலும் தாம் -* ***(நல்வழி - 18)***



வெண்பாவின் கருத்தைப் பார்ப்போமா?

நம்முடைய சமூகத்திலே வாழ்கின்ற சிலருக்குத் தம்மைத் தவிர வேறு எவருமே இருப்பதாகத் தெரியவில்லை. அவர்கள் பெற்றோர் என்றும் பார்ப்பதில்லை; உடன்பிறந்தவர்கள் உள்ளார்களே என்று நினைப்பதுமில்லை; தாம் பிறந்த நாட்டிலே பிறந்து வாழ்ந்து கொண்டிருக்கும் மற்றவர்கள் என்னபாடு படுகிறார்களென்று எண்ணுவதுமில்லை. தமக்குச் சொந்தமானவர்களும் பந்தமானவர்களும் நொந்தழிந்து நலிகின்றார்களே என்று சிந்திப்பதுமில்லை. இவர்களை யெல்லாம் மறந்துவிட்டாலும், தம்மால் ஒருகால் விரும்பப் பட்ட சிலர் அரும்பாடு படுகிறார்களே என்று கவல்வது மில்லை. தாம் உண்டு, தம்பிள்ளை குட்டிகள் உண்டு, அவர்களது பள்ளியுண்டு, படிப்புண்டு, பிறந்தநாள் 'பார்ட்டி' உண்டு என்ற அளவில் சுயநலமிகளாக இருந்துவிடுவார்கள். இப்படியானவர்கள் கீழ்ச்சாதிகள், இனவிரோதிகள், இனத்தின் புல்லுருவிகள். இவர்களிடம் அன்பாகச் சொல்லி எதையும் சாதிக்க முடியாது. ஏனென்றால் அன்பு என்ற மொழி அவர்களுக்குப் புரியாது. கெஞ்சிப் பாருங்கள், கொஞ்சிப் பாருங்கள்; ''அய்யாசாமி, இரங்கு அப்பா'' என்று சரணம் போட்டுப் பாருங்கள்; அசையமாட்டார்கள்; எச்சிற்கையாலும் காகம் துரத்த மாட்டார்கள்.

அவர்களைச் செவியில் பிடித்து அடியும் உதையும் கொடுத்து ''எடெடா'' ''கொடெடா'' என்று கேளுங்கள். கேட்ட பொருள் மட்டுமல்லாமல், கேளாத பொருட்களையும் எடுத்துத் தந்துவிட்டு, எடுபிடி வேலையும் செய்வார்கள். ஏனென்றால் இந்த மொழி அவர்களுக்கு எளிதில் புரிந்து விடுகிறது!

அனுபவத்தின் விளைவாக அவ்வை கூறிய பாடலை நாம் மறக்கக்கூடாது. அவ்வைக்குச் சாட்சியாக வள்ளுவன் கூறியதையும் நினைத்துப்பாருங்கள்:

"ஈர்ங்கை விதிரார் கயவர் கொடிறுடைக்கும்
கூர்ங்கையர் அல்லாத வர்க்கு."

★

24

# உரிமையும் கடமையும்!

*பண்டு முளைப்பது அரிசியே ஆனாலும்*
*விண்டு உமிபோனால் முளையாதாம் - கொண்டபேர்*
*ஆற்றல் உடையார்க்கும் ஆகாது அளவுஇன்றி*
*ஏற்ற கருமம் செயல் -* ***(மூதுரை - 11)***

ஆத்திசூடி, கொன்றை வேந்தன், நல்வழி, மூதுரை என்ற இலக்கிய நூல்கள் அவ்வையால் இயற்றப்பட்டனவாகச் சொல்லப்படுகின்றது. மேற்படி பாடல் அவ்வையார் பாடிய நாற்பது மூதுரைப்பாடல்களில் ஒன்று. இந்த இலக்கியப் பாடலில் இயற்கை வளமும் அரசியல் வளமும் ஒருங்கே காணப்படுவதால் அப்பாடலின் இலக்கிய நயத்தை வாசகர் களுடன் பகிர எண்ணினேன். யான் தரும் விளக்கத்துடன் எல்லாரும் ஒருப்பட வேண்டியதில்லை. ஒருப்படுவார்கள் என்று எதிர்பார்க்கவுமில்லை. ஏனென்றால் எழுதினவன் ஏட்டைக் கெடுத்தான், பாடினவன் பாட்டைக் கெடுத்தான் என்பது தமிழ் வழக்கு. எவரும் எதையும் கெடுப்பதில்லை; நாங்கள் பார்க்கின்ற பார்வையில் ஏற்படுகின்ற வேறுபாடு களினால் சில சமயங்களில் இப்படி ஆகிவிடுகின்றது. உதாரணத்திற்கு இதைப் பாருங்கள்:

'ஊக்கமது கை விடேல்' என்பது வாசகர்கள் அறிந்தது தான். இஃது அவ்வையார் இயற்றிய 'ஆத்திசூடி'யில் வரும்

ஓரடிப்பாடல். பார்க்கின்ற பார்வையைப் பொறுதது இதற்கு இரண்டு அர்த்தங்கள் கொடுக்கலாம். 'ஊக்கமது கை விடேல்' என்றால் ஊக்கத்தைத் தருகின்ற மதுபானத்தைக் கைவிடாதே; நன்றாகக் குடி; குடிமகனே நன்றாகக் குடி என்று இன்றைய இளைஞர்கள் இந்த ஒற்றையடிப் பாடலுக்கு ஒற்றைப் போக்கான அர்த்தம் கொடுக்கின்றார்கள். ஆனால் அவ்வை கருதியது வேறு. சோம்பி இராதே; சுறுசுறுப்பாக இரு; ஊக்கமாக இரு என்பதுதான் அவ்வையின் அறிவுரை. ஆனால் இன்றைய இளைஞர்கள் இவ்வாறு தமக்குப் பொருத்தமான முறையில் கருத்துப் பிரிக்கின்றார்கள். எல்லாம் பார்வையில் விளைந்த வித்தியாசங்கள்.

பார்வையில் கோணல் இல்லாமல் மேற்படி வெண்பாப் பாடலை இப்போது பார்ப்போம். இந்தப் பாடலில் ஒரு தாவரவியல் உண்மை கலந்துள்ளது. நாம் எல்லாம் சோறு உண்பவர்கள். நெல்லைப் பற்றியும், நெல் முளைப்பது பற்றியும் நன்றாக அறிந்தவர்கள். நெல்லை விதைக்கிறோம். ஓரிரு நாட்களில் அது முளைக்கிறது. முளை கிளம்புவது அரிசியிலிருந்துதான். அந்த முளைதான் வேராகவும், தண்டாகவும் பரிணமிக்கிறது. அரிசியைச் சுற்றியிருக்கும் கோதாகிய உமியிலிருந்து எதுவும் கிளம்புவதில்லை. ஆனாலும் அந்த உமியில்லாவிட்டால் அந்த அரிசியிலிருந்து முளை கிளம்பாது. நெல்லிலிருந்து அரிசியை அகற்றி அரிசியை மட்டும் நட்டால் அந்த அரிசியிலிருந்து முளை வராது. அரிசியைச் சுற்றி உமியிருந்தால்தான் அந்த அரிசி முளைக்கும்; முளைத்த முளை கிளம்பும். இது முக்காலும் உண்மை, எக்காலும் உண்மை.



இந்த அரிசியையும் நெல்லையும் உதாரணம் காட்டி உலகத்தின் இயற்கை ஒன்றை விளக்குகின்றாள் அவ்வை. அரிசிதான் மணி; உமி வெறும் கோதுதான். ஆனாலும் அந்த மணி, வெறும் கோதுபோலத் தோற்றமளிக்கின்ற உமியில்லாமல் வளர முடியாமல் இருக்கின்றது. இதைப் போலவே எவ்வளவு ஆற்றல் படைத்தவர்களாக இருந்தாலும், பக்கபலமும் ஆதரவும் இல்லாமல் அவர்கள் அரிய பெரிய காரியங்களை வெற்றிகரமாகச் சாதிக்கமுடியாது. அதாவது பெரிய ஆற்றல் படைத்தவர்களும் ஏற்ற கருமம் செய்ய வேண்டுமானால் பக்கபலம் அவசியம். அந்தப் பக்கபலம் இல்லாவிட்டால் கருமம் செய்ய முடிந்தாலும், பெருமை தரத்தக்க கருமங்களைச் செய்யமுடியாது. இந்த உண்மையை விளக்க ஓர் உதாரணம் பார்ப்போம்.

இலங்கையிலே எங்கள் தமிழ் மண்ணிலே எங்கள் இளைஞர்கள் தமிழ் மக்களின் விடிவுக்காகத் தம் உயிரைத் துச்சமென மதித்துப் போராடி வருகின்றார்கள். ஒரு சில சமயங்களில் அவர்களை அப்படி இப்படி என்று சிலர் விமர்சித்தாலும், அவர்கள்தான் எங்கள் விடிவெள்ளி என்பதில் எவருக்கும் சந்தேகம் இருக்கமுடியாது. அவர்கள்தான் எங்களுடைய அரிசிகள், அரிசி மணிகள். அவர்கள்தான் முளைக்க வல்லவர்கள். அவர்கள்தான் முளைத்து வளர்ந்து எமக்கு ஆறுதல் தரப்போகின்றவர்கள். அவர்களால் முடியா விட்டால் இலங்கையில் இனி வேறெவராலும் முடியாது. அவர்களுடைய ஆற்றலை நாம் போற்றுகின்றோம். கடந்த பதினைந்து ஆண்டுக் காலத்தில் அவர்கள் தமது ஆற்றலை உலகுக்கே காட்டிவிட்டார்கள்.

இருப்பினும் அப்பேர்ப்பட்ட ஆற்றல் படைத்தவர்களாக உள்ள அரிசிகளும், உமியில்லாமல் வளரமுடியாது. இலங்கையிலும் இலங்கைக்கு வெளியேயும் இலண்டன், அமெரிக்கா, அவுத்திரேலியா, கனடா போன்ற நாடுகளிலும் வாழும் தமிழறிஞர்களை, தமிழ் ஆர்வலர்களை அத்தகைய உமிகளாகக் கொள்ளலாம். அவர்கள் வெறும் உமிகள் அல்ல; போசாக்கும் பொலிவும் வலுவும் வழங்குகின்ற உமிகள். அத்தகைய உமிகள் வெவ்வேறு நாடுகளில் வெவ்வேறு பேர்களில் இயங்கிவருகின்றன. அவை சிந்தனைக் கருவூலங்களாக, சிந்தனைக் கொள்ளிடங்களாக உள்ளன. ஆனால் அவை எல்லாம் தம்பாலுள்ள போசாக்கை, வலுவை அந்த அரிசிகளுக்கு முழு அளவில் வழங்கத் தலைப்பட வில்லை. அவர்கள் ஒன்று சேர்ந்து ஒத்தாசையுடன் உழைத்தால்தான் ஈழத்தமிழரிசி தீங்கின்றிச் செவ்வனே வளரும்.

இது தொடர்பில் சில ஆண்டுகளுக்கு முன்னர் தமிழீழ ஆய்வு நிறுவனத்தார் நடத்திய ஒரு கருத்தரங்கில் தமிழன்பரும் உழைப்பால் உயர்ந்தவரும் ஆன காலஞ்சென்ற ஏ.ரி.எஸ்.இரத்தினசிங்கம் அவர்கள் கூறிய ஒரு கருத்தை நினைவுகூருவது நல்லது.

அவர் சொன்னார் : ''தமிழீழத்தில் பையன்கள் என்ன செய்கின்றார்கள், எப்படிச் செய்கின்றார்கள் என்று தட்டிக் கேட்க முயலாதீர்கள். நாம் எல்லாம் இங்கே ஓடோடி வந்து விட்டதன் மூலம் தட்டிக்கேட்பதற்கான உரிமையை இழந்து விட்டவர்கள். ஏனென்றால் ஈழத்தில் அவர்கள்படும் கயிட்டம்



எதிலும் நாம் பங்கெடுக்கவில்லை. நாம் கால் இழக்கவில்லை; கையிழக்கவில்லை; உயிரிழக்கவில்லை. கால் இழந்தும், கையிழந்தும், உயிரிழந்தும் தமிழ் மானத்தை இன்றுவரை கட்டிக்காத்துக் கொண்டிருப்பவர்கள் அவர்கள்தான். எனவே போராட்டத்தை அவர்களிடம் விட்டுவிடுவோம். உரிமை எமக்கில்லை; ஆனால் கடமை எமக்குண்டு. நம்மில் தொண்ணூறு வீதமானோர் ஈழத்தில் பிறந்தவர்கள். அந்த மண்ணில் வளர்ந்தவர்கள். தமிழ் மண்ணால் வளர்க்கப் பட்டவர்கள். ஆகவே நாம் எல்லோரும் தமிழீழ மண்ணுக்குக் கடமைப் பட்டவர்கள். எனவே எமது கடமையைச் செய்ய முன் வாருங்கள்.'' இவ்வாறு திரு. இரத்தினசிங்கம் உருக்கமாக அறைகூவல் விடுத்தார். மேற்படி பாட்டின் பொருளைத்தான் அவரும் சொன்னார்.

அரிசி அங்கே முளைக்க வேண்டுமானால் இங்கிருக்கும் நாங்கள் உமியாக உதவ வேண்டுமென்ற கருத்து இப்பாடலில் அடங்கியுள்ளது. உமியின் முக்கியத்தை அரிசியும் உணர வேண்டும்; அரிசியின் ஆற்றலை உமியும் புரியவேண்டும். அரிசியை அரசனுக்கு ஒப்பிட்டால் உமியை மந்திரிமாருக்கு ஒப்பிடலாம். அரசன் பிழைவழி போவதுபோலத் தெரிந்தால் அரசனுக்கு அறிவூட்டல் மந்திரிமாரின் கடன். அரசன் சொல்வழி கேளானென்று, எமக்குள்ளே எண்ணிக்கொண்டு அறிவுரை கொடாதிருத்தல் மந்திரிக்கு அழகல்ல. மந்திரியின் பண்பைக் கூறவந்த கம்பன்: 'தம் உயிர்க்கு உறுதி எண்ணார் தலைமகன் வெகுண்டபோதும்; வெம்மையைத் தாங்கி நீதிவிடாது நின்றுரைக்கும் வீரர்' என்று விளக்கினான். உயிர்

போவதாக இருந்தாலும், சரியானதையும், நீதியானதையும் உணர்த்தல் மந்திரியின் கடன். ஏற்கப்படுமோ ஏற்கப்படாதோ என்ற கேள்வி மந்திரிக்கு எழக்கூடாது. ஏற்றாலும் சரி ஏற்கா விட்டாலும் சரி அறிவுரை வழங்கல் அமைச்சரின் பணி. அத்தகைய ஒரு பணி உமியாம் நமக்கும் உண்டென்று அவ்வை கூறியுள்ளாள். அவளது பாடலின் பொருளைச் சிந்தித்துச் செயற்படுவோம்.

★

# 25

# கோபம் வேண்டாம்

வரைவிலக்கணம் வரைவதில் வல்லவர் வள்ளுவர். இனம் என்றால் யார் என்பதற்கு ஓரிடத்தில் அவர் வரைவிலக்கணம் சொல்கிறார். உற்றுழி உதவுகின்ற ஏமப்புணை போன்றவர்கள் தான், இனத்தவர்கள் என்கின்றார் வள்ளுவர். அதே இடத்தில் சினம் என்றால் என்ன என்பதற்கும் வரைவிலக்கணம் கூறுகின்றார். தன்னோடு இருக்கின்றவர்களையெல்லாம் எது கொல்லுமோ அதுதான் சினம் என்று கூறிச் சினத்தின் மறுபெயர் சேர்ந்தாரைக் கொல்லி என்கின்றார்.

''*சினம் என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம் என்னும் ஏமப்புணையைச் சுடும்*'' என்பது வள்ளுவர் வாக்கு.

கோபம் கொள்வதைப் பெரிய கெட்டித்தனமாக நினைத்து விடவேண்டாம்; அது உற்றவர்களையும் உறவினர்களையும் அழித்து விடக்கூடிய ஆபத்தான கருவி என்று வள்ளுவர் அடித்துச் சொல்கிறார். கோபம் வேண்டியதுதான். அது மனித உணர்ச்சிகளில் ஒன்று. ஆகவே அது எல்லோரிடமும் இருப்பது இயல்பே. ஆனால் கோபம் கொதிக்கக் கூடாது. வந்துவிட்டுப் போய் விடவேண்டும். தணிந்துவிட வேண்டும். ஆறிவிட வேண்டும். இதனாலேதான், ''ஆறுவது சினம்'' என்றாள் அவ்வை. சினம் ஆறாவிட்டால் அது இனம் என்று சொல்லப்படுகின்ற சொந்த பந்தங்களையும் அழித்து மனிதனைத் தனித்தவனாக்கி அவனையே அழித்துவிடும்.

இந்தச் சினம் சிலரைப் பொறுத்தவரையில் உடனே ஆறும்; இன்னும் சிலரைப் ரொபறுத்தவரையில் சற்றுச் சென்று ஆறும்; வேறு சிலரைப் பொறுத்தவரையில் ஆறவே ஆறாது.

ஆறாத சினம் பூணும் அற்பர்களைக் கயவர் என்கின்றாள் அவ்வை. நியாயமான இடத்தில் சினம் வந்தாலும், வந்தவுடனேயே ஆறிவிடுகின்ற சினம் கொண்டவர்களைச் சான்றோர் என்கிறாள் அவ்வை. கயவர்களுக்குக் கோபமோ, அதன் விளைவான பகைமையோ ஏற்பட்டுவிட்டால் அவர்கள் அதனை மறக்கவே மாட்டார்கள்; தொடர்ந்து பகையும் கோபமும் பாராட்டிக்கொண்டே இருப்பார்கள். கற்பாறையிலே ஏற்பட்ட பிளவுபோல அவர்கள் ஒருபோதும் ஒட்ட மாட்டார்கள்; ஒட்ட வைக்கவும் முடியாது. நல்லவர்களுக்கு, உள்ளம் பண்பட்டவர்களுக்கு வருகின்ற கோபம் அப்படிப் பட்டதல்ல; அது வந்தது தெரியாமலே ஆறிவிடும்.

நீர் கிழித்த வடுப்போல மாறுகின்ற சினத்தைக் கொண்ட சான்றோராக வாழ்வதுதான் மேல். ஆனால் சாதாரண வாழ்வில் அத்தகைய சான்றோராக வாழ்வது சிரமமாக இருக்கலாம். அதற்காக ஒருபோதுமே ஒட்டாத கற்பிளவுக் கோபக்காரராக நாங்கள் இருந்து சீரழிந்து போகவேண்டுமா? மன்னித்து மறந்து ஒன்றாகிவிடும் பொற்பிளவுக் கோபக்காரராக நாம் இருக்க முடியாதா? எங்கள் நாட்டில் சொந்தபந்தங்களைப் பிரிந்து வந்த நாங்கள், இந்த நாட்டில் ஒன்றாகத் திரண்டிருக்கின்ற உற்றார் உறவினர்களுடன் ஒற்றுமையாக வாழாமல், பழம் பகையைப் பேசிக் கோபதாபங்களை வளர்த்துக் கற்பிளவு மாந்தராக இருந்து மாளலாமா? ''குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை'' என்பதை மறக்கலாமா?



*கற்பிளவோடு ஒப்பர் கயவர் கடும் சினத்துப்*
*பொற்பிளவோடு ஒப்பாரும் போல்வாரே - விற்பிடித்து*
*நீர் கிழிய எய்த வடுப்போல மாறுமே*
*சீர் ஒழுகு சான்றோர் சினம்* - **(மூதுரை - 23)**

என்று நாம் படித்ததெல்லாம் வீண்தானா? மேல்நாட்டில் மேன்மையுற முனைகின்ற தமிழினமே சிந்திப்போமா?

★

# 26

# தெரிந்ததைச் செவ்வையாகச் செய்வோம்

உலகத்தில் பிறந்த எல்லோரும் ஆற்றல் படைத்தவர்களே. கடவுள் எல்லோருக்கும் ஒன்றோ பலவோ ஆய ஆற்றல்களைக் கொடுத்துள்ளான். ஆனால் எல்லா ஆற்றல்களையும் சம அளவில் கொடுக்கவில்லை. சிலவற்றில் மிகுந்த ஆற்றலையும் வேறு சிலவற்றில் குறைந்த ஆற்றலையும் கொடுத்துள்ளான். ஊக்கம் உடையவர்கள் இந்தக் குறைந்த ஆற்றலைக் கூடத் தமது முயற்சியினால் அதிகரித்துக் கொள்கிறார்கள். இவ்வாறு செய்பவர் வெகுசிலரே. பொதுவாகப் பார்க்கப் போனால் எல்லோருக்கும் ஒவ்வொன்று எளிதாக உள்ளது. வான்குருவி கட்டுகின்ற கூட்டைப் போன்ற நுட்பமான கூட்டினை வேறெவரும் கட்டிவிட முடியாது. கறையான் கட்டுகின்ற புற்றுப் போன்ற வேலைப்பாடான வீட்டினை வேறு எந்த மிருகமும் கட்ட இயலாது. தேனீக்கள் கட்டுகின்ற வதையாகிய தேன் கூட்டை வேறெந்தச் செந்துவும் கட்ட முடியாது. ஆகவே ஒவ்வொரு சீவராசிக்கும் ஒவ்வொன்று எளிதானதாகவும் மற்றையவை கடினமானவை யாகவும் உள்ளன. ஆகவே இதை இவ்வாறு அழகாகச் செய்கின்ற நான் அதை அப்படி அழகாகச் செய்ய முடியவில்லையே என்று கவலைப்படுவது ஞாயமில்லை. ஏனென்றால் இயற்கை என்ற ஈசன் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமாக அளந்துள்ளான். கருப்பையில் இருக்கும் உயிருக்கும், கல்லுக்குள் இருக்கும் தேரைக்கும் அவன்



வழங்கியுள்ள ஆற்றல்கள் அபாரமானவை. இது மனிதர்களாகிய நமக்கு நன்றாகத் தெரியும். ஆனாலும் சில நேரங்களில், ஆர்வ மிகுதியினாலும் ஆசையின் கொடும்பிடியினாலும் நாம் இந்த உண்மையை மறந்து விடுகிறோம். அவ்வாறு மறப்பது காரணமாகச் செய்யக் கூடாத சிலவற்றைச் செய்யவும் துணிந்து விடுகின்றோம். நன்றாகக் கற்றவர்கள், உலகம் உணர்ந்தவர்கள் அவ்வாறு செய்வதில்லை. அரைகுறைப் படிப்புப் படித்தவர்களும் அரை வேக்காட்டு வித்துவான்களும் சில சமயங்களில் இவ்வாறு தமக்கடாததைச் செய்யத் துணிந்து விடுகிறார்கள். இந்த மாதிரியான நிலை இன்றல்ல அன்றும் அவ்வையார் காலத்திலும் இருந்திருக்கின்றது. அது மட்டுமல்ல, நாலடியார் என்ற வெண்பா நூல் இயற்றப்பட்ட காலத்திலும் இருந்திருக்கிறது.

நன்றாகப் படியாமையினாலும், இயற்கையான கொடை இல்லாமையினாலும் ஆற்றல் குறைந்தவர்களாக இருப்ப வர்கள், தமது குறையை உணராமல் நிறை உள்ளவர்கள் போல நடிக்க முற்பட்ட சம்பவங்கள் பலவற்றை அவ்வையார் தமது வாழ்வில் பலமுறை கண்டிருக்கிறார். அவர்களைக் கண்டித்துத் திருத்த விரும்பிய அவ்வையார், அவர்களின் அசட்டுத் துணிச்சலின் வெறுமையையும் பொய்ம்மையையும் வெளிக் காட்டவென ஒரு பாடலை இயற்றினார். அந்தப் பாடலின் மூலம் ஓர் அழகான உவமானத்தைக் காட்டி அந்த அசட்டுத் துணிச்சல்காரரின் வறட்டுத் தன்மையை வெளிக்காட்டினார். ஆற்றலும் அறிவும் குறைந்த ஒருவன் ஆற்றல் நிறைந்தவன் போல நடிக்க முயலுவது, காட்டிலே உள்ள தோகை மயில்

ஆடுவதைப் பார்த்துவிட்ட காட்டுக் கோழியானது, தான் வெறும் பறைக் கோழி என்பதை மறந்து, கனவுலகில் மிதந்து, தன்னையும் மயிலாகக் கற்பனை செய்து அழகே இல்லாத தன்னுடைய சிறகை விரித்து ஆடுவதற்கு ஒப்பாகும் என்று கூறுகின்றார்.

இதோ அந்த அழகான அறிவூட்டும் பாடல்:

*கான மயில் ஆடக் கண்டிருந்த வான் கோழி*
*தானும் அதுவாகப் பாவித்துத் தானும் தன்*
*பொல்லாச் சிறகை விரித்து ஆடினால் போலுமே*
*கல்லாதான் கற்ற கவி - **(மூதுரை - 14)***

இந்தப் பாடல் எம்மிற் பலருக்கு நன்றாகத் தெரியும். நினைவில் நிறுத்த வேண்டிய பாடல். ஆனாலும் எம்மிற் பலர் இதனை அடிக்கடி மறந்துவிடுகிறோம். ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு காலத்தில் ஒவ்வொன்று எளிதாக இருக்கும். எல்லாக் காலத்திலும் எல்லாருக்கும் எல்லாம் எளிதாக இருக்காது. காசியஸ் கிளேயின் (Cassius Clay) பொற்காலம் போய்விட்டது. அவர் இனிமேல் கைக்குத்துச் சண்டையை நினைத்தும் பார்க்கக் கூடாது. மைக் டைசன் (Mike Tyson) கைக்குத்துச் சண்டையோடு நின்று விடவேண்டும். அவர் மல்யுத்தப் போட்டிக்குப் போக இந்த வயதில் எண்ணக் கூடாது. காள் லூயிஸ் (Carl Lewis) ''மரதன்'' ஓட்டப் போட்டிக்குப் போகக் கூடாது. அப்படிப் போனால், வெற்றி பெற்ற ஆள் அவுடதம் அயின்றார் என்று பழிசுமத்தக் கூடாது. ஏனென்றால் எல்லோர்க்கும் ஒவ்வொன்றுதான் எளிது; எல்லாவற்றையும் அளையக் கூடாது. ஆடுபவர் ஆட்டத்தோடு நின்றுவிட வேண்டும்; பாடுபவர் பாட்டோடு நின்றுவிட வேண்டும்; பேச்சாளர் பேச்சோடு நின்றுவிட வேண்டும். நாய் கழுதையின் வேலையைச் செய்ய முனையக் கூடாது. கழுதை நாயின் வேலையைச் செய்ய நினைக்கக் கூடாது. அவ்வையின் பாடல் நமக்கு வழிகாட்டுவதாக.

★

# 27

# அன்பும் சிவமும் ஒன்று

நான் யார்? என்னை ஆக்கியவன் யார்? நான் ஏன் பிறந்தேன்? என்ற கேள்விகளை, உலகத்தில் முதன்முதலில் எழுப்பி விடையும் காண முயன்றவர்கள் இந்தியர்களே. இந்தியாவின் ஆதிக்குடியினர் திராவிடர்கள் என்பது வரலாற்று உண்மையாதலால், இன்றைய தமிழரின் மூதாதையர்தான் மேற்படி சமயக் கேள்விகளை எழுப்பி விடை கண்டார்கள், அல்லது விடை காண முயன்றார்கள் என்று கூறுவது முற்றிலும் பிழையாகாது. திராவிடர்கள் முப்பொருள் உண்மை என்றார்கள், அதாவது பசு, பதி, பாசம் என்ற மூன்றும் உள்பொருள் என்றார்கள். அத்துடன், சீவனும் சிவனும் ஒன்றல்ல, அவை இரண்டும் வெவ்வேறானவை என்றார்கள். இந்தியாவுக்குள் நுழைந்த ஆரியர்கள் சீவனும் சிவனும் ஒன்றே என்றார்கள். வெவ்வேறாகத் தெரிவது மாயையினால் என்றார்கள். அன்றே திராவிடரும் ஆரியரும் பிணங்கினார்கள். சீவனும் சிவனும் இரண்டு என்றவர்கள் சைவசித்தாந்திகள் எனப்பட்டார்கள். சீவனும் சிவனும் ஒன்றே என்றவர்கள் வேதாந்திகள் எனப்பட்டார்கள். இன்று வடஇந்தியர் வேதாந்திகளாகவும், தென்னிந்தியர் சித்தாந்திகளாகவும் இருந்து வருகின்றார்கள். வேதாந்திகள் சொல்வது சரியா சித்தாந்திகள் சொல்வது சரியா என்பது இங்கே கேள்வியல்ல. இரண்டும் பிழையாகவும் இருக்கலாம். இவை இரண்டும் மானுட முயற்சிகளின் விளைவான இருவேறு தரிசனங்களே.



வேதகால வேதாந்தத்தை அந்நாளிலேயே பலர் எதிர்த்தனர். அவர்களில் முதன்மையானவர் கவுதம புத்தர். புத்தரின் எதிர்ப்பின் விளைவாகப் பிறந்தது பவுத்த சமயம். தீர்தங்கர்களும் வேதாந்தத்தை எதிர்த்தார்கள். அவர்களின் எதிர்ப்பால் தோன்றியதே சமண சமயம். அந்தச் சமயம் சரியானதா இந்தச் சமயம் சரியானதா என்ற கேள்விகள் அன்றிருந்தது போலவே இன்றும் இருந்து வருகின்றன; இனிமேலும் இருந்து வரும். இந்து சமயத்துக்கு இத்தகைய கேள்விகள் புதியனவல்ல. இந்து சமயம் நல்ல சமயமா, பவுத்த சமயம் நல்லதா என்ற கேள்வி யாழ்ப்பாணத்தில் கரவெட்டியில் வாழும் சில மக்களுக்குச் சில ஆண்டுகளுக்கு முன்னர் எழுந்தது. சாப்பாடும், சமுதாய அந்தஸ்தும் தரவல்ல சமயம் எதுவோ அதுவே நல்ல சமயம் என்று கரவெட்டி மக்கள் சிலர் தீர்மானித்து, புத்த விகாரைகள் எழுப்ப அனுமதித்து, அங்கே வழிபாடும் செய்தார்கள்.

வெள்ளையர் நம்மை ஆண்ட காலத்திலும் இப்படியான கேள்விகள் எம்மவருட் சிலரைக் குடைந்திருக்கின்றன. சமுதாயக் கொடுமை, சாதிக் கொடுமை, வறுமை முதலியவற்றில் வாடிய நம்மவருட் சிலரை இத்தகைய கேள்விகள் குடைந்து விறாண்டிய போது, அவர்கள் கிறீத்தவ மதமே நல்ல மதம் என்று முடிவெடுத்துச் சமயம் மாறினார்கள். இவ்வாறு மாறியவர்களிற் பலர் ஏன் மாறினார்கள் என்பதை உண்மையில் உணர்ந்த ஐரோப்பிய பாதிரிமார் அவ்வாறு மாறினவர்களை வர்ணித்த போது அவர்களைச் ''சோற்றுக் கிறீத்தவர்கள்'' (Rice Christians) என்று வர்ணித்தார்கள். இந்தச் சொற்றொடர் ஒக்ஸ்போட் ஆங்கில அகராதியிலும் புகுந்து விட்டது.

மதமாற்றம் உலகுக்குப் புதியதல்ல. இன்றும் இலங்கையில் மதமாற்றம் பெருமளவில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இனப்பூசலாலும், கும்பல்களின் குளறுபடிகளாலும் வாடும் தமிழருக்கு உதவி அளிக்க எனச் சென்றுள்ள ஐரோப்பிய நாட்டின் அல்லரசுத்தாபனங்கள் (Non - Governmental Organisations) இலாவகமாக இந்த மதமாற்றத்தைச் செய்து கொண்டிருக்கின்றன. இதை நாம் மறந்து விடக் கூடாது. வெளிநாட்டுச் சோழியன்களின் குடுமி சும்மா ஆடாது.

இலங்கைத் தமிழ் மண்ணில் மட்டுமல்ல, புலம் பெயர்ந்து சென்ற இலங்கைத் தமிழர் இன்று வாழ்கின்ற ஐரோப்பிய நாடுகளில் கூட இந்த இலம்பாட்டுத் தமிழரை மதம் மாற்றும் முயற்சி பெருமளவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. நான் முன்னே குறிப்பிட்டது போல, இதையிட்டு நாம் கிலேசம் கொள்ளத் தேவையில்லை. ஆனால் ஏன் எந்தமிழர் இவ்வாறு மதம் மாறுகின்றார்கள் என்பதை எண்ணிப் பார்ப்பது நல்லது. காரணங்களைக் கண்டுபிடிப்பது நல்லது. ஏனென்றால் மதமாற்றம் என்பது சமுதாயத்தைப் பீடித்திருக்கும் ஒரு நோயின் அறிகுறி. அறிகுறியைக் காண்கின்ற நாங்கள் *"நோய்நாடி முதல் நாடி அது தணிக்கும் வாய்நாடி வாய்ப்பச் செயல்"* வேண்டும் என்று வள்ளுவன் விளம்பியுள்ளதை எண்ணிப்பார்க்க வேண்டும். வெளிநாட்டில் தஞ்சம் புகுந்துள்ள தமிழரை இப்போது பீடித்து வரும் மதமாற்ற நோயின் காரணத்தை அறிய முயல வேண்டும்.

எந்தச் சமயம் மெய்ச் சமயம் என்ற போராட்டம் வேத காலத்தில் மட்டுமல்ல அவ்வையின் காலத்திலும்



நடைபெற்றிருப்பதாகத் தெரிகின்றது. மெய்ச்சமயம் பொய்ச் சமயம் என்று ஒன்றுமில்லை. எல்லாச் சமயங்களும் ஒழுக்கத்தையே போதிக்கின்றன என்பதை உணர்ந்த அவ்வையார், அவருடைய நாட்களில் வேதம் பெரிதா, வேதாந்தம் பெரிதா, சித்தாந்தம் பெரிதா, தேவாரம் பெரிதா, திருக்குறள் பெரிதா என்று பேதித்து நின்றவர்களைப் பார்த்துப் பின்வருமாறு கூறினாள்:

*தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்*
*மூவர் தமிழும் முனிமொழியும் - கோவை*
*திருவாசகமும் திருமூலர் சொல்லும்*
*ஒருவாசகம் என்றுணர் - **(நல்வழி - 40)***

அவள் சொன்னாள் :- எல்லாச் சமயமும் ஒன்றைத்தான் சொல்கின்றன. ஆனால் வெவ்வேறு விதமாகச் சொல்கின்றன. திருமூல நாயனார் திருமந்திரத்தில் ஒரு வாசகத்தில் அடக்கிச் சொன்ன விடயங்களையே எல்லா நூல்களும் வெவ்வேறு முறையில் சொல்கின்றன. அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார். அன்பு என்பதும் சிவம் என்பதும் ஒன்றுதான். இதைத்தான் எல்லாச் சமயங்களும் சொல்கின்றன. வேதங்களை விளக்கும் வேதாந்தங்களாகிய உபநிடதங்களும், சைவ சித்தாந்தத்தை விளக்குகின்ற தேவார திருவாசங்களும், திருவள்ளுவர் கூறுகின்ற திருக்குறளும், மணிவாசகரின் திருக்கோவையார் விரிக்கின்ற தத்துவமும் ஒன்றுதான்.

ஆதலால் இந்தத் தரிசனம் தான் சரி, உந்தத் தரிசனம் பிழை என்று பிணங்க வேண்டாம்; அன்பு செய்யுங்கள்;

சிவனிடமும் சீவனிடமும் அன்பு செய்யுங்கள்; ''என்னை நன்றாக இறைவன் படைத்தனன் தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே'' என்ற திருமூலனை எண்ணி மதப் பிரசாரங்களையும் மதமாற்றங்களையும் தவிருங்கள் என்கிறாள் உலகியல் உணர்ந்த அவ்வை.

★

# 28
# திருந்த மாட்டோமா?

சில வருடங்களுக்கு முன்னர் வெம்பிளியில் ஒரு கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற வழக்கறிஞர் நண்பனின் திருமண விழாவுக்குச் சென்றிருந்தேன். நண்பன் நல்லவன் என்பதோடு நட்பைப் பெறவும் பேணவும் தெரிந்தவன். அவனுடைய தந்தையார் ஒரு தமிழறிஞன், தண்ணளி கொண்டவன். ஆகவே கல்யாண மண்டபம் நிரம்பி வழிந்தது; ''எள் போட இடமில்லாமல் இருந்தது'' என்பார்களே அப்படி. அப்படி ஒரு கூட்டத்தை இலண்டனில் நான் பார்த்த திருமணங்களில் கண்டதில்லை. அங்கு வந்திருந்த பலரும் அப்படித்தான் சொன்னார்கள். அறுகரிசி தூவி வாழ்த்தப் புறப்பட்ட கூட்டம், மலைப்பாம்பு என வளைந்து வளைந்து நுழைந்து கிளைத்து வழிந்தது. வாழ்த்தி விட்டுச் சாப்பாடு பெற என விரைந்த கூட்டத்தில் நானும் என் மனைவியும் நின்றோம்; கால்கடுக்க நின்றோம். பரிமாறியவர்கள் ஓயாமல் பரிமாறிக் கொண்டே நின்றார்கள். ஆனால் நாம் நின்ற வரிசை நகரவில்லை. எட்டிப் பார்த்தேன். கடலை நோக்கியோடும் கிளைநதிகள் போல வேறுபல வரிசைகள் தோற்றம் கொள்ளக் கண்டேன். சிறிது நேரத்தில் எனது வரிசையில் நெருக்கம் அதிகரித்தது. முன்னேற வேண்டிய நாம், பின்நோக்கித் தள்ளப்படுதலை உணர்ந்தேன். புற்றளைப் பிள்ளையார் கோவிலில் அன்ன தானத்தின் போது பூசைச் சோறு வாங்கப்போய் ஆங்கிலமொழி

ஆசிரியர் வைரமுத்து வாத்தியாரிடம் அடிவாங்கியும் பேச்சு வாங்கியும் வெட்கப்பட்ட நாட்கள் நினைவுக்கு வந்தன! நெருக்கடியையும் நேரக் கணக்கத்தையும் தாக்குப் பிடிக்க மாட்டாதவராய்ப் பின் வாங்கினோம். ''சாப்பிட்டு விட்டோம்'' என்று மாப்பிள்ளை வீட்டாருக்குப் பொய்ச் சாக்குச் சொல்லி விட்டு, விடை பெற்றுப் புறப்பட்டோம். வீடு திரும்பிக் கொண்டிருந்த போது, சாப்பாட்டு வரிசையில் நின்ற நேரத்தில் நாம் பட்ட அனுபவத்தைப் பற்றிப் பேசிக் கொண்டு வந்தோம். அந்த அனுபவத்தை நினைத்தபோது அவ்வையின் பாடல் ஒன்று நினைவுக்கு வந்தது.

*வண்டமிழைத் தேர்ந்த வழுதி கலியாணத்து*
*உண்ட பெருக்கம் உரைக்கக் கேள் - அண்டி*
*நெருக்குண்டேன் தள்ளுண்டேன் நீள் பசியினாலே*
*சுருக்குண்டேன் சோறு உண்டிலேன். -* **(தனிப்பாடல்)**

தமிழ் வளர்த்துப் பெருமை சேர்த்த வழுதி என்ற பாண்டிய மன்னன் அவ்வைக்கு நண்பன். அவனுடைய திருமணத்தைக் காண என அவ்வையும் போயிருந்தாள். திருமணத்தில் கூட்டம் நிரம்பி நிறைந்தது. திருமணம் நிறைவேறியதும் கல்யாணச் சாப்பாடு சாப்பிட என விருந்தினர்கள் அழைக்கப் பட்டார்கள். அவ்வையும் சென்றாள். இருந்து சாப்பிட இடமில்லாமல் போயிற்று. ஆகவே இன்று இலண்டனில் நிலவும் நிலைமை போலத் தட்டை ஏந்திக் கொண்டு வரிசையில் நிற்கவேண்டிய நிலை வயோதிப அவ்வைக்கும் ஏற்பட்டது. ஒரு கையில் கைத்தடியும், மறுகையில் வாழைத்



தடலுமாக அவ்வையும் நின்றாள்; பல நிமிடங்கள் நின்றாள். முன்னால் நின்றவர்கள் பின்னுக்குத் தள்ளினார்கள். பின்னால் நின்றவர்கள் முன்னுக்குத் தள்ளினார்கள். இடையில் வந்து சிலர் ஒட்டகம் போல் நுழைந்தார்கள். அவ்வைக்கு வேர்த்துக் கொட்டியது. வெளியேற எண்ணினாள். நண்பனின் அழைப்பில் கல்யாணத்துக்கு வந்து விட்டுச் சோறு உண்ணாமல் போனால் பாண்டியன் கவலைப்படுவானே என்று கலங்கினாள். பொறுத்துப் பார்த்தாள். வரிசையில் நிற்கும் ஒழுங்கு முறை முறிந்தது. எல்லோரும் முண்டியடித்துக் கொண்டு வந்தார்கள். அவ்வையாரின் கைத்தடியும் கை நழுவியது. கைத்தடியை எடுக்க முயன்று காலால் மிதிபட்டு வருந்த அவள் விரும்பவில்லை. எனவே அரிதின் முயன்று சாப்பாட்டு வரிசையிலிருந்து நீங்கிச் சனநெருக்கடி இல்லாத ஓர் இடத்தில் போய் அமர்ந்தாள். அப்படி அமர்ந்திருக்கும்போது பாண்டியனின் அதிகாரிகளில் ஒருவன் அவ்வையிடம் போய் ''அவ்வைப்பாட்டி! சோறு சாப்பிட்டு ஆயிற்றா?'' என்றான். அவ்வைக்குக் கோபம் வரவில்லை, நல்ல ஒரு கவிதை வந்தது. அழகிய தமிழைக் கற்று வல்லனான வழுதியின் கல்யாணச் சாப்பாட்டைச் சாப்பிட்டு விட்டேனா என்று கேட்கின்ற அதிகாரியே! எப்படி எப்படி எல்லாம் உண்டேன் என்பதைச் சொல்கின்றேன் கேள். சாப்பாட்டு வரிசையில் நின்றவர்கள் நெருக்கியதால் நெருக்கு உண்டேன்; முன்னும் பின்னும் அவர்கள் தள்ளியதால் தள்ளுண்டேன்; பெரும் குடல் சிறு குடலைத் தின்னும் அளவுக்குப் பசி எடுத்ததால் வயிற்றில் சுருக்கு உண்டேன்; ஆனால் வரிசையில் நெடு

நேரம் நிற்க முடியாமையால் சோறு உண்ணவில்லை'' என்று மறுமொழி சொன்னாள்.

வரிசையில் நின்று பிளாஸ்ரிக் தட்டேந்தி விருந்து உண்ணும் வழக்கம் இலண்டன் தமிழரிடையேதான் இருக்கிறது என்று சிலர் எண்ணக் கூடும். ஆனால் அவ்வையின் காலத்திலேயே இருந்திருக்கிறது என்பதற்கு மேற்படி பாடல் சான்றாக உள்ளது. ஆனாலும் விருந்துக்கு அழைக்கப்பட்டோரைத் தட்டேந்தி நிற்கச் செய்யும் பழக்கம் வரவேற்கக் கூடியதா?

★

# 29

# உத்தமரும் அதமரும்

*சொல்லாமலே செய்வர் பெரியர் சொல்லிச் செய்வார் சிறியர்*

*சொல்லியும் செய்யார் கயவரே - நல்ல*

*குலா மாலை வேற்கண்ணாய்! கூறுவமை நாடில்*

*பலா மாவைப் பாதிரியைப் பார் - **(அவ்வை தனிப்பாடல்)***

இயற்கையோடு இசைந்த வாழ்வு பழந்தமிழர்க்கு வாய்த்திருந்தது. இதனால் இயற்கையைத் தமிழர் நன்கு அறிந்திருந்தனர். நிலத்தை ஐந்தாகப் பாகுபாடு செய்து குறிஞ்சி என்றும், மருதம் என்றும், முல்லை என்றும், நெய்தல் என்றும், பாலை என்றும் பெயர் கொடுத்து அந்த அந்த நிலத்திற்குரிய தாவரங்கள் என்ன, விலங்குகள் என்ன, இராகம் என்ன, பறை என்ன, திணை என்ன, ஒழுக்கம் என்ன என்று பட்டியல் தயாரிக்கும் அளவுக்கு அவர்களுடைய இயற்கை அறிவு செறிந்து இருந்தது. இந்தச் செறிவான அறிவினால் மனிதருடைய குணத்துக்கும் செயல்களுக்கும் ஒப்புமை கூற நேர்ந்தபோது அவற்றுக்கு உதாரணங்களாக மரங்களையும் விலங்குகளையும் அவர்களால் கூற முடிந்தது அப்படியான ஓர் ஒப்புமையை மேற்படி அவ்வையின் பாடலில் காண்கின்றோம்.

கண்ணிற்கு அணிகலம் கண்ணோட்டம் என்று வள்ளுவன் சொன்னான். கண்ணுக்கு மைதீட்டுவது அணி

என்று நாங்கள் நினைக்கின்றோம். மற்றோரின் துன்பத்தைக் கண்டபோது துடித்துத் துன்பப்படுபவர்க்காக இரக்கப்பட்டுத் தன்னால் இயன்றதைச் செய்யும் பண்பாகிய கண்ணோட்டம் தான் கண்களுக்கு அணி என்று பொய்யா மொழிப் புலவர் சொன்னார். பொய்யா மொழியார் பொய்யாமல் சொன்னதை, அவ்வையார் மெய்யாக விளக்கிச் சொல்கின்றார். உள்ளத்தால் உயர்ந்தவர்களாகிய பெரியவர்கள் மற்றோர் படும் துன்பத்தைச் சகிக்க மாட்டார்கள். மற்றவர்கள் நினைப்பூட்டும் வரையும் காத்திருக்க மாட்டார்கள். மற்றவர்கள் சொல்லாமலே முண்டியடித்துப் போய் வலியச் சென்று உதவி செய்வார்கள். இந்த வகையினர் முதற்றரமான மனிதர்; பண்புடைய சீவன்கள் இவர்கள்; கண்ணோட்டம் என்ற சீரிய அழகு இந்தச் சீவன்களிடம் இருப்பதால்தான் இந்த உலகமே இயங்கிக் கொண்டிருக்கிறது. இந்தப் பண்பாளர்கள் இல்லாவிட்டால் இந்த உலகம் எப்போதோ மண்ணுக்குள் மூழ்கி மறைந்து விடும் என்று திருவள்ளுவர் சொல்கின்றார்.

இந்தப் பெருமகான்களுக்கு அடுத்தபடியில், இன்னொரு வகையினர் இருக்கின்றார்கள். இவர்கள் கண்ணோட்டம் நிறைந்த பண்பாளர்கள் அல்லர். மற்றோரின் துன்பம் கண்டு பரிந்து உருகும் பண்பு இவர்களிடம் இல்லையாயினும், பண்பு நிறைந்த மற்றையோர் இடித்துச் சொல்லி வற்புறுத்தினால் இவர்கள் உதவி செய்ய முன் வருவார்கள். இவர்களைப் பெரியர் என்றோ நல்லோர் என்றோ அழைக்க முடியாது என்கிறாள் அவ்வையார். சொன்னால் செய்யும் குணம் இவர்களிடம் இருப்பினும் இவர்கள் சிறியரே; ஆகவே இவர்கள் அவ்வையின் கண்ணில் சிறியர் என்ற வரிசையில் அடங்குவர்.



மூன்றாவது படியிலும் ஒரு வகையினர் இருக்கிறார்கள்; இவர்கள் அதமர்கள். இவர்களின் செவியில் எதுவும் ஏறாது. இரக்கம் என்ற சொல்லை இவர்கள் அறியாதவர்கள். எவ்வளவைச் சொன்னாலும் எப்படிச் சொன்னாலும் இவர்களுடைய இதயம் இளகாது. இந்தக் கூட்டத்தினர் கயவர் எனப்படுவர் என்று சொல்கிறாள் அவ்வை. கரும்பைப் போலக் கசக்கிப் பிழிந்தாலன்றிச் சமூகத்துக்குப் பயன்பட மாட்டாத கீழோர் என்று வள்ளுவன் சொல்லும் கூட்டத்தினர்தான் அவ்வையார் கூறுகின்ற இந்தக் கயவர்கள்.

இந்த மூன்று பிரிவினரில் மூத்த பிரிவினராகிய பெரியவர்களைப் பலாமரத்துக்கு ஒப்பாகச் சொல்கிறாள் அவ்வை. பலாப்பழ மரத்துக்கும் இந்தப் பெரியவர்களுக்கும் இடையிலான பொதுப் பண்பு என்ன? பலாமரம், மற்ற மரங்கள் போல மொட்டு விட்டுப், பூத்து, பிஞ்சு விட்டுக் காய்ப்பதில்லை. அது பூப்பதுவும், பிஞ்சு விடுவதும் எமக்குத் தெரிவதில்லை. திடீரென ஒருநாள் அதன் காய்கள் எமது கண்ணுக்குப் படுகின்றன. இவ்வாறுதான் இந்தப் பெரியவர்களும், அடுக்கெடுத்து ஆலவட்டம் காட்டி, விளம்பரம் செய்து கொண்டிராமல் வேண்டிய உதவியை, உற்ற இடத்தில் உதவி விடுகிறார்கள். சொல்லப் பயன்படுகின்ற சிறியர் எனப்பட்ட பிரிவினரை அவ்வையார் மாமரத்துக்கு ஒப்பிட்டுக் கூறுகின்றார். மாமரம் திடீரெனப் பயன் தருவதில்லை. தாமதித்துத்தான் பயன்தரும்; அதாவது பூத்து, மகரந்தம் சேர்த்து, பிஞ்சாகிக், காயாகித்தான் நமக்குப் பயன்தரும். இவ்வாறு, பயன்தருவதற்குத் தாமதிக்கின்ற மக்களைச் சிறியர் என்கிறாள் அவ்வை.

எவருக்கும் எஞ்ஞான்றும் பயன்படாத கூட்டத்தினராகிய கயவரைப் பாதிரி மரத்தோடு ஒப்பிடுகிறாள். பாதிரி மரம் ஒருகாலும் காய்ப்பதில்லை; பாதிரி மரம் பூக்கும்; பெயருக்குப் பூப்போல் இருக்கும்; ஆனால் ஒரு சில நாட்களில் எல்லாப் பூக்களும் உதிர்ந்து கொட்டுண்டு விடும்; காய்க்க இடமே இருக்காது. இப்படித் தமக்கென்றே வாழ்வதைத் தவிர மற்றவர்களும் இருக்கின்றார்களே என்று எண்ணிப் பாராத மக்களைக் கயவர் என்று கூறிப் பாதிரி மரத்தோடு ஒப்பிடுகிறாள் அவ்வை.

பிறந்த புலத்திலிருந்து இடம் பெயர்ந்து வந்து, விட்டுவிட்டு வந்த உற்றார் உறவினரை விட வசதியான நிலையில் வாழ்கின்ற ஈழத் தமிழர்களாகிய நாம், அவ்வையின் இந்த வெண்பாவைப் பாடிப் பார்ப்பது நல்லது. நாங்கள் பலாமரமா? மாமரமா? பாதிரி மரமா? அல்லது உளுத்துப் போன மரங்களா? சிந்திப்போமா?

★

# 30

# இன்றினை இனிது வாழ்வோம்

எங்கோ ஒரு கோடியில் பிறந்த ஈழத்தமிழினம், இன்று, இங்கிலாந்திலும், ஐரோப்பாவிலும் எங்கே போகிறோம் எதை நோக்கிப் போகிறோம் என்று புரியாமல் நாட்களைக் கடத்திக் கொண்டிருக்கிறது; மேற்குலகில் அவர்கள் வாழ்கிறார்கள் என்று சொல்ல முடியவில்லை. போவிப்பம் என்று அவ்வை சொன்னதுபோல நாட்களைக் கடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்று சொல்வதே பொருத்தமாகப் படுகின்றது. குறிக் கோளற்ற, நிம்மதியற்ற, நிலைபரமற்ற, ஏக்கம் நிறைந்த சீவியத்தை அப்படிச் சொல்வதுதான் முறையென்றும் தோன்றுகின்றது. நாளையோ மறுநாளோ தனித்தமிழ் ஈழநாடு கிடைத்துத் தமிழீழத்துக்குப் போகக்கூடிய நிலைமை ஏற்பட்டால், இன்று இங்கே இங்கிலாந்தில் இருக்கின்ற வர்களில் எத்தனைபேர் தாய்நாட்டுக்குத் திரும்பிப் போவார் களென்று கேட்டால், விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலரைத் தவிர வேறெவரும் கையுயர்த்தக் காணோம். கையுயர்த்த முடியாமல் இருப்பதற்குக் காரணங்கள் பல இருக்கலாம். ஆனால் கையுயர்த்திக் குதூகலிப்பார் ஒருவரையும் காணோம். அப்படியானால் மேற்குலக வாழ்க்கையை விரும்பி யேற்று மகிழ்கிறார்களா என்று கேட்டால், அதற்கும் மறுமொழி காணோம். இங்கே, நாகரிகத்தின் நுனிக்கொம்பரில் நின்றபடி நிருத்தம் ஆடுகின்ற மக்கள் மலிந்துள்ள இங்கிலாந்தில் சீவிக்கின்ற நம்மினத்தார் நிறைவாழ்வு வாழ்கின்றார்களா

என்று கேட்டால் அதற்கும் ஆம் என்று பதிலளிப்பார் ஆரும் இல்லை. ''கூழுக்கு உப்பில்லை என்பார்க்கும் பாலுக்குச் சக்கரை இல்லை என்பார்க்கும் கவலை ஒன்றே'' என்பது உண்மையானாலும், கவலையையும் களிப்பையும் ஒப்பிட்டுப் பார்க்கின்றபோது களிப்பே மிகுதி என்று கூறுவாரைக்காணல் அரிதாகவே உள்ளது.

உடுத்த உடையோடும், தூக்கிய தூக்குப்பெட்டியோடும் புறப்பட்டு, வழிவழியே கெட்டித்தனமாகவும் சாதுரியமாகவும் பேசி, இந்த நாட்டுக்குள், அகதி என்று கூறிப் புகுந்துவிட்ட நாங்கள், அன்று யாழ்ப்பாணத்தில் எப்படி ஒறுத்து வாழ்ந்தோமோ அப்படியே இங்கேயும் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். அங்கே யாழ்ப்பாணத்திலும், மட்டக்களப்பிலும், மன்னாரிலும், திருமலையிலும் வாழ்ந்த காலத்தில் ''நாளை''யைக் கனவுகண்டு ''இன்றை'' என்ற அன்றாட இன்பங்களையும், சுகமகிழ்வுகளையும் அனுபவிக்காமல் அலமந்து அலைக்கழிந்தது போலவே இங்கேயும், ஒருநாளும் வாராத ''நாளை''யைக் கனவுகண்டு ''இன்றை''யை இழந்தவண்ணம் இருந்து வருகின்றோம். உடனலமும் உளநலமும் மேம்படுவதற்கான முறையிலே வாழாமல், தானும் வாழ்ந்து மற்றவர்களையும் வாழ்விக்க முயலாமல், சுற்றத்தோடு சூழவிருந்து சுற்றத்துக்கு அழகு தேடாமல், வட்டிக்குக் கொடுத்து வங்கிக் கணக்கைப் பெருக்குவதையே தொழிலாகக் கொண்டுவருகின்றோம். மாட்டுக்கு ஒரு சூடு, நற்பெண்டாட்டிக்கு ஒரு வார்த்தை என்பது பழமொழி. ஆனால் ஈழத்தமிழினம் அந்தப் பழமொழியைப் புரிந்து கொண்டதாகக் காணோம். பதினைந்து ஆண்டுகள் இன்னும் ஆகவில்லையே சிங்களச் ''சிறிசுகள்''



எமது உடன்பிறப்புக்களைச் சித்திரவதை செய்து சீரழித்த நாளிலிருந்து! ஆடி 1983இல் இருந்து இன்னும் பதினைந்து ஆண்டுகள் கழியவில்லையே! அதற்கிடையில் இவ்வளவு மறதியா? நாற்சதுர வீடுகளும், நாகிளம் கமுகுகளும், தேன்பிலிற்றும் பலாமரமும், அணிலாடும் மாதுளையும், குலைதள்ளும் வாழைகளும், செவ்விளநீர்த் தென்னைகளும் என்று வாழ்நாள் முழுக்கச் சிறுகச் சேர்த்துப் பெருகக்குவித்த சொத்துக்களையும் அணிமணி ஆபரணங்களையும் அப்படியே அங்கங்கே விட்டுவிட்டு, ஆர்ஆர்க்குக் கடன் கொடுத்தோம் என்ற விவரங்களையும் மறந்து விட்டு, உயிரை மட்டும் உள்ளங்கையில் பிடித்துக்கொண்டு ஓட்டமும் நடையுமாய் வந்த நாங்கள், அந்த அநியாய அனுபவத்தை மறந்து, இங்கேயும், பழையபடி, நாமும் துய்க்காமல், நமருக்கும் உதவாமல் வரண்ட வாழ்வு வாழ்வதா? அங்கே, நாளைக் கென்று சேர்த்து வைத்துவிட்டு வந்த பொருள் எங்கே? பண்டங்கள் எங்கே? வீடெங்கே வளவெங்கே? வண்ண வண்ணக் குடங்கள் எங்கே? வனப்புடைய செம்பெங்கே? அவற்றை இப்போது யார் அனுபவிக்கின்றார்கள்? இந்திய அமைதிப்படைக்காரரும் சிங்களச் சிப்பாயும், எடுத்தவை போக, எஞ்சியவற்றை முன்பின்தெரியாத, எவ்வகையிலும் உறவினரல்லாத யார்யாரோ எல்லாம் அனுபவிக்கின்றார்களே! ஓமந்தை முதிரைமரம், மாங்குளத்துப் பாலைமரம், ஒட்டு சுட்டான் வேப்பமரம், மலாய்நாட்டின் தேக்குமரம் ஆகிய மரங்களின் பலகைகளால் செய்த கதவுகளும், யன்னல்களும் அலுமாரிகளும் கறையானின் பசிக்கன்றோ உதவுகின்றன! இது நமக்குத் தெரியாதவை அல்லவே! அறிந்தறிந்தும், இங்கே

வந்தபின்னரும், ''பழையகுருடி கதவைத் திறவடி'' என்ற பாங்கில் நடந்துகொள்வதா? சொந்த அனுபவத்திலிருந்து கற்றுக்கொள்ள முடியாவிட்டாலும் அனுபவசாலியான அவ்வையாரின் பாடல் தரும் செய்தியிலிருந்து தெரிந்து கொள்ள முடியாதா? அவ்வை சொன்னதும் மறந்து போயிற்றா?

*பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்து வைத்த*
*கேடுகெட்ட மானிடரே கேளுங்கள் கூடுவிட்டிங்கு*
*ஆவிதான் போயின பின்பு ஆரே அனுபவிப்பர்*
*பாவிகாள் அந்தப் பணம் - **(நல்வழி - 22)***

ஆவிபோனபின் ஆரோ அனுபவிக்கப்போகின்ற எமது பொருள் பண்டம் பற்றித்தான் அவ்வை பாடினாள். ஈழத் தமிழரைப் பொறுத்தவரையில் ஆவிபோகுமுன், ஆங்கில நாட்டில் அகதிகளாக, உயிரோடிருக்கின்ற போதிலல்லவா தமிழீழத்திலே, சீட்டுப்பிடித்தும், சீதனத்துக்கென்று சேர்த்தும் வைத்திருந்த பணத்தையும் படாடோப வீடுகளையும், ''கறையான் புற்றெடுக்கப் பாம்பு குடியிருக்க'' என்ற முறையில் யாரோ அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இலங்கையில் நமக்கு அன்று ஏற்பட்ட கதி, அதே அவல நிலை, இங்கிலாந்தில் இருக்கின்ற நமக்கு ஏற்படாது என்பதற்கு என்ன உத்தரவாதம்? இதை உணர்ந்தால் அவ்வை கூறிய பாட்டின் பொருள் புரியும்; ''இன்றினை'' நன்றாக வாழவேண்டியதன் அவசியமும் உண்மையும் புரியும். ஆகவே நாளையைப்பற்றி அதிகம் அலட்டிக்கொள்ளாமல் இன்றினை இனிதாக வாழ்ந்து இட்டுண்டிருப்போம்!

★

# TRANSLATION OF THE VERSES TREATED IN THIS BOOK

**(எடுத்தாண்ட பாடல்களும் அவற்றுக்கான ஆங்கில மொழி பெயர்ப்பும்)**

1. **உடன்பிறந்தார் சுற்றத்தார் என்றிருக்க வேண்டா**
   (Page 33)

Don't be labouring under the delusion that blood is thicker than water and that your kith and kin will always come to your aid. That your brothers were born from the same womb is no consideration for there are many congenital diseases that are born with you and remain with you only to kill you. On the contrary strangers may be found to be your lifesavers, like the medicinal herbs that grow in far off places never heard of.

2. **செய்தீவினையிருக்கத் தெய்வத்தை நொந்தக்கால்**
   (Page 36)

What is the point in blaming the gods when your present plight is a direct consequence of your past deeds and sins? Unless in the days gone by, you have done good deeds so that your sins could be purged off, how could you expect to reap good harvest? How can you expect the empty pot to boil over without your having put something into it in the past?

3. ஆனமுதலில் அதிகம் செலவானால் (Page 40)

Please mark this. Cut your coat according to the cloth from the very start. If you don't contain your expenses within your income, you will lose your honour and your sense of discretion will disappear and you will be condemned a liar and thief wherever you turn. Such a reckless life will keep you a bad being in all your births. Even the best of people will hate to associate with you.

4. அட்டாலும் பால் சுவையில் குன்றாது (Page 44)

The taste of cow's milk will not diminish even when it is reduced by heat to eighth of its original amount. The great people remain great even when they have fallen on hard days. The whiteness of the chank increases the more it is burnt. But those that are not of friendly nature will never make friends however one may try.

5. வான்குருவியின் கூடு (Page 49)

Don't vaunt that you are great and that you can do that and this. Everyone is great in his own way in one way or the other. Haven't you seen the nest of a swallow or the graceful lac or the wonderful structure constructed by the white ant or the delicate web of the spider? Can any one imitate any of them? No body can. The truth is that nobody is good in everything.



6. சந்தன மென்குறடு தான் தேய்ந்த காலத்தும் (Page 52)

However badly a sandal wood slab might have got worn off, it still loses not its sweet fragrance, which is its attribute. Likewise just kings might be reduced to poverty by circumstances; but the greatness of their virtues will never diminish as a consequence.

7. ஈதல் அறம் தீவினை விட்டு ஈட்டல் பொருள் (Page 56)

Aram, Porul, Inpam and Veedu are the four great things one should seek after. Relief of distress and pain is Aram or virtue. What is acquired in a virtuous way is the real wealth or Porul. The mutual and self - effacing love that exists between a man and woman is Inpam or love. When one is prepared to give everything for the benefit of the world at large, release comes to him automatically.

8. நல்லாரைக் காண்பதுவும் நன்றே (Page 57)

It is good to know and move with good people. Also it is good to heed to the advice of honourable people. It does one good to remember and extol the great qualities of commendable personalities. It is always to the advantage of a person not to antagonise virtuous people.

9. வருந்தி அழைத்தாலும் வாராத வாரா (Page 60)

Implore and importune as much as you can! That which you are not fated to get, you will never get; on the other

hand, howsoever you may reject it, that which you are destined to get, you will get somehow. Little realising this, we ordinary mortals worry and pine at length until our heart becomes sore that things are not happening the way we desire.

### 10. உள்ளது ஒழிய ஒருவர்க்கு ஒருவர் (Page 64)

As far as mortals are concerned, they cannot enjoy even a bit more than what they have been ordained to experience according to their balance sheet of sins and merits. One might try to move heaven and earth to change what have been ordained; one might travel through the oceans and territories in search of pleasures and fortunes. The stark truth is that you cannot enjoy more than what has been ladled out to you based on your record of meritorious acts and sinful acts.

### 11. கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும் (Page 67)

Have you known a real tree? You may think that it is those colossal trees with extending bifurcating branches in the forest that are real trees. No; it is not so. Real trees are among human beings. Those unlettered people who have not the least desire to learn and consequently are not able to benefit from any written material that is produced before them are the real trees.

### 12. வெட்டனவை மெத்தனவை வெல்லாவாம் (Page 71)

It is generally believed that those that are hard are capable of defeating the soft; that violence is more powerful



than pacifism. But, then, that is not true. For instance a steel arrow that is capable of piercing the hard skin of an elephant fails to pierce through a soft pack of tender cotton wool. Likewise a rock that defies any attempt by a crowbar to break it gives way when the radicle of a tiny seed begins to strike root in a crevice on the same rock.

### 13. நூலெனிலோ கோல் சாயும் (Page 73)

If a brahmin is elected as the king of a country, the kingdom will fail soon; if a person from a warrior caste (shattriya) is made the king of a country he will plunge the country in never ending wars. If a person from the business class is appointed as the king, then the citizens will die of hunger.

On the other hand if a person from the agriculture community is chosen as the king, then he as the person who knows the pulse of the ordinary people, will prove to be a good king, good minister and good adviser. It is the administration, of which an ordinary person is the king, that is ideal and desirable.

### 14. உற்ற இடத்தில் உயிர் வழங்கும் தன்மையோர் (Page 77)

Not all men are brave. There are certain people who are ever ready to give their life should the need arise; they are men of valour. Such people will not surrender or give in when confronted by their enemies; instead they will readily

fight the enemy and lose their life to save their sense of honour. A pillar of concrete never bends. If it is overloaded and strained beyond measure, it may crack or break, but will never curve or bend.

15. அற்றதலை போக அறாததலை நான்கினையும் (Page 79)

What a big fool Brahma must be! If only I could get hold of Brahma the creator who matrimonially joined together this nice and beautiful girl to that uncultured and uncouth lad, I would pluck his remaining four heads and fling them away the same way the first one was decapitated by Lord Shiva.

16. சேவித்தும் சென்றிரந்தும் (Page 81)

If you think about, it is only for a plate of food that all humans are toiling and moiling. Be it sub-serving, begging, going overseas, pretending to be great people, ruling over or giving musical recitals, we do this only to pass the day, unable to bear the hunger and thirst caused by the wretched gut.

17. ஙப்போல் வளை (Page 87)

Protect those that belong to your cohort like the letter "ங்" (Ng) in the Tamil alphabet. Of the thirteen letters in the "ங" series, only the consonant "ங்" is used for writing purposes. Other letters such as ங, ஙா, ஙி, etc, are useless letters. Still they find a place and recognition in the Tamil



alphabet of 247 letters. It is because of the one and the only letter "ங்" that the other twelve are able to survive. In other words it is "ங்" which gives life and sustains the rest. Likewise in a community, it is the duty of those who are of some consequence to protect others who may be of no use either to themselves or others.

18. இன்னா, இளமை, வறுமை வந்து எய்தியக்கால் (Page 92)

It is intolerable and painful for one to experience poverty when one is young. It is equally painful for one to be endowed with pleasurable things when one is old. A flower that blossoms at a time when no one finds a need for it is worthless; likewise the beauty of a lass will be worthless if there is no husband to enjoy that beauty.

19. பிச்சைக்கு மூத்த குடிவாழ்க்கை பேசுங்கால் (Page 94)

Life of a beggar is despicable. If there is a life which is more despicable than begging, it is the act of living off on the efforts of others, without making any effort at all. It is really disgraceful to lead such a life of ease and ignominy. It is better that a person commits suicide rather than eking out a shameful life for the sake of filling one's belly.

20. புண்ணியம் ஆம் பாவம் போம் (Page 96)

All religions exhort people to do well and to refrain from doing evil. It is the good deeds you did in your previous birth

that you could call as your investment in this birth. When you come to think of it, there is nothing truer than this. Therefore do not sin, but do well.

21. சாதி இரண்டொழிய வேறில்லை (Page 99)

If you come to think of it, there are only two castes in the world; one is the upper caste and the other is the lower caste. Those that tread the path of rectitude and righteousness belong to the upper caste; those that are not able to conduct themselves steadfastly on the track of just and fair moral rectitude belong to the lower caste.

22. வழக்குடையான் நிற்ப வலியானைக் கூடி (Page 103)

He who chums up with the unfair defendant in a case while the poor innocent plaintiff stands alone and uncared for, and ensures the victory of the unfair defendant, will die issueless pursued by the tears of the defeated plaintiff and his people.

23. பெற்றார் பிறந்தார் பெருநாட்டார் பேருலகில் (Page 106)

The unscrupulous won't care whether the persons who ask for their help are their parents, brothers, sisters, compatriots, relatives or friends; they will not help them even if they entreat them to assist them in a polite manner. If you threaten them with harm, then they will come forward to help. This is the way of the world.



24. பண்டு முளைப்பது அரிசியே ஆனாலும் (Page 109)

It is true that it is the rice grain that sprouts. However if the husk that surrounds the grain drops off, the grain will not be able to sprout; in fact the grain will then decay. Likewise however able and enterprising a person may be, he cannot achieve great things without the co-operation of the people around him. Let us therefore not ignore others simply because they are not as great as we think ourselves to be.

25. கற்பிளவோடு ஒப்பர் கயவர் (Page 117)

The split caused in the friendship of petty - minded people, as a result of anger is comparable to a crack caused in a rock; that split can never be mended. The split caused in the freindship of some other people in consequence of anger is like the crack that occurs on a gold bangle; such crack is capable of being joined by applying some heating or beating. But the anger of the noble ones, who tread the path of rectitude, is like the wake caused by the passage of an arrow on the water surface; the split disappears no sooner it is formed.

26. கானமயில் ஆடக் கண்டிருந்த வான்கோழி (Page 120)

The display of seeming scholarship by an unlettered person with little knowledge is like the dance performed by a wild fowl in an effort to imitate the dance of a forest peacock which is a natural dancer.

27. தேவர் குறளும் திருநான்மறை முடிவும் (Page 125)

Be it the all embracing Thirukkural, or the four Vedas, or the Upanishads or the Thevarams of the three Saiva saints or the Thirukkovayaar or the Thiruvasagam of saint Maniccavasagar, or the great sayings of the Thirumoolar, all of them say the same ultimate truth. The truth will dawn on us upon reading any one of them.

28. வண்டமிழைத் தேர்ந்த வழுதி கல்யாணத்து (Page 128)

You ask me whether I enjoyed the food at the wedding feast thrown by the king Pandya who is a great Tamil Scholar. Let me tell you how I enjoyed the feast. In the queue that sprang up I got expressed and pushed and got oppressed by hunger, but did not have a grain of rice at the feast.

29. சொல்லாமலே செய்வர் பெரியர் (Page 131)

Great are those who will do their duty without any body telling them. Ordinaries are those that will perform their duty upon reminding. Those that are third grade will not do even if you importune them to do. If these three could be compared to certain trees, you may compare the greats, the ordinaries and the third grades to a jak tree, a mango tree and a trumpet - flower tree respectively. Jak tree will bear fruit without even letting one discover that it is going to bear fruits. Mango tree will bear fruit only after advertising in the form of full flowering that it is about to bear fruits.




As for the trumpet - flower tree it makes hell of a lot of advertisement by bringing forth a lot of flowers, but none of it will bear any fruits.

30. பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்து வைத்த (Page 138)

Oh! You foolish and wretched human beings! Please listen to me. Think for a while. You toil so hard and earn so much and save them all in secret places, sacrificing all pleasures and comforts. You are not sure how long you are going to live. The moment the soul departs your savings are going to be enjoyed by unknown guys. What is the big idea of your saving if you are not going to enjoy.

# ஆசிரியரின் வேறு ஆக்கங்கள்

1. சட்டமும் தமிழும் (Law and Tamil)
2. பங்காண்மைச் சட்டம் (Law of Partnership)
3. **Ethical Essence of the Tamils** (Thirukkural Articles)
4. ஊர்க்காற்று (கவிதைத் தொகுதி) (Nostalgic Poems)
5. சட்டமும் சிரிக்கும் (Law Laughs)
6. தெரியுமா சட்டம்? (Know your law)
7. **Scenes from Tamil Classics** (To be Published soon)



## ஆக்கியோன் பற்றி...

இந்த நூலின் ஆசிரியர் சட்ட அறிஞர் பரம்பரையில் வந்தவர். மேலைப்புலோலியூர் வழக்கறிஞர் மாணிக்கம் செல்லத்தம்பியின் மகன் இவர். தசாவதானி மேலைப்புலோலியூர் கதிரவேற்பிள்ளை அவர்களின் மரபில் உதித்தவர். தமிழும் சட்டமும் துறை போகப் பயின்றவர். தென்புலோலியூர் பெரும்புலவன் கந்தமுருகேசனார், தமிழ்க்கடல் சிவன் கருணாலய பாண்டியனார், திருச்சி தூயவளவனார் கல்லூரிப் பேராசான் ஐயன்பெருமாள் கோனார் போன்ற மரபுவழித் தமிழாசான்களிடம் முறையாக எழுத்தெண்ணிக் கற்றவர். மதி நுட்பம் நூலோடுடையவர். எல்லாவற்றுக்கும் மேலாக இன்னும் தமிழ் மாணவனாகவே இருந்து வருபவர். இலங்கையில், நீதி அமைச்சில் சட்டத் தொழில் புரிந்த காலத்தில் 'சட்டமும் தமிழும்', 'பங்காண்மைச் சட்டம்' என்ற இரண்டு சட்ட நூல்களை எழுதியதோடு 'சட்டமும் சிரிக்கும்', 'தெரியுமா சட்டம்' ஆகிய கட்டுரைத் தொகுதிகளையும் செய்தித் தாள்களில் வெளியிட்டுப் பெயர் பெற்றவர்.

1985இல் இலண்டனுக்கு வந்த பின்னர் 1993 ஆம் ஆண்டில் **'Ethical Essence of the Tamils'** என்ற திருக்குறள் நூலை வெளியிட்ட இவர் இப்போது தமது தமிழ்ப் புலமையினால் அவ்வைப் பிராட்டியை உணர்ந்து கொண்டு, சட்டக் கல்வித் திறனால், கருத்துக்களை விளங்கி, விளக்கிக் கேளாரும் வேட்ட மொழிகின்றார். இலண்டனில் பிரித்தானிய அரச சட்டச் சேவையில் பெரும் பதவி வகித்த இவர், இப்போது செல்லத்தம்பி அன் சன்ஸ் என்ற பெயரில் ஒரு சொலிசிற்றர் அலுவலகத்தை அமைத்துச் சட்டத் தொழில் புரிந்து வருகிறார்.